
152
இந்திய நாடு என் வீடு!
ரூ.15

## அன்பான வாசக நெஞ்சங்களே!

**வ**ணக்கம்,

அண்மையில் நாளிதழ் ஒன்றில் திரு.பாபு புருஷோத்தமன் என்னும் கல்வியாளர் ஒருவர் கட்டுரை ஒன்றினை எழுதியிருந்தார். அதில் அவர் தெரிவித்து இருந்த ஒரு கருத்து என் மனதைத் தொட்டது.

நம்மைப் பற்றி மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால் மற்றவர்களைப் பற்றி நமக்குத் தெரியும் என்று நினைப்பது எந்த வகையில் நியாயம்? அவர் யார்... என்ன விஷயமாக வந்து இருக்கிறார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டால் நிச்சயமாக நம் கௌரவம் தாழ்ந்து போய்விடாது. அதேபோல் தோற்றத்தைப் பார்த்து ஒருவரை எடை போடுவதும் தவறு. 140 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் தலைசிறந்த ஹார்வேர்ட் பல்கலைக்கழக வரவேற்பறைத் தனியறையில் துணைவேந்தரை சந்தித்தே தீர வேண்டும் என்று பிடிவாதமாகக் காத்திருந்தது ஒரு வயோதிக ஜோடி. அவர்கள் அணிந்து இருந்த ஆடைகள் சற்று அழுக்காகவும் எளிமையாகவும் இருந்தது. துணைவேந்தரின் உதவியாளர் எரிச்சலோடு அவர்களைப் பார்த்து 'உங்களைப் போன்றவர்களை



## கோயமுத்தூரிலிருந்து :.பேக்ஸ்

(தொடர்ச்சி கடைசிப் பக்கத்தில்)

2008 152 ஸ்பெஷல்

வணக்கத்துக்குரிய வாசக தெய்வங்களுக்கு!

'நீயும் பொம்மை நானும் பொம்மை நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை' என்று சொன்ன நாவல் சொன்னபடி வராத நாவலும் பொ... பொ... பொ... பா... அண்ணே! க்காது... து...! ஏண்ணே காதை இப்படி திருகறீங்க... புரியுது. நீங்க ஏன் என் அழகான காதை திருகறீங்க என்று.

கண்டிப்பான முறையில் இந்த இதழில் நீயும் பொம்மை நானும் பொம்மை நாவல்தான் இடம் பெற்றிருக்க வேண்டும். 'ஆங்... தெரியுதில்ல... பின்ன ஏன் போடலை' என்று என் வாசக தெய்வங்களாகிய நீங்க கேட்பது எனக்கு



## எடிட்டர் ஏரியா

( 2ஆம் அட்டைத் தொடர்ச்சி)

யெல்லாம் பார்க்க துணைவேந்தருக்கு நேரமில்லை' என்று கேலியாகப் பேசியும் அந்த வயோதிக ஜோடி இருந்த இடத்தை விட்டு எழவில்லை. 'துணைவேந்தரைப் பார்க்காமல் போக மாட்டோம்' என்று பிடிவாதமாக உட்கார்ந்து விட்டார்கள். துணைவேந்தரின் உதவியாளர் வேறு வழியில்லாமல் அவர்கள் இருவரையும் வேண்டா வெறுப்பாக உள்ளே அனுப்பி வைத்தார். வயோதிக தம்பதியர் உள்ளே போய் துணைவேந்தரைப் பார்த்தார்கள். துணைவேந்தரும் அவர்களை அலட்சியமாய்ப் பார்த்தபடி கேட்டார்.

''என்ன வேண்டும் உங்களுக்கு?''

''அய்யா...! எங்களுடைய ஒரே ஒரு மகன் இங்கு படித்துக் கொண்டு இருக்கும்போது அகால மரணமடைந்து விட்டான். அவன் நினைவாக இங்கு ஏதாவது எழுப்ப வேண்டும் என்று விரும்புகிறோம்.''

துணைவேந்தர், அவர்களை ஒரு கோபப் பார்வை பார்த்தார். ''இறந்த மாணவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்கள் எழுப்ப இது என்ன சுடுகாடா...? பல்கலைக்கழகம். உங்கள் வசதிக்கு ஏற்ப கார்ப்பரேஷன் ஏற்பாடு செய்து இருக்கும் ஏதாவது ஓர் இடத்தில் நினைவுச் சின்னம் எழுப்புங்கள். போங்கள்.''

''அய்யா! நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். நாங்கள் இந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கட்டிடத்தைக் கட்டித்தர விரும்புகிறோம். நீங்கள் அதற்கு அனுமதி தர வேண்டும்.''

''என்ன விளையாடுகிறீர்களா...? ஒரு கட்டிடம் கட்ட எவ்வளவு செலவாகும் என்று உங்களுக்குத் தெரியுமா... இந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள கட்டிடங்களின் மதிப்பு ஏழரை மில்லியன் டாலர்கள். என்னுடைய நேரத்தை வீணாக்காமல் முதலில் இங்கிருந்து வெளியேறுங்கள்.''

''அய்யா...! நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்றால்...?''

**CODE No: 0811152** (தொடர்ச்சி 3ஆம் அட்டையில்)

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜீ.அசோகன். முகவரி:102, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5. ஆசிரியர் ஜீ.அசோகன். தொலைபேசி: 28544294

( கடைசிப் பக்கத் தொடர்ச்சி)

''நீங்கள் ஒன்றையும் சொல்ல வேண்டாம். நான் எதையும் கேட்கத் தயாராயில்லை... போங்கள் வெளியே...!''

துணைவேந்தரால் அவமானப்படுத்தப்பட்ட அந்த வயோதிக தம்பதிகள் வெளியே வந்தார்கள். 'ஒரு பல்கலைக்கழகம் அமைக்க ஏழரை மில்லியன் டாலர்கள் இருந்தால் போதுமா...? இவ்வளவுதான் செலவு பிடிக்குமா' என்று வியந்து அந்தப் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறி அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் அவர்களுக்குப் போட்டியாக தங்கள் மகன் பெயரில் 1885-ல் அமைக்கப்பட்டதுதான் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம். இன்று ஹார்வேர்ட் பல்கலைக்கழகம் 380 ஏக்கரில் இயங்குகிறது என்றால் ஸ்டான் போர்டு 8180 ஏக்கரில் கம்பீரமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது.

அந்த வயோதிக தம்பதியரை அன்பாக விசாரித்திருந்தால் ஹார்வேர்ட் பல்கலைக்கழகத்துக்கு ஒரு கூடுதல் கட்டிடம் கிடைத்து இருக்கும். கடுமையான போட்டியாளர் உருவாவதையும் தவிர்த்து இருக்க முடியும். எனவே தோற்றத்தால், பூதத்தால் தீர்மானிக்கப்படுகின்ற விஷயங்கள் எப்படி விஸ்வரூபம் எடுக்கிறது என்பது மட்டுமல்ல; அது ஆபத்தின் அறிகுறிகளாகவும் மாறிவிடும் என்பதற்கு மேற்கண்ட ஒரு நிகழ்ச்சியே நல்ல எடுத்துக்காட்டு. 'உருவைக் கண்டு எள்ளாதே' என்று பெரியவர்கள் சொல்லிவிட்டுப் போயிருப்பதும் இதன் அடிப்படையில்தான்!

ஓ.கே...! வாசகர்களே! ஒரு நல்ல செய்தியை மனதில் பதிய வைத்துக் கொண்டீர்கள் அல்லவா....? இனி நாவலைப் படிக்க ஆரம்பியுங்கள். படித்து விட்டு உங்களுடைய கருத்துக்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த க்ரைம் நாவல் ஸ்பெஷலில் இரண்டு அதிரடி நாவல்களோடு சந்திப்போம்.

மற்றவை அடுத்த ஃபேக்ஸில்....

மீண்டும் என் வணக்கம்.

மிக்க அன்புடன்,

**ராஜேஷ்குமார்.**

# விளக்கம் ப்ளீஸ் விவேக்!

★ இப்போதெல்லாம் 500 ரூபாய் 1000 ரூபாய் நோட்டுக்கள் சர்வசாதாரணமாய் புழக்கத்தில் உள்ளன. ரூபாய் நோட்டு கள்ளநோட்டா, நல்ல நோட்டா என்பதைக் கண்டறிவது எப்படி?

(வை. சேதுராமன், புதுக்கோட்டை)

★★ நல்ல நோட்டை அச்சடிக்க அரசாங்கம் ஒரு விசேஷ வகை காகிதத்தைப் பயன்படுத்துகிறது. நல்ல ரூபாய் நோட்டைத் தடவிப் பார்த்தால் அதில் உள்ள மேடு பள்ளங்களை நன்கு உணரலாம். ஆனால் கள்ள நோட்டு சாதாரண காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு இருக்கும். அதைத் தடவிப் பார்த்தால் மேடு பள்ளங்களை உணர முடியாது. வழுவழுவென்று இருக்கும். நல்ல நோட்டுக்களில் உள்ளது போல் எழுத்துக்களின் அச்சுக்களைத் தொட்டு உணர முடியாது. நல்ல நோட்டுக்களை அல்ட்ரா வைலட் விளக்கொளியில் வைத்தால் ஜொலிக்கும். அச்சாகியுள்ள எண்களுக்கு இடையில் சீரான இடைவெளி ஒரே அளவாய் இருக்கும். ஆனால் கள்ள நோட்டில் வரிசை எண்கள் கொஞ்சம் சிறிய அளவில் வித்தியாசமாய்த் தெரியும். எண்களுக்கு இடையே உள்ள இடைவெளியும் ஒரே அளவாய் இருக்காது. அல்ட்ரா வைலட் விளக்கொளியில் வைத்தால் ஜொலிக்காது. நல்ல ரூபாய் நோட்டில் உள்ள வெண்மையான வட்டப் பகுதியில் (அதாவது வாட்டர் மார்க் பகுதியில்) காந்தி உருவத்தைத் தெளிவாய்ப் பார்க்க முடியும். ஏனென்றால் இந்த காகிதம் தயாரிக்கப்படும்போதே அதில் காந்தி உருவம் உள்பகுதியில் தெரிவதுபோல் தயாரிக்கப்படுகிறது. இது எல்லாவற்றையும் விட



நல்ல நோட்டில் RESERVE BANK OF INDIA என்ற எழுத்துக்கள் அச்சாகியிருக்கும் இடத்துக்கு வலப்புறத்திலும், இடப்புறத்திலும் சிறிய பூக்கள் போன்ற சில வட்டங்கள் இடம் பெற்றிருக்கும். இந்த நல்ல நோட்டை ஜெராக்ஸ் எடுத்தால் இந்தப் பூக்கள் அந்தக் காகிதத்தில் விழாது. மேலும் 100, 500, 1000 ரூபாய் நோட்டுக்களில் வெள்ளிக்கோடு போன்ற பாதுகாப்பு இழை காணப்படும். இந்த வெள்ளிக்கோடு காந்தி படத்துக்கு இடது புறம் இருக்கும். அந்தக்கோடு வெளியில் பாதி தெரிந்தும், உள்ளே பாதி பொதிந்தும் இருக்கும். ஆனால் வெளிச்சத்தில் தூக்கிப் பார்த்தால் ஒரே கோடாகத் தெரியும். அந்தக் கோட்டில் 'பாரத்' என்று இந்தியிலும், RBI என்று ஆங்கிலத்திலும் மாறி மாறி அச்சடிக்கப்பட்டு இருக்கும். ஆனால் கள்ள நோட்டில் பாதுகாப்பு இழைக்குப் பதிலாக வெள்ளி நிற பெயிண்டை அச்சடித்து இருப்பார்கள். நோட்டை உற்றுப்பார்த்தால் இது புரியும்.

**போனஸ் நியூஸ்:** 20 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையில் உள்ள நோட்டுக்களின் முன்புறத்தில் காந்தி படத்துக்கு வலப்பக்கம் உள்ள செவ்வகப் பட்டையில் அந்தந்த ரூபாய் நோட்டின் மதிப்பு இலக்கம் மறைவாக அச்சடிக்கப் பட்டிருக்கும். அந்த இடத்தைக் கண்ணுக்கு நேர் எதிராக வைத்து ஒருவித கோணத்தில் பார்த்தால் அந்த மறைவான எண்களைப் பார்க்கலாம். ஆனால் கள்ள நோட்டுக்களில் இது சாத்தியமில்லை.

★ உடம்பு ஆரோக்கியமாய் இருக்க பற்களும் ஒரு காரணம் என்று சொல்லப்படுவது உண்மையா...?

(எஸ்.எம். லலிதானந்தன், வீரகேரளம்)

★★ 100% உண்மை. மனித உடலிலேயே மிகவும் அசுத்தமான இடம் எது என்றால் அது வாய்ப்பகுதி தான். இங்கு மட்டும் 700 வகையான பாக்டீரியாக்கள் உள்ளன. பற்களை ஒழுங்காகத் தேய்த்து சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை

யென்றால் பல் ஈறுகள் பாதிக்கப்பட்டு அதிலிருந்து ரத்தம் வடியும். ஈறுகளில் இருந்து ரத்தம் வடியும் நிலை ஏற்பட்டால் அதன் மூலம் அதாவது அந்த ரத்தத்தின் மூலம் தீமை தரும் பாக்டீரியாக்கள் ரத்த நாளங்களில் புகுந்துவிடும். இந்த பாக்டீரியாக்கள் உடம்பின் ரத்த ஓட்டத்தில் கலந்து பல்கிப் பெருகியதும் அவைகள் செய்கின்ற முதல் வேலை ரத்தத்தில் உள்ள 'பிளேட்லட்ஸ்' என்ற மிகச்சிறிய பொருட்களைத் தாக்குவதுதான். இந்த பிளேட்லட்ஸ்களை பாக்டீரியாக்கள் தாக்கும்போது அவை ரத்தத்துக்குள்ளே உறைய ஆரம்பிக்கின்றன. இப்படி உறையும் பிளேட்லட்ஸ்கள் ரத்தக்குழாயில் படிந்து அடைப்பை ஏற்படுத்து கின்றன. இந்த அடைப்பு அதிகமாகும்போது இருதயத்துக்கு செல்லும் ரத்தம் தடைபட்டு மாரடைப்பு ஏற்பட்டு மரணம் உண்டாகும். எனவே பற்களையும் பல் ஈறுகளையும் சுத்தமாய் வைத்து இருப்பது மிக அவசியமாகும்.

★ வீடு வாகனங்களுக்கு அடிக்கும் பெயிண்டிற்கும், விமானங்களுக்கு அடிக்கும் பெயிண்டிற்கும் வித்தியாசம் உள்ளது என்று என் நண்பன் சொல்கிறான். இது சரியா விவேக் ஸார்...?

வி. நந்தகுமாரன், பெங்களூர் கண்டோன்மெண்ட்

★★ சரிதான்! விமானத்தின் உடல்பகுதி அலுமினியம் மற்றும் பிற உலோகக் கலவையால் ஆனது. இந்த உடல்பகுதி மற்றும் இறக்கைப் பகுதியில் ஏதேனும் சிறிய கீறல், அல்லது உடைப்பு இருந்தால் அது நடுவானில் பறக்கும்போது ஆபத்தில் முடிந்துவிடும். நடுவானில் அது பறக்கும்போது அந்தக் கீறல் அல்லது உடைப்பு வழியாகக் காற்று உள்ளே புகுந்தால் அழுத்தம் அதிகமாகி நடுவானில் விமானம் வெடித்துச் சிதறும் ஆபத்து ஏற்படும். எனவேதான் விமானம் புறப்படும் முன்பு அதன் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் நன்றாக சோதனை செய்து ஏதேனும் கீறல், உடைப்பு



இருக்கிறதாவென்று பார்ப்பார்கள். இது போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க இப்போது விமானங்களில் நவீன ரக பெயிண்ட் ஒன்று உபயோகப்படுத்தப் படுகிறது. இந்த நவீன ரக பெயிண்ட்டில் வழக்கமான பெயிண்ட் கலவையோடு வண்ண மை நிரப்பப்பட்ட 'மைக்ரோ காப்ஸ்யூல்கள்' சேர்க்கப் படுகின்றன. விமானத்தில் பூசப்பட்ட இந்த பெயிண்டோடு அந்த மைக்ரோ காப்ஸ்யூல்களும் இணைந்தே இருக்கும். விமானம் பறக்கும் போது அதன் உடலிலேயோ, அல்லது இறக்கை பாகத்திலேயோ கீறல், உடைப்பு ஏற்படும்போது, அந்த பெயிண்ட்டில் இணைந்துள்ள வண்ண மைக்ரோ காப்ஸ்யூல்களும் உடைந்து வண்ணம் வெளிப்படும். இது விமானத்தில் பூசப்பட்டுள்ள பெயிண்ட்டில் இருந்து மாறுபட்ட நிறத்தில் இருக்கும். இதனால் கீறல் அல்லது உடைப்பு உள்ள இடத்தை உடனே கண்டுபிடித்துவிடலாம். இந்த நவீன ரக பெயிண்ட் முதலில் ராணுவத்தில் உள்ள விமானங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது பயணிகளின் விமானங்களிலும் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

★ தற்போது கடைகளில் உள்ள எல்லா உணவுப்பண்டங்களும், பானங்களும் பிளாஸ்டிக் பாட்டில்களில் அடைத்து வைத்து விற்கப் படுகின்றன. இது அரசு சுகாதாரத் துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றா...?

ஜே. சுதர்சன் ராஜா, ராஜபாளையம்.

★★ இது பிளாஸ்டிக் யுகம். பிளாஸ்டிக்கில் உருவாகாத பொருளே இன்றைக்கு இல்லையென்று சொல்லலாம். இனி வருங்காலத்தில் சிமெண்ட், செங்கல், மணல் இல்லாமல் பிளாஸ்டிக்காலான பொருள்களை வைத்துக்கொண்டே அபார்ட்மெண்ட்டுகளை உருவாக்கும் கட்டிடத் தொழில்நுட்பம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஒரு ரயில் கம்பார்ட்மெண்ட்டில் 100 பேர்

பயணம் செய்தால் அதில் 90 பேர்களின் கைகளில் பிளாஸ்டிக்காலான தண்ணீர் பாட்டில்கள் உள்ளன. எனவே மனித வாழ்க்கையில் பிளாஸ்டிக் ஒரு தவிர்க்க முடியாத விஷயமாகிவிட்டது. ஆனால் இந்த பிளாஸ்டிக் பாட்டில்கள் பலவேறு நோய்களை ஏற்படுத்தக் கூடியவை என்று ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது குறித்து அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற மருத்துவ கவுன்சில் ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருப்பதாவது:

**'உணவு மற்றும் குளிர்பானங்களை அடைத்து வைக்கும் பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் டப்பாக்களில் ஒருவித ரசாயனம் பூசப்படுகிறது. இந்த ரசாயனத்தின் பெயர் 'பிஸ்பினால் A' அல்லது BPA என்பதாகும். இந்த BISPHENOL-A கலவை உணவு மற்றும் பானங்களுடன் கலந்து சாப்பிடும் போது உடலில் புகுந்து ரத்தத்தில் கலக்கிறது. தொடர்ந்து இந்த பிளாஸ்டிக் டப்பாக்களில் அடைத்து வைத்த உணவை சாப்பிடுவதால் அது ரத்தத்தில் தங்கி நச்சுத் தன்மையை ஏற்படுத்துகிறது. இதனால் இருதய நோய், நீரிழிவு நோய், கல்லீரல் கோளாறுகள் போன்றவற்றை ஏற்படுத்துகின்றது.'**

★ *போதை மருந்துகளை ஒழிக்கவே முடியாதா... விவேக் ஸார்...?*

(எ. பரந்தாமன், திருவொற்றியூர்)

★★ திருட்டு வி.சி.டி.க்களைப் போலதான் இதுவும். வெட்ட வெட்ட முளைக்கும் களைச் செடிகளைப் போல் இந்த போதை மருந்துகள் பல்வேறு வடிவங்களில் விஸ்வரூபம் எடுத்து இந்த சமுதாயத்தையும் சட்டத்தையும் மிரட்டி வருகின்றன. சென்னை, மும்பை போன்ற பெரிய நகரங்களில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களில் போதை விருந்துகள் நடைபெறுவது வாடிக்கையாகிவிட்டது. இந்த போதை விருந்துக்குப் பெயர் 'சில்லும் பார்ட்டி.' இதுபோன்ற பார்ட்டிகளில்



முன்பெல்லாம் ஹெராயின், கோக்கைன் போன்ற போதை மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்போது மும்பையில் போலீஸில் சிக்கிய போதை விருந்து ஒன்றில் வழக்கத்துக்கு மாறாக எல்.சி.டி. என்ற 'லைசர்ஜிக் ஆசிட்-டை- எதில மைட்' பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதன் விலை மிக மிக அதிகமானது. பெரிய பணக்காரர்கள் மட்டும் இதனைப் பயன்படுத்த முடியும். இந்த விருந்தில் 850 சொட்டு எல்.சி.டி. போதைப் பொருளைப் போலீஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த எல்.சி.டி.-யின் ஒரு சொட்டு மருந்து விலை சர்வதேச மதிப்பில் ரூ.2000 ஆகும். தற்போது உலகில் கிடைக்கும் அதிக விலையுள்ள மிகவும் ஆபத்தான போதைப் பொருள் எல்.சி.டி.தான் என்பது குறிப்பிடத்தக்கது. எல்.சி.டி.யுடன் 104 எக்ஸ்டசீ போதை மருந்து மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. எல்.சி.டி. போதைப் பொருளுக்கு உலக அளவில் நல்ல மவுசு உள்ளது. ஒரு சொட்டு எல்.சி.டி. போதை மருந்தை உடலில் ஏற்றிக் கொண்டால் சாதாரண போதை மருந்துகளைக் காட்டிலும் பல மணி நேரங்களுக்கு போதை இருக்குமாம்...! போதை விருந்துகளை நடத்தும் ஹோட்டல்களின் லைசென்ஸை அடியோடு ரத்து செய்வதே போதை மருந்துகளை ஒழிக்க இப்போதைக்கு உள்ள ஒரே வழி!

இந்த பகுதிக்குக் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**விளக்கம் ப்ளீஸ் விவேக்,**

**க்ரைம் நாவல் ஸ்பெஷல்,**

**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**

352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,

சென்னை-5.




# 1

பொட்டானிகல் கார்டன்.

எல்லா திசைகளிலும் இயற்கை பச்சை பெயிண்ட் அடித்திருக்க - ஒரு பெரிய சதுரப் புல் தரையில் அமர்ந்திருந்த வாணியின் சல்வார் கமீஸ் துப்பட்டாவை இழுத்தான் சிவா. காதல் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கும் ஜோடி அது.

வாணி அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவனை முறைத்தலாய்ப் பார்த்தாள்.

"கொஞ்சம் சும்மா இருக்க மாட்டீங்களா...?"

"ஏன்...? துப்பட்டாவைத் தொடக் கூட எனக்கு உரிமை இல்லையா...?"

"அப்படி நான் சொன்னேனா...?"

"அப்புறம் உன்னோட முறைப்புக்கு என்ன அர்த்தம்...?"

"அங்கே பாருங்க..."

ஆட்காட்டி விரலை சற்றுத் தொலைவில் சுட்டிக் காட்டினாள். அங்கே ஆறேழு சிறுவர்கள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்க - அவர்களை அதட்டும் வயதான தம்பதிகள் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிவாவின் சில்மிஷங்களைப் பார்த்து "கலிகாலம்" என்று தலையில் அடித்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

வாணி தொடர்ந்தாள்.

"நம்மைப் பார்த்துத்தான் அந்த அம்மா தலைதலையா அடிச்சிக்குது... பசங்க விளையாடிட்டிருக்காங்க... பலரும் இந்த

வழியா போறதும் வர்றதுமா இருக்காங்க... நீங்க பாட்டுக்கு என் கையைப் பிடிச்சி இழுக்கறதும்... துப்பட்டாவை இழுக்கறதுமா இருந்தா என்ன அர்த்தம்?"

சிவா சிரித்தான்.

"அங்கே பார்த்தியா...?"

அவன் காட்டிய திசையில் இன்னொரு காதல் ஜோடி. அந்த இளைஞன் பெண்ணின் மடியில் தலையைச் சாய்த்திருந்தான். அவள் அவனுடைய அடர்த்தியான கேசத்தை அளைவதும் - அவ்வப்போது குனிந்து அவனுடைய நெற்றிப் பரப்பில் முத்தமிடுவதுமாய் இருந்தாள்.

"சே...!" என்றாள் வாணி.

"என்ன சே...? அவங்க யாரையாவது பத்தி கவலைப்படறாங்களா...? எவ்வளவு ஜாலியா இருக்காங்க பாரு..."

"எனக்கு இதெல்லாம் பிடிக்காது..."

"இந்த கார்டனுக்குள்ளே நூறு பேர் வர்றாங்கன்னா... அதுல எண்பது பேர் நம்மை மாதிரி காதலர்களாகத்தான் இருப்பாங்க... அவங்க இங்கே வர்றதே யாரோட தொல்லையும் இல்லாம நிம்மதியா நெருக்கமாக உக்காந்து பேசத்தான்...!"

"நெருக்கமான்னா...?"

"ஒருத்தர் மடில ஒருத்தர் சாஞ்சிகிட்டு... கையோட கை கோர்த்துகிட்டு...! இதெல்லாம் தப்புன்னு சொன்னேன்னா... நீ காதலிக்கவே லாயக்கு இல்லை..."

"முன்னால் குழந்தைங்க... பெரியவங்க வரப் போக இருக்காங்க. கொஞ்சம் இன்டீரியரா யார் கண்ணிலும் படாத இடத்தில போய் உக்காந்துக்கலாமே..."

"ம்... அப்படிச் சொல்லு...! எந்திரி..."

"எந்திரிக்கிறதா...?"



"ஆமா... நீ சொன்ன மாதிரி நாம இன்டீரியரா போய் உக்காந்துக்கலாம்..."

வாணி தலையில் அடித்துக் கொண்டாள்.

"இனிமே உங்ககூட தனியா இப்படியெல்லாம் வரக்கூடாது..."

எழுந்தாள்.

பின்புறம் ஒட்டியிருந்த சருகுகளையும், மண் துகள்களையும் தட்டி விட்டுக் கொண்டே - சிவாவோடு நடந்தாள்.

பசேலென்ற செடிகளுக்கு மத்தியில் சிவப்பு நிறத்தில் சிமெண்ட் பேவ்மெண்ட் நீளமாய்ச் சென்றது.

நூறு மீட்டர் தூரம் வரை நடந்து கார்டனின் கோடியை அடைந்தார்கள்.

குட்டையாய் வளர்ந்த அடர்த்தியான மரங்கள் பழுத்த இலைகளை மெத்தை மாதிரி தரையில் பரப்பி - ஒரு பொட்டு சூரிய வெளிச்சம் கூட தரையில் படாமல் பார்த்துக் கொண்டிருந்தன.

ஆள் நடமாட்டம் சைபர்.

சிவா அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"இங்கே நான் என்னோட இஷ்டப்படி நடந்துக்கலாமா...? உனக்கு எந்த ஆட்சேபணையும் இருக்காதே...?"

"ஒரு எல்லை வரைக்கும் ஆட்சேபணை தெரிவிக்க மாட்டேன்..."

"சரி உக்காரு... அந்த எல்லை எதுன்னு நான் இப்போ ஆராய்ச்சி பண்ணப் போறேன்..."

வாணியின் தோள்களை அழுத்தி அந்த மரத்தினடியில் அமர வைத்தான் சிவா.

சருகுகள் சலசலவென்று நசுங்கின.

சிவா அவளுடைய உள்ளங்கையை எடுத்துத் தன் உள்ளங்கைக்குள் வைத்துக் கொள்ள - அவளைப் பார்த்துக் கேட்டாள்.

"சிவா... என்கிட்டே இவ்வளவு உரிமை எடுத்துக்கறீங்க. ஜோக் அடிக்கறீங்க. ஒரு விநாடிகூட ஸீரியஸா பேச மாட்டேங்கறீங்களே...?"

"ஸீரியஸா பேசணுமா...? என்ன பேசணும்...?"

"நம்ம கல்யாணத்தைப் பத்தி..."

"கல்யாணத்துக்கு என்ன அவசரம்...? என்னோட வேலை நிரந்தரமாக இன்னும் ஆறு மாசம் இருக்கு... அதுவரைக்கும் காத்திருன்னு நான் ஏற்கெனவே சொன்னேனே...?"

"சொன்னீங்க... எப்படி இருந்தாலும் வேலை நிரந்தரமாகத்தான் போகுது... என்னோட அண்ணன்கிட்டே இப்பவே சொல்லிடலாமே..."

"டோன்ட் பி ஸில்லி... 'நிரந்தரமான உத்தியோகம் இல்லாமே என்னோட தங்கச்சியைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு என்ன தைரியம்?'னு உன்னோட அண்ணன் கேட்டுட்டா... என்னால என்ன பதில் சொல்ல முடியும்...?"

"சிவா..."

"நோ... என்னால இப்போ வந்து உங்கண்ணன்கிட்டே பேச முடியாது... ரெண்டு வருஷம் காத்திருந்த உனக்கு இன்னும் ஆறே ஆறு மாசம் காத்திருக்கறதில என்ன கஷ்டம்...?"

"அவர் பாட்டுக்கு கல்யாண முயற்சிகளில் இறங்கிட்டார் சிவா... நான் சொல்லவும் முடியாம மெல்லவும் முடியாம தவிச்சிட்டிருக்கேன்..."

"அதனாலென்ன... ஓவர் நைட்ல யாரும் கல்யாணம் ஃபிக்ஸ் பண்ணிட மாட்டாங்க... வர்ற மாப்பிள்ளைகளை ஏதாவது சாக்குப்



போக்கு சொல்லி நீ தட்டிக் கழிச்சிட்டே... வா... இன்னும் ஆறு மாசம்ங்கிறது கண்ணை மூடித் திறக்கறதுக்குள்ளே ஓடிப் போயிடும்..."

சொல்லிக் கொண்டே சிவா அவள் மடியில் தலையை வைக்க - வாணி நன்றாக மரத்தில் சாய்ந்து - உட்கார்ந்து கைகளைத் தரையில் பதித்தாள்.

சருகுகளுக்குள் புதைந்த அவளுடைய வலது கை வித்தியாசமான ஸ்பரிசத்தை உணர - சட்டென்று திரும்பி - முகம் மாறி - சருகுகளை பரபரவென்று விலக்கிப் பார்த்தாள்.

அவள் முதுகுத் தண்டில் மின்சாரம் பாய்ந்தது.

ஏதோ கடினமான பொருள் மாதிரி விரைத்திருந்த ஒரு மனிதக் கை அந்தச் சருகுகள் இடையேயிருந்து வெளிப்பட்டது.

---

## 2

---

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்..."

மிலிட்ரி கான்ஃபரன்ஸ் ஹாலின் கதவருகே லேசாய் மூச்சு வாங்க வந்து நின்றான் தருண்.

சீஸா பச்சை உடையில் கச்சிதமான உயரத்தோடு இருந்தான். ஷேவ் செய்யப்பட்ட முகப்பரப்பில் பச்சை நிறத்தின் மினுமினுப்பு தெரிந்தது.

ஹாலுக்குள் நீள் வட்டமாய் உட்கார்ந்திருந்த ஏழெட்டு ராணுவ அதிகாரிகளுக்கு மையமாய்த் தெரிந்த மேஜர் திரும்பிப் பார்த்தார். "எஸ்..."

தருண் சொன்னான்.

"ஸாரி ஸார்... மனைவிக்கு உடல்நிலை சரியில்லை... லேசான காய்ச்சல்... அவளை டாக்டரிடம் கூட்டிப் போயிருந்தேன்... ஆகவே தாமதமாகத்தான் தகவல் கிடைத்தது..."

அவனை ஊடுருவலாய் ஒரு விநாடி பார்த்த மேஜர் மெதுவாய்த் தலையை அசைத்தார்.

"கமின்... கமின்..."

ஷூ சப்தம் டக் டக்கென்று ஹால் பூராவும் எதிரொலிக்க - உள்ளே வந்தான் தருண்.

மற்ற அதிகாரிகளோடு சேர்ந்து உட்கார்ந்தான்.

ஓரிரு விநாடிகள் கனத்த நிசப்தம்.

நிசப்தத்தைத் தன் எஃகுக் குரலால் கலைத்தார் மேஜர் காசிநாத்.

"இந்த ராணுவ ரெஜிமெண்ட்டின் முக்கிய அதிகாரிகளை அழைத்து நான் நடத்தும் இந்த அவசரக் கூட்டத்திற்குக் காரணம் என்னவென்று உங்களில் யாருக்காவது தெரியுமா...?"

எல்லாரும் மவுனமாய் யோசிக்க - ஓர் அதிகாரி கேட்டார்.

"டெல்லி தலைமை ராணுவ மையத்திலிருந்து ஏதேனும் முக்கிய செய்திகள் வந்துள்ளதா ஸார்...?"

மேஜர் தலையை அசைத்தார்.

"உங்கள் ஊகம் ஓரளவு சரி... பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து ஓர் அவசர குறிப்பு வந்துள்ளது..."

"என்ன குறிப்பு...?"

"இந்த நம் ராணுவ ரெஜிமெண்ட்டுக்குள் அந்நிய தேசத்து தீவிரவாதிகளின் ஊடுருவல் இருப்பதாக அதிகாரபூர்வமற்ற செய்திகள் கிடைத்துள்ளதாம்..."



"அந்நியத் தீவிரவாதிகளின் ஊடுருவலா...?"

"ஆமாம்..."

"இந்த ராணுவ ரெஜிமெண்ட்டில் இரும்புக் கோட்டை மாதிரி பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன... அதை மீறி ஒரு அந்நியன் உள்ளே பிரவேசிப்பது சாத்தியம்தானா ஸார்...?"

காசிநாத் தலையசைத்து மறுத்தார்.

"தீவிரவாதிகளின் ஊடுருவல் என்றால் மெட்டீரியலாய் ஒருவன் ரெஜிமெண்ட்டுக்குள் நுழைவதைப் பற்றிச் சொல்லவில்லை... இங்கே பணியாற்றுபவர்களில் ஓரிருவர் தீவிரவாதிகளின் கைப்பாவைகளாய் மாறினால் அதுவும் ஒரு வகையில் ஊடுருவல்தானே...?"

எல்லோரும் கனமான யோசனையோடு நிசப்தம் காத்தார்கள்.

காசிநாத் தொடர்ந்தார்.

"அதனால்தான் உயரதிகாரிகளுக்கு மட்டுமான பிரத்தியேகக் கூட்டம் ஒன்றை இப்போது நான் கூட்டியுள்ளேன்... பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து வந்த இந்த தகவலை கான்ஃபிடென்ஷியலாகவே வைத்துக் கொள்ளுங்கள்... உங்கள் டிபார்ட்மெண்டுகளில் உங்களுக்குக் கீழே பணியாற்றும் நபர்களை இந்த நிமிஷத்திலிருந்து நீங்கள் விழிப்புடன் கண்காணிக்க வேண்டும்... யாராவது சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் நடப்பது தெரிந்தால் உடனடியாய் எனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்......"

"எஸ்... ஸார்..."

அத்தனை அதிகாரிகளும் தலையசைத்தார்கள்.

காசிநாத் தொடர்ந்தார்.

"சந்திப்பு கலைகிறது... எல்லோரும்

போகலாம்..."

இருக்கைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எல்லோரும் எழுந்தார்கள்.

வெளியேறும் வாயிலை நோக்கி அவர்கள் செல்லத் துவங்க - காசிநாத் தருணைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"நீ மட்டும் நில்..."

"எஸ் ஸார்..."

கேள்விக் குறியை முகத்தில் ஒட்ட வைத்துக்கொண்ட தருண் அவர் முன்னால் வந்து நின்றான். சிறிது நேரம் மௌனித்த காசிநாத் பின்பு கேட்டார்.

"உன்னுடைய ஃப்ளையிங் செக்ஷனில் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள்...?"

"நாற்பத்திரண்டு பேர் ஸார்..."

"அவர்களின் பர்சனல் ஆக்ட்டிவிட்டீஸ் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா...?"

"ஸாரி ஸார்... ட்யூட்டி அவர்ஸில் அவர்களின் காண்டக்ட் பற்றி என்னால் சொல்ல முடியும்... பர்சனல் விவகாரங்கள் எதுவும் தெரியாது..."

"உங்கள் செக்ஷனில்தான் ஊடுருவல் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. ஆகவே உனக்கு கூடுதல் கவனம் தேவை தருண்."

"எஸ் ஸார்... நான் கவனம் செலுத்திக் கண்காணிக்கிறேன். ஃப்ளையிங் செக்ஷனில் யாரேனும் புல்லுருவிகள் இருந்தால் உங்கள்முன் கொண்டுவந்து நிறுத்துகிறேன்."

"நீ போகலாம்..."

தருண் கதவில் மறைய - மேஜை மேல் கிடந்த கார்ட்லெஸ் போனைக் கையிலெடுத்தார் காசிநாத்.

"செக்யூரிட்டி விங்...?"

"ஹோல்டிங்..."

"செக்யூரிட்டி ஆபீஸரை என்னை வந்து



பார்க்கச் சொல்லுங்கள்..."

"எஸ் ஸார்..."

தொடர்பை அறுத்துக் கொண்டு காத்திருந்தார்.

நான்கு நிமிஷக் கழிதலுக்குப் பின் - மொடமொடப்பான யூனிஃபாரமில் செக்யூரிட்டி ஆபீஸர் பிரசன்னமானார்.

"குட் ஈவினிங் ஸார்."

"குட் ஈவினிங்."

"நான் சொன்ன மாதிரி ஒரு அவசர மீட் நடத்தினீர்களா...?"

"நடத்தினேன்..."

"அதிகாரிகளின் ரியாக்ஷன் எப்படி இருந்தது...?"

"எல்லோருமே கண்களில் அதிர்ச்சியைக் காட்டினார்கள்."

"குறிப்பாய் தருண்...?"

"அவனிடமும் பெரிசாய் ரியாக்ஷன் எதும் தெரியவில்லை."

"ஒருவேளை அழுத்தக்காரனாய் இருக்கலாம் ஸார்."

"என்ன செய்யலாம்...?"

"அந்நிய தீவிரவாதிகளால் ஏதோ சதி வலை பின்னப்படுகிறது என்ற அளவில் நமக்கு விபரம் கிடைத்துள்ளது... அந்தச் சதியில் தருணுக்கு சம்பந்தம் இருக்கலாம் என்று நூலிழை சந்தேகம் இருக்கிறது... இன்னும் கொஞ்சம் விட்டுப் பிடிப்போம்... தகுந்த ஆதாரத்தோடு அவனை மடக்குவோம்..."

"அப்படியானால் தருணை தீவிரமாய்க் கண்காணித்து வருவது அவசியம்..."

செக்யூரிட்டி ஆபீஸர் தலையசைத்தார்.

"நான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்..."

# 3

**வா**ணியின் குரல் குழறியது.

"சி... சி... சிவா..."

மடியில் சாய்த்திருந்த தலையை சற்றே உயர்த்தினான் சிவா.

"என்ன வாணி... ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கு...?"

"இ... இங்கே பாருங்க..."

அவனை வலுக்கட்டாயமாய் மடியிலிருந்து அப்பால் தள்ளிவிட்டு - எழுந்து நின்றாள் வாணி.

சிவாவின் பார்வை அவள் சுட்டிக் காட்டிய இடத்துக்குப் போனது.

அந்த மனிதக் கையைக் கண்ணில் வாங்கி அவனும் அதிர்ந்தான்.

"வா... ணி... இ...து?"

"இலைகளுக்குள்ளே டெட்பாடி இருக்கும் போலிருக்கு... கொலை பண்ணி பாடியை சருகுகளுக்குள் மறைச்சிருக்காங்கன்னு நினைக்கிறேன்..."

சிவா சரசரவென்று சருகுகளை விலக்க -

ஒரு உடம்பின் கால் பகுதியும், இடுப்பும் பார்வைக்குப் புலப்பட ஆரம்பித்தது.

"வாணி... நீ சொன்னது சரிதான்."

சொல்லிக்கொண்டே அவன் மேலும் சருகுகளை விலக்க ஆரம்பிக்க - அவள் தோளைப் பற்றித் தடுத்தாள்.

"வேண்டாம் சிவா..."

அவள் குரலும், உடலும் நடுங்கியது.

"என்ன வேண்டாம்?..."

"நாம போயிடலாம்... இந்த வீண் வம்பெல்லாம் நமக்கு வேண்டாம்..."



"நீ என்ன சொல்றே வாணி...? ஒரு டெட்பாடியைப் பார்த்துட்டு சும்மா போக முடியுமா...?"

"பின்னே என்ன செய்யலாம்னு சொல்றீங்க...?"

"போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணணும்..."

"வேற வினையே வேண்டாம்... நம்ம காதல் என்னோட அண்ணனுக்குக்கோ... வெளியுலகத்துக்கோ தெரிய வேண்டாம்னுதான் நாம இப்படி ஒதுக்குப்புறமான இடத்துக்கு வந்தோம்... இப்ப நாம போலீஸுக்குப் போனா... காலை பேப்பர் மாலை பேப்பர்னு போட்டு நம்மை நாறடிச்சிடுவாங்க சிவா..."

"அதுக்கு பயந்து நாம இங்கிருந்து போய்ட்டோமனா... அதைவிட பெரிய பிரச்சினைகளெல்லாம் வந்து சேரும் வாணி..."

"என்ன பிரச்சினை வரும்ங்கிறீங்க...?"

"இங்கே ஒரு பாடி கிடக்கிறது எப்படியும் போலீஸுக்கு தெரியாம போகாது... நாம இங்கே வந்து போனதை பின்னாடி போலீஸ் கண்டு பிடிச்சாங்கன்னா அப்புறம் போலீஸ் நம்மையே சந்தேகப்பட ஆரம்பிச்சிடுவாங்க... அது பெரிய சிக்கல்ல கொண்டு போய் நம்மை நிறுத்திடும்..."

வாணி வியர்த்தாள்.

"தெரியாம இந்த இடத்துக்கு வந்து எக்கச்சக்கமா மாட்டிகிட்டோம்... நான் வீட்டுக்குப் போயிடறேன் சிவா... போலீஸை நீங்களே ஃபேஸ் பண்ணுங்க..."

"தன்னந்தனியா இங்கே எதுக்காக வந்தேன்னு போலீஸ் என்னைக் குடைவாங்க... பொருத்தமா பொய் சொல்ல வராது... எதுக்கு வம்பு... நிஜமா நடந்ததைக்

சொல்லிடலாம்... நம்மைப் பத்தின விபரங்கள் வெளியே தெரிய வேண்டாம்னு சொன்னா போதும்...! ரகசியமா வெச்சிருப்பாங்க..."

பதட்டத்தில் உடைந்த குரலால் பேசிய சிவா பாடியை மூடியிருந்த சருகுகளை முழுவதுமாய் விலக்கினான்.

அந்த பாடியின் முகத்தைப் பார்த்த வாணி உறைந்து போய் பெரிய குரல் எடுத்து வீறிட்டாள்.

"அண்ணா... ஆ... ஆ..."

---

## 4

---

டெஹ்ரா கண்டோன்மெண்ட்டில் ஆங்காங்கே யூனிஃபார்ம் அணிந்திருந்த ராணுவ ஆட்களைப் பார்க்க முடிந்தது.

தருண் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸின் வாசலில் வில்ஸ் ஃபில்டரை சாம்பலாக்கியபடி காத்திருந்தான்.

சிகரெட் முனை விரல் வரைக்கும் வந்து சுட்ட விநாடி - அவன் முதுகை யாரோ தட்டினார்கள்.

திரும்பினான்.

டர்பன் அணிந்த சீக்கிய ஆசாமி ஒருத்தன் நின்றிருந்தான். தருணைப் பார்த்து புன்னகைத்தான்.

"ஹலோ!"

தருண் அவனைக் குழப்பப் பார்வை பார்த்தான். அறிமுகமில்லாத முகம்.

"ஹலோ..." என்று மரியாதை நிமித்தமாய்ச் சொன்னவன் தொடர்ந்து கேட்டான். "நீங்கள் யார் என்று தெரியவில்லையே...?"



தொடர்ந்து அவனிடம் புன்னகை.

"உங்களை எனக்குத் தெரியும் தருண்... உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவே இந்த சந்திப்பு..."

"எதற்காக என் அறிமுகம்...?"

"உங்களிடம் நான் நிறைய பேச வேண்டியிருக்கிறது..."

"என்ன பேச வேண்டும்...?"

"இங்கே நின்று பேச முடியாது... ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்குள் போயிருக்கும் உங்கள் மனைவி உமா எந்த நிமிஷம் வேண்டுமானாலும் திரும்பி வரலாம்... மனைவியை குவார்ட்டர்சில் விட்டு விட்டு வாருங்கள்... ஏதாவது ரெஸ்டாரெண்ட்டிலோ, பார்க்கிலோ உட்கார்ந்து நாம் பொறுமையாகப் பேசலாம்..."

"அப்படி என்ன பேச வேண்டும்...?"

"இப்போது சொல்ல முடியாது... எத்தனை மணிக்கு எங்கே வருகிறீர்கள் என்று சொல்லுங்கள்..."

"இப்போதே வேண்டுமானாலும் வருகிறேன்... ரத்தன் பார்க்கில் உட்கார்ந்து பேசலாம்..."

"உங்கள் மனைவி..."

"நோ ப்ராப்ளம்... அவளை நான் ஆட்டோ அமர்த்தி க்வார்ட்டர்ஸுக்கு அனுப்பி வைத்து விடுவேன்..."

"குட்...! ஒரு விஷயம் ஞாபகம் இருக்கட்டும்... என்னிடம் நீங்கள் பேசப்போகிற விஷயம் ரகசியமாக இருக்கட்டும்... உங்கள் மனைவிக்குக் கூடத் தெரிய வேண்டாம்..."

தலையசைத்தான் தருண்.

நடந்து போகிற - அந்த சீக்கிய இளைஞனை யோசனையும், வியப்பும்

மேலிடப் பார்த்தான்.

'நான் மனைவிக்காகக் காத்திருக்கிறேன் என்பதைக் கண்காணித்து இருக்கிறான்... என்னைப் பற்றின விபரங்களை எல்லாம் அறிந்து வைத்திருக்கிறான்... உமாவின் பெயரைக்கூடச் சொல்கிறான்...'

'என்னதான் பேசப் போகிறான்...?'

இன்னொரு சிகரெட் சாம்பலானபோது - நீள வராந்தாவின் கோடியில் உமா தோன்றினாள்.

'பிக் ஷாப்பர்' பிதுங்க பொருட்கள். அது போதாதென்று இரண்டு கேரிபேக்குகளும் வைத்திருந்தாள். ஸாரி பாக்கெட்டுகள்... காஸ்மெட்டிக் பொருட்கள் பைகளுக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தன.

"கொஞ்சம் ஹெல்ப் பண்ணக் கூடாதா...?"

தருண் புன்னகைத்தான்.

"ஊஹூம்... நான் ஹெல்ப் பண்ணினா... இதே மாதிரி இன்னொரு மடங்கு திங்களை ஷாப்பிங் பண்ணி என்னையும் பொதி சுமக்க வெச்சிருவே... அதனால இந்த விஷயத்தில் நான் உதவ மாட்டேன். நீ வாங்கின பொருட்களை நீதான் சுமக்கணும்."

காம்ப்ளக்ஸின் வாயில்படிகளில் இறங்கினார்கள்.

குறுக்கே போன ஆட்டோவைக் கை தட்டிக் கூப்பிட்ட தருண் - உமாவிடம் திரும்பிச் சொன்னான்.

"இந்த ஆட்டோவில் நீ குவார்ட்டர்ஸுக்கு போயிடு உமா... நான் அப்புறமா வர்றேன்...!"

"ஏன்...?"

"ஒரு சின்ன வேலை இருக்கு..."

"கிளம்பி வர்றப்ப நீங்க எதுவும் சொல்லலையே...?"



"இப்போதுதான் ஞாபகம் வந்தது..."

"என்ன வேலை...?"

"ஒருத்தரைப் பார்க்கணும்..."

"யாரை...?"

"உமா... ஏன் இப்படிக் குடைஞ்சு குடைஞ்சு கேட்டுட்டிருக்கே...?"

"நீங்க இந்த மாதிரி சொன்னதே இல்லையே...? யாரோ கேர்ள் ஃப்ரெண்டைப் பார்க்கப் போற மாதிரி பிகு பண்ணிக்கிறீங்களே...?"

"நீ படிச்ச பொண்ணு உமா... உன்னோட கணவன் மிலிட்டரி சர்வீஸ்ல இருக்கான்கிறதை ஞாபகத்தில் வெச்சிக்கோ... எல்லா விஷயத்தையும் எல்லா சமயத்திலும் வெளிப்படையாப் பேசமுடியாது... உன்கிட்டே சொல்லற விஷயமா இருந்தா ஆரம்பத்திலேயே சொல்லியிருப்பேனே...!"

"ஸாரிங்க.... அஃபிஷியலா போறீங்களா...?"

"அப்படித்தான் வெச்சிக்கோயேன்..."

ஆட்டோ படபடக்கும் என்ஜினோடு காத்திருக்க - உமா உள்ளே ஏறிக்கொண்டாள்.

சத்தலோடு புறமுதுகு காட்டி விரைந்தது ஆட்டோ.

தருண் காம்ப்ளக்ஸுக்குப் பின்னாலிருந்த ரத்தன் பார்க்கை நோக்கி நடை போட ஆரம்பித்தான்.

பார்க்கின் வாயிலில் இருந்த வேர்க்கடலை தள்ளு வண்டிகளில் வியாபாரம் சுறுசுறுப்பாய் நடந்து கொண்டிருந்தது.

அந்த பிற்பகல் பொழுதில் பார்க்கில் அவ்வளவாய் நடமாட்டம் இல்லை. வயசான ஆசாமிகள் ஒரிருவர் சிமெண்ட் பெஞ்சுகளில் படுத்து சுற்றுப்புறத்தை மறந்து தூக்கத்தைத்

தழுவியிருந்தார்கள்.

சீஸாப் பலகையின் அருகே காத்திருந்தான் அந்த சர்தார்ஜி.

"பரவாயில்லையே... சொன்ன மாதிரி வந்து விட்டீர்களே..."

"என்ன விஷயம்...? இப்போது சொல்லுங்கள்..."

"வாருங்கள் உள்ளே சென்று விடலாம்..."

ஒரு ஒதுக்குப்புறமான இடத்துக்குக் கூட்டிப் போனான் அவன்.

மரங்களும், செடிகளும் அடர்ந்திருந்தன.

அங்கிருந்த முதுகில்லாத சிமெண்ட் பெஞ்சைக் காட்டினான் அவன்.

"உட்காருங்கள்..."

தூசைத் தட்டிக் கொண்டு அந்த பெஞ்சில் தன்னை இருத்திக் கொண்டான் தருண்.

அவனைக் கேள்விக் குறியோடு பார்த்தான்.

"தருண்...! உங்களால் எனக்கொரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது..."

"என்ன காரியம்...?"

"அதைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் அந்தக் காரியத்தைச் செய்து கொடுப்பதால் உங்களுக்கு என்ன லாபம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்..."

தருண் ஆர்வமாய்க் கேள்வி கேட்பானா என்கிற மாதிரி எதிர்பார்த்து ஒரு சில விநாடி இடைவெளி விட்டான் அவன்.

தருண் அமைதியாய் யோசித்துக் கொண்டிருக்க - இடைவெளியை ரத்து செய்துவிட்டுத் தொடர்ந்தான்.

"நான் சொல்கிற காரியத்தைச் செய்து முடித்தால் உங்களுக்கு பத்து லட்ச ரூபாய் கிடைக்கும்..."

நிமிர்ந்தான் தருண்.

"பத்து லட்ச ரூபாயா...?"



"ஆமாம்... அத்தனையும் டாலர்... காரியத்தைச் செய்ய ஒப்புக் கொண்டால் ஒப்புக் கொண்ட நிமிஷமே அட்வான்ஸ் தொகை அஞ்சு லட்ச ரூபாய் உங்கள் கைக்கு வரும்... காரியம் முடிந்ததும் மீதி அஞ்சு லட்சம்...!"

கண்களில் வியப்பு தவழ அந்த சர்தார்ஜியைப் பார்த்தான் தருண்.

சர்தார்ஜி தொடர்ந்தான்.

"நீங்கள் பல வருஷம் உழைத்துச் சம்பாதிக்க வேண்டிய தொகை கண் மூடிக் கண் திறப்பதற்குள் உங்கள் கைக்கு வந்து சேரும்... என்ன சொல்லுகிறீர்கள் தருண்...? காரியத்தைச் செய்து முடிக்கிறீர்களா...?"

"நான் செய்ய வேண்டிய காரியம் என்ன என்று நீங்கள் இன்னும் சொல்லவே இல்லையே..."

"இப்போதெல்லாம் காரியத்தை விட கூலிதானே முக்கியம்... ஒரு பெருந்தொகை கிடைக்கும் என்றால் எந்தக் காரியத்தையும் செய்ய மனிதர்கள் தயாராய் இருக்கிறார்கள்..."

"எல்லாரும் அப்படி கிடையாது... நான் ஒரு மிலிட்டரி காரன்... நீ சொல்கிற காரியம் சட்டத்திற்கு உட்பட்டதா... சட்ட விரோதமானதா என்று பார்க்க வேண்டும்..."

சர்தார்ஜி அடர்த்தியான தாடி, மீசைக்குள் பற்கள் வெளிச்சம் அடிக்க சிரித்தான்.

"உங்கள் கேள்வி நல்ல ஜோக் தருண்... ஒருத்தன் உங்களைக் கூப்பிட்டு சில லட்சங்களைத் தருகிறேன் என்று சொன்னால் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா...?"

"ஸோ... நான் யோசித்தது சரிதான்...! ராணுவத்தில் பணியாற்றுகிற என்னைப் பயன்படுத்தி ஒரு பெரிய சதியை நடத்த

உத்தேசித்திருக்கிறீர்கள்... அப்படித் தானே...?"

சர்தார்ஜி லேசாக இடவலமாகத் தலையாட்டிக் கொண்டே சொன்னான்.

"நோ... நோ... பெரிய சதியெல்லாம் கிடையாது... சின்ன சதிதான்... ஒரு பெரிய சதிக்கான முன்னோட்டம் இது... டோக்கன் சபோட்டேஜ்... எங்கள் கோரிக்கையை இந்திய ராணுவத்திடம் வைக்கும் முன்னால் நாங்கள் யார்... எங்கள் பலம் என்ன... சாமர்த்தியம் என்ன என்று நிரூபிக்க வேண்டும்...! அப்போதுதானே கோரிக்கைக்கு மதிப்பு இருக்கும்..."

"முதலில் நீங்கள் யார்... நான் செய்ய வேண்டிய காரியம் என்ன... இதையெல்லாம் விளக்கமாகச் சொல்லுங்கள்... அதற்கப்புறம் நான் என் முடிவைச் சொல்லுகிறேன்..."

" 'ரெட் கேட்...' (RED CAT)... கேள்விப்பட்டிருக்கிறீர்களா...?"

தருண் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு சர்தார்ஜியை ஏறிட்டான்.

"தெரியவில்லை...!"

"நீங்கள் ஃப்ளையிங் பிரிவில் இருப்பதால் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை... புலனாய்வுப் பிரிவில் உள்ளவர்களுக்கு 'ரெட் கேட்' என்றால் வயிற்றில் புளியைக் கரைக்கும்..."

"புரியும்படி சொல்லுங்கள்..."

"'ரெட் கேட்' என்பது இண்டர்நேஷனல் தீவிரவாத அமைப்பு... அதன் இந்தியப் பிரிவில் நான் பணியாற்றுகிறேன்..."

தருண் திகைப்போடு அவனைப் பார்க்க - அவன் தொடர்ந்தான்.

"உங்கள் ராணுவ ரெஜிமெண்டின் முக்கிய ஆபீஸில் ஒரு வெடி குண்டைப் பொருத்தி வெடிக்கச் செய்ய வேண்டும்...



ரொம்ப சிம்பிளான காரியம்தான்... ஒரு டேபிள் வெயிட்டைப் போன்ற தோற்றத்தில் இருக்கும் அந்த வெடிகுண்டை கட்டிடத்தின் மையத்தில் யார் பார்வையிலும் படாத ஓர் இடத்தில் வைத்து விட்டு நாங்கள் முன்கூட்டி சொல்லி வைத்த நேரத்தில் ரிமோட்டை அழுத்தி அதை வெடிக்க வைக்க வேண்டும். உங்கள் முடிவு என்ன தருண்...? அட்வான்ஸை வாங்கிக் கொள்ள ஏற்பாடு பண்ணட்டுமா?"

"வேண்டாம்..."

"ஏன்...?"

"அட்வான்ஸை இப்போது வாங்கிக் கொள்ளப் போவது நீங்கள்தான்..."

சர்தார்ஜி திகைத்தான்.

"அட்வான்ஸ் எனக்கு எதற்கு...?"

"நான் கொடுக்கப் போகிற அட்வான்ஸ் கேஷ் இல்லை."

"பின்னே...?"

"இதோ..." தருண் சட்டென்று வெட்டுக் கத்தியாய் கையை உயர்த்தி சர்தார்ஜியின் பிடரிப் பகுதியில் சாய்வாய் ஒரு போடு போட்டான்.

"ஹ...!"

நரம்பு மண்டலத்துக்குள் தீப்பற்றிக் கொண்ட உணர்வில் அலறி மடங்கிய சர்தார்ஜியைக் கொத்தாய்ப் பிடித்து தூக்கினான் தருண்.

"இந்திய ராணுவத்தில் இருக்கிற ஒவ்வொரு வீரனும் கான்ஸ்டபிள்களையும் டாலர்களையும் வெறும் காகிதங்களாக மட்டுமே பார்க்கக்கூடிய மனப்பக்குவம் கொண்டவன். தீவிரவாதிகள் எங்கள் ராணுவ எல்லையின் வேலிப் பகுதியில் ஊடுருவலாம். ஆனால் ராணுவத்துக்குள் ஊடுருவ

முடியாது. காசுக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கிற ஜாதி நாங்கள் இல்லை..."

சர்தார்ஜி திமிறினான்.

"என்னை விடு..."

"ஸாரி... என் திடீர் நண்பனே! நீ இடம் தெரியாமல் வந்து மாட்டிக் கொண்டாய். உண்மையிலேயே நீ யார், உன் பின்னணி என்ன என்பதை நான், என் மேலதிகாரிகள் தெரிந்து கொள்ள வேண்டாமா...? நட - ரெஜிமெண்ட்டின் ரெட் ரூமுக்கு..." தருண் சொல்லிக் கொண்டே சர்தார்ஜியின் கைகளை மடக்கிப் பிடித்து பின்பக்கமாய் தன் கைக்குட்டைக்குள் எடுத்துக் கட்டினான்.

சர்தார்ஜி உறுமினான்.

"தருண்! என்னை விட்டுவிடு...! ஆபத்தை விலை கொடுத்து வாங்காதே...! நான் சொன்ன காரியத்தை உனக்கு செய்யப் பிரியமில்லை என்றால் பிரச்சனையை அத்தோடு விட்டு விடு... வீணாய் இதைப் பெரிது படுத்தாதே..."

"இது சாதாரண விஷயம் இல்லை நண்பனே! உன்னைப் போன்ற புல்லுருவிகள் கட்டிடத்தின் இடுக்குகளில் முளைத்துள்ள செடிகளுக்கு சமம். உங்களையெல்லாம் வளரவிட்டால் கட்டிடமே நாசமாகிற மாதிரி இந்த தேசமே நாசமாகி விடும். நட - ரெஜிமெண்ட்டின் சிவப்பு அறைக்கு."

சர்தார்ஜி முறைத்தான்.

"தருண்! நீ என்னை விடாவிட்டால்...?"

"விடாவிட்டால் என்ன...?"

"உன் உயிர்க்கு ஆபத்து..."

"இந்த பூச்சாண்டி காட்டுகிற வேலையெல்லாம் என்னிடம் வேண்டாம். இப்போது உன்னுடைய உயிருக்குத்தான் ஆபத்து."



"தருண்..."

"டேய்... நடடா..." தருண் சர்தார்ஜியை நெட்டித் தள்ளிய விநாடி -

பின்பக்கம் வெகு கிட்டத்தில் அந்தக் குரல் கேட்டது.

"அவனை விடு."

தருண் திரும்பிப் பார்க்க முயன்றான்.

கழுத்தில் சில்லென்று ஒரு பிஸ்டல் முத்தம் இட்டது.

---

# 5

---

ஜி. ஹெச்.

மார்ச்சுவரி அறைக்கு வெளியே நிழல் பரப்பி வைத்திருந்த பூவரசு மரத்துக்குக் கீழே வாயில் சேலைத் தலைப்பைத் திணித்து அழுகையை அடக்க முயன்று கொண்டிருந்தாள் வாணி.

அவளருகே நின்றிருந்த சிவா மெல்லத் தோளைத் தொட்டான். "வாணி! இப்படியே அழுதுகிட்டிருந்தா எப்படி...? இன்னும் கொஞ்ச நேரத்துல போஸ்ட் மார்ட்டத்தை முடிச்சு பாடியைக் கொடுத்துருவாங்க. அதுக்குப் பின்னாடி ஆக வேண்டிய காரியங்கள் எவ்வளவு இருக்கு..."

வாணி அழுகையில் வெடித்தாள்.

"சிவா...! நாங்க... யாருக்கு என்ன பாவம் பண்ணினோம்? அண்ணனை இப்படிக் கொலை பண்ணியிருக்காங்களோ?"

"மனசைத் தேத்திகிட்டு தைரியமா இரு வாணி. போலீஸ்கிட்டயிருந்து கொலையாளி தப்பவே முடியாது."

"இனி யாரைக் கண்டுபிடிச்சு என்ன

பிரயோஜனம் சிவா... எங்கண்ணன் உயிரோடு திரும்ப வரவா போறார்?"

வாணி தளர்ந்து போய் அங்கிருந்த திட்டில் போய் உட்கார்ந்து கொள்ள- சிவா மெதுவாய் அங்கிருந்து நகர்ந்து கொஞ்சம் தள்ளி நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நவநீதியை நோக்கிப் போனான். அவர் சப்-இன்ஸ்பெக்டர் ஜோசப்பிடம் கேஸ் சம்பந்தமாய் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"கொலை நடந்த இடத்தில் முக்கியமான தடயம் ஏதாவது கிடைச்சதா ஜோசப்...?"

"இல்ல ஸார்..."

"நல்லா சர்ச் பண்ணீங்களா...?"

"மரத்துக்கு கீழே இருந்த எல்லாச் சருகுகளையும் எடுத்து சலிச்சு பார்த்துட்டோம் ஸார். சீசன் ஆஃப் க்ரைம் எதுவும் கிடைக்கலை."

"ஸ்பாட்ல நடந்த மர்டரா... அது...?"

"இட்... மே... பி... ஸார்..! அப்படித்தான் நான் நினைக்கிறேன். மர்டர் வேற எங்கேயாவது நடந்து பாடியை டிஸ்போஸ் பண்ற எண்ணத்தில் பார்க்குக்கு கொண்டு வந்திருப்பாங்களான்னும் யோசிச்சுப் பார்த்தேன். அது சாத்தியம் கிடையாது ஸார்."

"மோட் ஆஃப் டெத்...?"

"அதுலதான் கொஞ்சம் குழப்பம் ஸார்."

"என்ன குழப்பம்...?"

"உடம்புல ரத்தக் காயங்கள் எதுவும் கிடையாது. கழுத்தை நெரிச்ச மாதிரியும் தெரியலை. போஸ்ட் மார்ட்டம் முடிஞ்ச பின்னாடிதான் மர்டர் எப்படி நடந்ததுன்னு தெரியும் ஸார்..."

"மர்டரான நபரோட பேர் என்ன...?"

"கதிர் ஸார்..."

"ஃபேமிலி...?"



"அப்பா அம்மா கிடையாது. ஒரே ஒரு சிஸ்டர் மட்டும்தான். மிடில் க்ளாஸ் ஃபேமிலி. ரெண்டு பேருமே எம்ப்ளாய்ட்..."

"சிஸ்டர் பேரு...?"

"வாணி...! அதோ அந்த மரத்துக்குக் கீழே இருக்காளே அதுதான் ஸார்."

"எங்கே வேலை பார்க்கிறா?"

"பைப்ஸ் இண்டியா லிமிடெட் ஹெட் ஆபீஸில் அக்கவுண்ட் அஸிஸ்டெண்ட்- வாணிக்கு ஒரு காதலனும் இருக்கான். பேர் சிவா. அந்த ரெண்டு பேரும்தான் பாடியைப் பார்த்திருக்காங்க."

"தங்கச்சியோட காதல் விவகாரம் அண்ணன்காரனுக்குத் தெரியுமா?"

"தெரியாதாம்...! சந்தர்ப்பம் பார்த்து சொல்லிக்கலாம்ன்னு இருந்தாங்களாம்."

"ஜோஸப்... அதெப்படி கரெக்டா இவங்க ரெண்டுபேரும் கதிர் மர்டர் ஆகிக்கிடக்கிற இடத்துக்கு வந்தாங்க...? இந்த விஷயம் உறுத்தலா உங்களுக்குப் படலையா...?"

"லேசான உறுத்தல் இருக்கு ஸார்... ஆனா... 'நாங்க அடிக்கடி சந்திச்சுக்கக்கூடிய இடம் இந்த கார்டன்தான்' அப்படின்னு அந்த சிவா சொன்னான்... ப்ரைவஸிக்காக ஆள் நடமாட்டம் இல்லாத அந்த ஒதுக்குப்புறத்துக்கு ரெண்டு பேரும் போயிருக்காங்க."

"எதுக்கும் அந்த சிவா மேல ஒரு கண்ணு வையுங்க ஜோசப்... கதிர் தன்னோட காதலுக்குத் தடையா இருப்பார்ங்கற காரணத்துக்காக அவனே கூட கொலை செஞ்சிருக்க வாய்ப்பிருக்கு."

"மே பி ஸார்... சிவாவுக்குப் பொருத்தமான மோட்டிவ் இருக்கு.. ஆனா அங்கே டெட்பாடி கிடக்கிற தகவலை நமக்குக் கொடுத்ததே

சிவாதான்..."

"அவன் மேல நமக்கு சந்தேகம் வராமே இருக்கறதுக்காகக்கூட வலிய வந்து தகவல் தந்திருக்கலாமே...?"

"யு மே பி ரைட்... ஸார்...!"

"அந்த பொண்ணு வாணிகிட்டே விசாரணை நடத்தினீங்களா...?"

"ரொம்ப எமோஷனலா இருக்கா ஸார்... இப்போதைக்குத் தெளிவா பேசக்கூடிய நிலைமையில் அந்த பொண்ணு இல்லை... அண்ணன் செத்துப் போன அதிர்ச்சியில் ஸ்தம்பிச்சுப் போயிருக்கா... நார்மலுக்கு வந்ததும்தான் விசாரிக்கணும்."

"கதிர் என்ன வேலை பார்த்தான்...?"

"ஒரு ப்ரைவேட் கன்சர்ன்ல சீஃப் கெமிஸ்ட்..."

"கெமிஸ்ட்டா...?"

"ஆமா ஸார்..."

"கொலைக்கு ஆபீஸ் பின்னணி காரணமாக இருக்குமா...?"

"அதையெல்லாம் இனிமேதான் விசாரிச்சுப் பார்க்கணும் ஸார்..."

ஜோசப் சொல்லிக் கொண்டிருந்த விநாடி - வெள்ளை சர்ட் வெள்ளை பேண்ட் தரித்த ஆஸ்பத்திரி சிப்பந்தி அருகில் வந்து குறுக்கிட்டார்.

"ஸார்... உங்களை டாக்டர் கூப்பிடறார்..."

"எங்கிருக்கார்...?"

"மார்ச்சுவரி ரூமில்."

சிவா ஸ்தம்பித்துப் போய் பார்த்துக் கொண்டிருக்க -

இருவரும் மார்ச்சுவரியை நோக்கி வேகமாய் நடக்க ஆரம்பித்தார்கள்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்ல - அது தானாகச் சாத்திக் கொண்டது.



சடலங்களைத் தாங்குகிற குளிர்பதன அறைகள் ஒரு சுவர் முழுக்க செவ்வகம் செவ்வகமாய்த் தெரிந்தது. அறையின் மத்தியில் இருந்த நகர மேஜையில் கதிரின் உடல் நீளமாய்க் கிடத்தப்பட்டிருந்தது.

ஒரு கதவைப் போலத் திறந்திருந்த அவன் தலைக்கு அருகே மரக்கத்தியும், பளபளக்கும் ஆயுதங்களும் கண்ணில் பட்டது. ஜிப்பை விரிப்பது போல வயிற்றைத் திறந்து குடலும், உள்ளுறுப்புகளும் ஆராயப்பட்டிருந்தன.

பச்சை நிறத்தில் ஏப்ரானும், மாஸ்க்கும் அணிந்திருந்த டாக்டர் மாஸ்க்கை விலக்கிக் கொண்டே இருவரையும் எதிர்கொண்டார். மோவாயில் ஃப்ரெஞ்ச் தாடி.

"வாங்க இன்ஸ்பெக்டர்..."

"பி.எம். முடிஞ்சுதா டாக்டர்...?"

"முடிஞ்சது..."

"மரணம் எப்படி?"

"பாய்ஸன் டிப்டு ஊசியால குத்திக் கொன்னிருக்காங்க..."

"கன்ஃபார்ம்டு மாட்டர்தானா...?"

"சர்ட்டன்லி..."

"பாய்ஸனை இவன் தனக்குத்தானே இஞ்செக்ட் பண்ணி தற்கொலை செய்துகிட்டிருக்கக்கூடாதா டாக்டர்...?"

டாக்டர் ஃப்ரெஞ்ச் தாடிக்குள் புன்னகைத்தார்.

"அப்படி இருந்தா புஜத்திலோ... மணிக்கட்டிலோதான் இஞ்செக்ஷன் மார்க் இருந்திருக்கும்... சந்தேகமில்லாம இது கொலைதான். ஏன்னா இஞ்செக்ஷன் அடையாளம் விக்டிம்மோட பின் கழுத்தில் இருக்கு..."

"வேற ஏதாவது முக்கிய விபரங்கள்?"

"எஸ்... அதுக்காகத்தான் உங்களை இங்கே கூப்பிட்டனுப்பினேன்..."

"என்ன விபரம் டாக்டர்...?"

டாக்டர் பக்கத்தில் இருந்த நாற்காலிக்கு சாய்ந்து கொண்டே கேட்டார்.

"செத்துப்போன கதிரின் உடை பாக்கெட்டுகளை செக் பண்ணி பார்த்தீங்களா...?"

"பார்த்தோம்... ஆனா... உபயோகமான தகவல் எதுவும் எங்களுக்குக் கிடைக்கலை..."

"நீங்க சரியா பார்க்கலைன்னு நினைக்கிறேன்."

"எப்படிச் சொல்றீங்க டாக்டர்...?"

"கதிர் அணிந்திருந்த பனியனின் உட்புறம் ஒரு பாக்கெட் இருக்கு... அந்த பாக்கெட்டை நீங்க கவனிக்கவேயில்லை..."

"பனியனில் ஒரு பாக்கெட் இருந்ததா?"

"ஆமா... போஸ்ட் மார்ட்டம் பண்றதுக்காக உடைகளை அகற்றினபோது ஆர்டர்லிதான் அதைக் கவனிச்சான்..."

"அந்த பாக்கெட்டில் ஏதாவது இருந்ததா டாக்டர்..."

"எஸ்... அதனாலதான் உங்களைக் கூப்பிட்டு அனுப்பினேன்... பாக்கெட்டில் இருந்த பொருள் ஒருவேளை உங்களுக்கு கேஸை நகர்த்திச் செல்ல உபயோகமான தடயமா இருக்கலாம்..."

"பாக்கெட்டுக்குள்ளே என்ன இருந்தது?"

"வேணு..." என்று டாக்டர் அழைக்க - ஆஸ்பத்திரி பணியாளர் அந்த பொட்டலத்தை ஜாக்கிரதையாய் எடுத்து வந்தார்.

"இதுல என்ன இருக்கு?"

பிரித்துப் பார்த்த இன்ஸ்பெக்டர் திகைத்தார்.



"டாக்டர்! வாட் ஈஸ் தீஸ்?"

"நீங்கதான் சொல்லணும்."

"ஏதோ சாம்பல் மாதிரி தெரியுது!"

"சாம்பலேதான்."

"சாம்பலா...? அதை எதுக்காக இந்த கதிர் உள்பாக்கெட்டில் ரகசியமாக வெச்சிருந்தான்..."

டாக்டர் புன்னகைத்தார்.

"அதை நீங்கதான் கண்டு பிடிக்கணும்."

---

## 6

---

தருணின் முதுகுப்புறமிருந்து சற்று தடித்த குரல் கேட்டது.

"தருண்... நீ உயிரோடு இந்த பார்க்கை விட்டு வெளியே போக வேண்டும் என்றால் எங்கள் ஆளை விட்டுவிடு..."

தருண் திரும்பிப் பார்க்க முயன்றபோது - பிஸ்டல் பிடரியில் இன்னும் ஆழமாய் அழுத்தியது.

குரல் அதட்டலாய் உறுமியது.

"முதலில் நாங்கள் சொன்னதைச் செய் தருண்... இல்லையென்றால் தாட்சண்யம் பார்க்காமல் ட்ரிக்கரை அழுத்தி விடுவோம்... தோட்டாவுக்கு பலியாகி ரத்தக் களறியாகி விடுவாய்..."

நிராயுதபாணியாய் நிற்கிற தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தான் தருண்.

முறுக்கிப் பிடித்திருந்த சர்தார்ஜியின் கைகளைத் தள்ளினான்.

சர்தார்ஜி கைகளைத் தடவிவிட்டுக் கொண்டே தருணைப் பார்த்துச் சிரித்தான்.

"இப்படி ஏதாவது 'தேசம்... நாடு' என்று மண் பற்றோடு இருப்பாய் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் என்னுடைய பாதுகாப்புக்கு என்று இருவரைக் கூட்டி வந்தேன்...! நாங்கள் தரும் வேலையைச் செய்ய முடியாதென்றால் முடியாது என்று சொல்லிவிட்டுப் போவதுதானே...? அதை விட்டு விட்டு இப்படி தேசத்திற்கு அதிகப்படியாய் விசுவாசம் காட்டாதே தருண்...! அப்புறம் இந்த நன்றி கெட்ட தேசத்திடம் ஒரு நாள் இல்லையென்றால் ஒரு நாள் நீ ஏமாந்து போவாய்..."

பின்புறக் குரல் சர்தார்ஜியை அவசரப்படுத்தியது.

"நேரமாகிறது. நாம் போகலாம்..."

"குட்பை தருண்... வாழ்க்கையில் ஒரு பணக்காரனாகும் சந்தர்ப்பத்தை நழுவ விட்ட உனக்கு என் அனுதாபங்கள்... உன் ரெஜிமெண்டில் யாருக்கு அந்த யோகமோ தெரியவில்லை..."

சர்தார்ஜி சிரித்துக் கொண்டே பின்பக்கமாய் போக,

பின்முதுகில் படிந்திருந்த பிஸ்டலின் ஜில்லிப்பு விலகிற்று.

தருண் சில விநாடி கழித்துத் திரும்பிப் பார்த்தான்.

ஓவர் கோட் காற்றில் படபடக்க மூன்று ஆசாமிகள் பார்க்கின் பின்புற காம்பௌண்ட் சுவரை நோக்கி வேகமாய் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சுவர் விளிம்பில் கையை ஊன்றி வெகு வேகமாய் அந்தப் பக்கம் குதித்தார்கள். மறைந்தார்கள்.

தருண் வேகமாய் ஓடிப்போய் சுவரில் தொற்றி எட்டிப் பார்த்தான்.



ஒரு நீல நிற அம்பாஸிடரில் அவர்கள் ஏறிக் கொண்டிருந்தார்கள். டீஸல் புகையை கறுப்புக் கோலமாய்த் துப்பிவிட்டு அம்பாஸிடர் ஜர்ரென்று உறுமியபடி வேகமெடுத்துப் பறந்தது.

தருண் ஏமாற்றத்தோடும், இயலாமையோடும் - வேகம் எடுத்துப் போகிற அந்தக் காரையே வெறித்துப் பார்த்தான்.

---

## 7

---

அந்த அலுவலகம் வெளிநாட்டுத் தூதரகத்தில் இருந்தது.

முன்புறம் பராமரிக்கப்பட்ட பூங்கா. அதில் இடைவெளி விட்டு நிறுத்தப்பட்ட கொடிக்கம்பங்களில் பல வண்ணங்களில் பட்டுத்துணிகள் கொடிகளாய் மாறிப் படபடத்தன. பெல்ஜியம் கண்ணாடி வேய்ந்த ஜன்னல்கள், கதவுகள் வெயிலில் மினுமினுத்தன.

"ஸார்... ஹியர் ஈஸ் த பார்க்கிங்..." என்று இடப்புறம் கை காட்டினான் இளம் வயது கேட் செக்யூரிட்டி.

டூ வீலருக்கும், ஃபோர் வீலருக்கும் தனித் தனியாய் பார்க்கிங் ஷெல்ட்டர்கள் அமைக்கப்பட்டிருக்க, ஏராளமாய் மாருதிகளும்... டாட்டா எஸ்டேட்களும் ஒழுங்கான வரிசையில் சொருகப்பட்டிருந்தன.

ஜோசப் போலீஸ் ஜீப்பை அந்த வரிசையில் சொருகினார்.

நவநீதி ஜீப்பை விட்டுக் குதித்தார்.

ஆபீஸ் கட்டிடத்தைப் பார்த்துக் கொண்டே நடந்தார்கள்.

"பெரிய கம்பெனி போலிருக்கே...?"

"ஃபாரின் கொலாப்ரேட்டட்... அமெரிக்கன் பேஸ்டு கம்பெனி ஸார்..."

"இங்கே என்ன மேனுபக்சரிங்...?"

"இண்டஸ்ட்ரீஸ்க்குத் தேவையான கெமிக்கல்ஸ்ஸை ரிசர்ச் பண்றாங்க ஸார்... இம்ப்ரூவ்டு காம்பொஸிஷன்களை ரெக்கமண்ட் பண்றதும் இவங்க வேலை..."

"கதிர் கொலையானதுக்கு ஏதோ கெமிக்கல் விவகாரம்தான் காரணமாக இருக்கும்ன்னு தோணுது ஜோஸப்..."

"இருக்கலாம் ஸார்..."

"சாம்பலை எதுக்காக பொட்டலமாகக் கட்டி பத்திரப்படுத்தி வெச்சிருந்தான்னு புரியலை..."

"சாம்பல் மாதிரி தோற்றம் அளிக்கும் கெமிக்கல் ப்ராடக்ட்டா இருக்கலாமோன்னுதான் ஆரம்பத்தில இருந்தே சந்தேகம் ஸர்..."

"ஃபாரன்சிக் லேபில் டெஸ்ட் பண்ணி, 'அது கெமிக்கல் இல்லை. அது வெறும் சாம்பல்தான்'னு சொல்லிட்டாங்களே?"

"வெறும் சாம்பலா இருந்தாலும்... அதில என்னமோ விவகாரம் இருக்கு ஸார்..."

"பார்க்கலாம்... இன்னிக்கு விசாரணையில் அதுக்கு விடை கிடைச்சாலும் கிடைக்கலாம்..."

பேசிக்கொண்டே ஆபீஸ் போர்டிகோவுக்கு வந்து மார்பிள் படிக்கட்டுகளில் ஏறினார்கள்.

பெரிய பெரிய பித்தளை வாஸ்களில் போன்சாய் மரங்கள் சிரத்தையாய் பராமரிக்கப்பட்டிருக்க அசாத்திய அமைதியுடன் ரிசப்ஷன் ஹால் இருந்தது.

போனிடெயில் ரிசப்ஷனிஸ்ட் ஒருத்தி தொலைத் தொடர்பு மின்னணு சாதனங்களை



அநாயாசமாய்க் கையாண்டு கொண்டிருந்தாள்.

ஃபேகஸ் மிஷின் துப்பிய காகிதத்தைக் கிழித்துக் கொண்டே இவர்கள் இருவரையும் ஏறிட்டாள்.

"எஸ் ப்ளீஸ்..."

"கதிர் கொலை சம்பந்தமாக ஒரு விசாரணையை நடத்த வேண்டியிருக்கு."

"நீங்க யாரைப் பார்க்கணும்?"

"உங்க சுப்பீரியர்."

"ஜஸ்ட் ஏ செக்கண்ட் ஸார்..."

இண்டர்காமுக்கு வேலை கொடுத்தாள் அவள்.

அதனுடன் ரகசியம் பேசினாள். முப்பது விநாடிகளுக்குப் பின் நிமிர்ந்தாள்.

"இன்ஸ்பெக்டர்... அஸிஸ்டெண்ட் மேனேஜர் ஈஸ் வெயிட்டிங் ஃபார் யூ..."

"அவர் அறைக்கு எப்படிப் போக வேண்டும்...?"

"அந்த வராந்தாவில் வலதுபுறம் திரும்பிச் செல்லுங்கள்... கதவில் எழுதியிருக்கும்..."

"தாங்ஸ்..."

அவள் சொன்ன வழியில் நடந்து அந்தக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசித்தார்கள்.

"ப்ளீஸ்... கமின் இன்ஸ்பெக்டர்... ஐ யம் அஸிஸ்டெண்ட் மேனேஜர் சுசித்ரா..."

அந்த சல்வார் கமீஸ் பெண்மணி அவர்களை வரவேற்று உட்கார வைத்தாள்.

ஜோசப் சொன்னார், "கதிர் மர்டர் சம்பந்தமா ஒரு என்கொயரி."

"கேளுங்க இன்ஸ்பெக்டர்."

"கதிர் எப்படி மேடம்...?"

"இன் வாட் சென்ஸ்?"

"பொதுவா."

"ரொம்ப திறமையான கெமிஸ்ட்... எங்க கொலாப்ரேஷன் கம்பெனியைச் சேர்ந்தவங்க. ஃபாரின்ல இருந்து அடிக்கடி வருவாங்க... கதிரோட ரசாயன அறிவைப் பார்த்து பல சமயங்களில் அவங்களே ஆச்சர்யப்பட்டுப் போயிருக்காங்க."

"பர்சனலா கதிர் எப்படி...?"

அந்த சசித்ரா லேசான தயக்கத்துடன் சொன்னாள்.

"எந்த அளவுக்கு அவனுக்கு தொழில்ல திறமை இருக்கோ... அதுக்கு நேர் எதிரா அவனுடைய பர்சனல் பிஹேவியர்ஸ்..."

"மோசமான காரெக்டரா?"

"அப்படிச் சொல்ல முடியாது... ஆனா அவனோட பர்சனல் ஆக்டிவிட்டீஸ் சரியில்லை."

"கொஞ்சம் விளக்கமா சொல்ல முடியுமா?"

"குடிப்பழக்கம் இருக்கு... அதனாலேயே நல்ல சாலரி இருந்தும் எப்பவும் பத்தாக்குறைதான்... இன்கிரிமெண்ட்டுக்காக நச்சரிச்சிக்கிட்டே இருப்பான். அவனுக்காக மேனேஜ்மெண்ட்ல பேசிப் பேசியே எனக்கு அலுத்துப் போச்சு."

"கதிர்க்கு எவ்வளவு சம்பளம்...?"

"கிட்டத்தட்ட எட்டாயிரம். ஆனா தினமும் பார்ல உக்காந்து இருநூறு முந்நூறு ரூபாய்க்கு குடிப்பான். என்ன மிச்சமாகும்...? தங்கச்சிக்கு நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும்ங்கற ஆசையும் இருக்கு... ஆசை இருக்கிற அளவுக்கு பொறுப்பு கிடையாது."

"பணத் தேவை இருக்கறதால பணத்துக்காக கதிர் எதையும் செய்யத் தயாராவே இருப்பான் இல்லையா...?"

"எஸ்... ஏதோ வேண்டாத காரியத்தைப்



பண்ணப் போய்த்தான் அவனுக்கு இந்த நிலைமைன்னு நினைக்கிறேன்..."

"கதிரோட பனியன் உள் பாக்கெட்டில் ஒரு சின்னப் பொட்டலத்தில் கொஞ்சம் சாம்பல் இருந்தது... உங்களுடைய கெமிக்கல் ரிசர்ச்சில் சாம்பலுக்கு ஏதாவது இம்பார்ட்டென்ஸ் இருக்கா?"

அவள் விழிகளை அகலமாய் விரித்து, "சாம்பலா...?" என்றாள்.

"ஆமா..."

"நோ... நோ... நாங்க டீல் பண்றதெல்லாம் இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ்... மட்டுமே."

"அப்படின்னா கதிர் எதுக்காக சாம்பலை பத்திரமா எடுத்து வச்சிருந்தான்... உங்களால ஏதாவது ஊகிக்க முடியுதா...?"

"ஸாரி! தெரியலை."

தலையாட்டிவிட்டு சில விநாடிகள் இடைவெளி விட்ட சசித்ரா ஜோசப்பைப் பார்த்தபடி கேட்டாள்.

"சாம்பல்னு சொன்னீங்க... எதனோட சாம்பல்னு தெரியுமா இன்ஸ்பெக்டர்...?"

"தெரியலையே!"

"அது தெரிஞ்சாத்தான் என்னால ஏதாவது ஊகித்துச் சொல்ல முடியும்"

ஜோசப்பும் நவநீதியும் பார்த்துக் கொண்டார்கள்.

"மறுபடியும் இதை லேபுக்குத் தாணும்."

---

## 8

---

மேஜர் காசிநாத்துக்கு எதிரே நின்றிருந்தான் தருண்.

பக்கவாட்டு இருக்கையில் செக்யூரிட்டி

ஆபீஸர் தனது கனத்த சரீரத்தை நிரப்பியிருந்தார்.

காசிநாத் எஃகுக் குரலில் கேட்டார்.

"என்ன சொல்கிறாய் தருண்...? நம்முடைய ரெஜிமெண்ட் சென்ட்ரல் ஆபீஸில் வெடிகுண்டு வைக்கப் போகிறார்களா...?"

"ஆமாம் ஸார்..."

"யார் வைக்கப் போகிறார்கள்...?"

"'ரெட் கேட்' என்ற சர்வதேச தீவிரவாத கும்பல்தான் இங்கே டயனமைட் வைக்கப் போகிறது..."

"அது எப்படி சாத்தியம்?"

"இங்கே பணியாற்றி வரும் முக்கிய நபர் யாரையாவது பணத்தாசை காட்டி வீழ்த்தி அந்த நபரின் துணையோடு வெடிகுண்டைப் பொருத்தி வெடிக்க வைக்கத் திட்டம் தீட்டியுள்ளார்கள்..."

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்...?" குறுக்கிட்டார் செக்யூரிட்டி ஆபீஸர்.

"பணத்தைக் காட்டி எனக்கு வலை விரிக்கப் பார்த்தார்கள். ஆனால் நான் அவர்களின் வலையில் விழவில்லை..."

"விபரமாகச் சொல்லுங்கள்..."

தருண் ஷாப்பிங் சென்றபோது 'ரெட் கேட்' அமைப்பைச் சேர்ந்த சர்தார்ஜி தன்னை வந்து அணுகியதையும் ரத்தன் பார்க்கில் நடந்த விஷயங்களையும் விவரித்தான்.

"நான் அந்த சர்தார்ஜியை மடக்கிப் பிடிக்க முயற்சித்தேன். ஆனால் என்னை பிஸ்டல் முனையில் நிற்க வைத்து அவர்கள் தப்பிச் சென்று விட்டார்கள்..."

"ஏதோ பெரிய சதிக்கு முன்னோட்டம் இது என்று அவர்கள் சொன்னதாகச் சொன்னாயே



- அந்தப் பெரிய சதி என்ன...?" மேஜர் கேட்டார்.

"அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை ஸார்..."

காசிநாத் அவனை ஆழமாய்ப் பார்த்து விட்டு - குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்.

"இதெல்லாம் ரத்தன் பார்க்கில்தானே நடந்தது...?"

"ஆமாம் ஸார்..."

"பப்ளிக் ப்ளேஸில் இவ்வளவு களேபரம் நடந்திருக்கிறது... நடந்த சம்பவத்தை பொதுமக்கள் யாரும் பார்க்கவில்லையா...? நீ சொல்வதற்கு சாட்சி ஏதும் உள்ளதா தருண்...?"

தருண் நிமிர்ந்தான்.

"ச... சாட்சியா..."

"எஸ்..."

"இ... இல்லை ஸார்..."

"என்ன தருண்... பொது இடமான பார்க்கில் நடந்த சம்பவத்தை யாராவது ஒருவர் கூடவா பார்க்கவில்லை...?"

"ரகசியமாய்ப் பேச வேண்டும் என்று அந்த சர்தார்ஜி கூப்பிட்டான்... அதனால் ஆளரவம் இல்லாத ரத்தன் பார்க்கின் ஒதுக்குப் புறத்துக்குச் சென்று விட்டோம் ஸார்..."

"பிஸ்டலைக் காட்டி அவர்கள் தப்பியதாய் வேறு சொல்கிறீர்கள்...?"

"ஆமாம்! பார்க்கின் பின்பக்க மதில் சுவரில் தொற்றித் தப்பி விட்டார்கள் ஸார்... அங்கே தயாராய் ஒரு அம்பாஸிடர் கார் நின்றிருந்தது... அவர்களை ஏற்றிக்கொண்டு கார் பறந்து விட்டது..."

"கார் நம்பரையாவது சொல்..."

"அடர்த்தியாய் டீஸல் புகை கிளம்பியதில்

நம்பரை நோட் பண்ண முடியவில்லை ஸார்..."

காசிநாத் செக்யூரிட்டி ஆபீஸரிடம் திரும்பிக் கேட்டார்.

"மிஸ்டர் ஜோஷி... தருண் சொல்கிற மாதிரி 'ரெட்கேட்' என்று இண்டர்நேஷனல் லெவலில் நக்ஸலைட் க்ரூப் ஏதேனும் இருக்கிறதா...?"

இடவலமாய்த் தலையாட்டி மறுத்தார் செக்யூரிட்டி ஆபீஸர் ஜோஷி.

"நோ... ஸார்... எனக்குத் தெரிந்து அப்படி எதுவும் இல்லை..."

"கேட்டாயா தருண்... இவர் புலனாய்வுப் பிரிவில் இருக்கிறார்... எல்லா அமைப்புகள் பற்றியும் தெரிந்தவர். உலகத்தின் எந்த மூலையில் எந்த ஒரு தீவிரவாத இயக்கம் முளைத்தாலும் இவருக்கு அதைப் பற்றிய விவரம் இண்டெலிஜென்ஸ் பிரிவின் மூலமாய் வந்து சேர்ந்து விடும்..."

"ஸ... ஸார்... அவன் அப்படித்தான் சொன்னான்... நான் சொல்லும் விபரங்களை தயவு செய்து அலட்சியப்படுத்தாதீர்கள்... நம் அலட்சியம் ரெஜிமெண்ட் மெயின் ஆபீஸில் ஒரு வெடிகுண்டு விபத்துக்கு வழிகோலிவிடும்."

"நீங்கள் சொல்லும் அரைகுறை விபரங்களை வைத்து நாம் செய்வதற்கு ஏதுவுமில்லை தருண்..." என்றார் ஜோஷி.

காசிநாத் தலையசைத்தார்.

"நீ போகலாம்... தருண்..."

அவன் தயங்கித் தயங்கி வெளியேறினான்.

அவன் சென்றுவிட்டதை உறுதிப் படுத்திக் கொண்டு ஜோஷி மெல்லச் சொன்னார்.

"தருணைக் கண்காணிப்பதற்காக நான் நியமித்திருந்த ஆட்கள் ஷாப்பிங்



காம்ப்ளக்ஸுக்கு சற்றுத் தள்ளி இருந்த தெருமுனையிலிருந்து ஆட்டோவைப் பின் தொடர்ந்து வந்திருந்தார்கள்... குவார்ட்டர்சில் இறங்கும்போதுதான் தருண் வரவில்லை... அவன் மனைவி உமா மட்டும்தான் ஆட்டோவில் திரும்பி வந்திருக்கிறார் என்ற விபரம் ஃபாலோ பண்ணியவர்களுக்குத் தெரிந்திருக்கிறது... அதிர்ச்சியாகி அந்தப் பெண்ணுக்கு சந்தேகம் வராமல் இருக்க கேஷுவலாய் விசாரித்துப் பார்த்திருக்கிறார்கள்... தருண் அஃபிஷியலாய் யாரையோ சந்தித்துப் பேச வேண்டியுள்ளதாக மனைவியிடம் பொய் சொல்லியிருக்கிறான்... என்பது தெரிந்தது. அப்படிச் சொல்லித்தான் மனைவியை தனியாய் ஆட்டோவில் ஏற்றி அனுப்பி விட்டு ஃபாலோ பண்ணும் நம்மவர்கள் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு எங்கோ நழுவி விட்டான் தருண்..."

"நமக்கு அவன் மேல் சந்தேகம் எழக்கூடாது என்கிற எண்ணத்தில் அவனாகவே வலிய வந்து 'ரெட்கேட்' அது இது என்று ஏதேதோ கட்டுக் கதைகளை அவிழ்த்து விடுகிறானா...?"

ஜோஷி புன்னகைத்தார்.

"யு ஆர் ஸர்ட்டன்லி கரெக்ட் ஸார்..."

"யாரோ வெடிகுண்டு வைக்கப் போவதாக நம்மிடம் எச்சரித்து விட்டு அவனே கூட ஏதேனும் அசம்பாவிதங்களில் ஈடுபடக் கூடும் இல்லையா...?"

"ஆமாம்... அதற்கும் வாய்ப்பிருக்கிறது..."

"ஸோ... தருண் மேல் கண்காணிப்பை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும்..."

"எஸ்... அப்போதுதான் கையும் களவுமாக அவனை ஆதாரத்தோடு பிடிக்க முடியும்..."

சொல்லிவிட்டு ஜோஷி - ஒரு ராணுவ சல்யூட் தந்து விடை பெற்று வெளியே வந்தார்.

---

## 9

---

**யா**மினி படிகளில் வேகமாய் தடதடத்துக் கீழே வந்தாள்.

பிங்க் நிற மேக்ஸியில் ஒரு தேவதை மாதிரி இருந்த அவள், நவநீதி-ஜோசப்பின் காக்கி யூனிபாரம்களைப் பார்த்ததும் அவள் நெற்றிப் பரப்பில் ஒரு சின்ன வியப்புவரி பதிவாகியது.

உடன் வந்த ஹாஸ்டல் வார்டன் - யாமினியிடம் திமிர்ந்தாள்.

"போலீஸ் உன்னைப் பார்க்க வந்திருக்காங்க யாமினி..."

சொல்லிவிட்டு வார்டன் பெண்மணி தனது கனத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு அவளுடைய ரூமை நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள்.

யாமினி அவர்களை ஏறிட்டாள்.

"எஸ்...! வாட் கேன் ஐ டூ ஃபார் யூ?"

"கதிர் பத்தி-உன்கிட்டே பேசணும்..."

மெல்லிய திகைப்போடு அவரை ஏறிட்டாள்.

"ஸ... ஸார்... நீங்க...?"

"நீ காதலிக்கிற விஷயத்தை ரகசியமாக வெச்சிருந்தாலும்... கதிர் மூலமா உங்க காதல் விவகாரம் லேசா கசியத்தான் செஞ்சிருக்கு. விசாரணையில் நீ அவனைக் காதலிச்ச விபரத்தை தெரிஞ்சிகிட்டுத்தான் நாங்க இங்கே வந்திருக்கோம் யாமினி..."



இரண்டொரு பெண்கள் அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே கடந்து செல்ல - லேசான பதட்டத்தோடு அவள் சொன்னாள்.

"ஸார்... ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க... ரூமில் போய் ட்ரஸ் மாத்திட்டு வந்துடறேன்... எதிர்ல ஒரு ரெஸ்டாரெண்ட் இருக்கு... அங்கே உக்காந்து பேசலாம்."

நவநீதி தலையசைத்தார்.

"இட்ஸ் ஆல் ரைட்... போய்ட்டு வா..."

வேகமாய்ப் படிகளில் ஏறினாள் யாமினி.

நவநீதி, ஜோசப்பிடம் திரும்பிச் சொன்னார்.

"இவகிட்ட உபயோகமான தகவல் கிடைக்கும்னு தோணுது ஜோசப்..."

"எப்படி சொல்றீங்க ஸார்...?"

"கதிரோட ஆபீஸில் விசாரிச்சப்ப இவளைப் பத்திக் கிடைச்ச தகவல்களை வெச்சுத்தான்..."

"எனக்குப் புரியலை ஸார்."

"கதிரோட கொலீக், இந்த யாமினியைப் பத்தி என்ன சொன்னான்னு ஞாபகப்படுத்திப் பாருங்க..."

"கதிரை சந்திக்க யாமினி அடிக்கடி ஆபீஸுக்கு வருவான்னு சொன்னான்..."

"அப்புறம்...?

"பெரும்பாலும் சாயந்திரங்கள்ல யாமினி தவறாம ஆஜராயிடுவான்னு சொன்னான்...""

"முக்கியமான பாயிண்ட்டை விட்டுட்டீங்களே..."

"என்ன...?"

"கடந்த பத்து நாளா யாமினி வரலைன்னு சொன்னான்..."

ஜோசப் தலையை ஆட்டினார்.

"எஸ் ஸார்... போன் கூடப் பண்ணிப்

பேசலைன்னு சொன்னான்..."

"கரெக்ட்... ஒருநாள் தவறாம சந்திச்சிக்கிறவங்க... பத்து நாளா பார்த்துக்கலைன்னா... அது கவனத்துக்குரிய விஷயம்தானே...?"

"எஸ்... ஸார்..."

"இவங்க சந்திப்பு நின்னு போனதுக்குக் காரணம் என்னன்னு நமக்குத் தெரியணும்... அதில் ஏதோ விஷயம் இருக்கலாம்."

"யாமினி வரட்டும் ஸார்... விசாரிச்சிடலாம்..."

நேர் எதிர் சுவரிலிருந்த குவார்ட்ஸ் கடிகாரத்தில் பெரிய முள் நொண்டிக் கொண்டிருக்க - காத்திருந்தார்கள்.

சரியாய் ஏழு நிமிஷம் கழித்து -

ஊதா நிற சிந்தெடிக் ஸாரிக்கு மாறி அங்கே பிரசன்னமானாள் யாமினி.

"வாங்க ஸார் போகலாம்..."

நடந்து கொண்டே சொன்னாள்.

"இங்கே நின்னு பேசினா எல்லாரும் ஒரு மாதிரி வேடிக்கை பார்க்கறாங்க ஸார்..."

"இப்போ மட்டும்...?"

"இப்போ நான் உங்களை ரெஸ்டாரெண்டுக்குக் கூட்டிட்டுப் போறதால உங்களை என் சித்தப்பான்னோ... பெரியப்பான்னோ பொய் சொல்லிடுவேன்..."

"சாமர்த்தியமான பொண்ணுதான் நீ..."

"ஸார்... நீங்க என்ன கேட்டாலும் சொல்றேன்... என்னால முடிஞ்ச அளவுக்கு ஒத்துழைப்புத் தர்றேன்... ஆனா தயவு செஞ்சு என்னைப் பத்தி பேப்பர்ல நியூஸ் வந்துடாம பார்த்துக்கங்க... 'அழகியிடம் விசாரணை... கதிரின் ரகசிய காதலி'ன்னு அசிங்க அசிங்கமா பேப்பர்காரங்க எழுதிடுவாங்க..."

"சம்பந்தம் இல்லாதவங்களைப் பத்தியெல்லாம் நாங்க ப்ரஸ்ஸுக்கு நியூஸ் தர மாட்டோம்... கதிர் கொலையானதில் உனக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லைன்னா... நீ பயப்பட வேண்டிய அவசியமில்லை... உன்னைப் பத்தியோ... உன்கிட்டே விசாரிச்சதைப் பத்தியோ நாங்க யார்கிட்டேயும் மூச்சு விட மாட்டோம்..."

அவள் பெரிய கண்களில் அதிர்ச்சியை வெளிப்படுத்தினாள்.

"என்னைப் பார்த்தா கொலைகாரி மாதிரியா உங்களுக்குத் தெரியுது...? கொலையில் எனக்கு சம்பந்தம் இருக்குமான்னு நீங்க சந்தேகப்படறதே அநியாயம் ஸார்... நான் கதிரை உயிருக்கு உயிரா காதலிச்சவள்..."

"அப்படின்னா நீ ஏன் கதிர் இறந்தப்புறம் உன்னை வெளிக்காட்டிக்காம கமுக்கமா இருந்துட்டே...?"

"நான் ஒரு சாதாரண தமிழ் பொண்ணு ஸார்... என்னை நம்பி ஊர்ல வயசான அம்மா, அப்பா இருக்காங்க... கதிர் உயிரோட இருந்தா எப்படியும் ஒரு நாள் அவங்ககிட்ட விஷயத்தைத் தெரியப்படுத்தி கல்யாணம் செய்துகிட்டிருப்பேன்... செத்துப் போனவரைக் காதலிச்சேன்னு நான் எப்படி ஸார் வெளிச்சம் போட்டுக் காட்ட முடியும்...? இந்த சொஸைட்டிக்கு நான் பயப்பட வேண்டி இருக்கு ஸார்..."

கூட்டமில்லாத ரெஸ்டாரெண்டில் ஆரஞ்சு நிற நாற்காலிகளுக்குத் தங்களைக் கொடுத்துக் கொண்டார்கள் மூன்று பேரும்.

சில விநாடி ஆசுவாசத்துக்குப் பின் நிதானமாய்க் கேள்வியைத் தூக்கிப் போட்டார் நவநீதி.

"கடைசி வரைக்கும் நீ கதிரை நிஜமா காதலிச்சியா...?"

"அதிலென்ன ஸார் உங்களுக்கு சந்தேகம்...?"

"கடைசியா நீ கதிரை எப்போ சந்திச்சே...?"

நவநிதி கேட்டதும் - அவள் முகம் லேசாய் மாறியது.

"உங்க சந்தேகத்துக்கான காரணம் எனக்குப் புரியுது ஸார்... காதலிக்கறவங்களுக்கிடையில் கோபதாபங்கள் ஏற்படறது இயற்கை... அதை வெச்சு திஜமாத் தான் காதலிச்சியான்னு சந்தேகப்படறது சரியில்லை... பத்து நாளா நான் அவரைப் பார்க்கலை... அவரோட பேசலை... காரணம் கோபம்தான்..."

"உங்க கோபத்துக்குக் காரணம்...?"

"என்னைவிட இன்னொரு ஆள் அவருக்கு முக்கியமாப் போயிட்டான். எங்க சந்திப்பில் கரடி மாதிரி அந்த ஆள் வந்தான்... அதை இவரும் அனுமதிச்சார்...எனக்கு அவனைக் கண்டாலே பிடிக்கலை. அதில்தான் மனஸ்தாபம் வந்தது! 'பத்துப் பதினைஞ்சு நாளைக்கு அந்த ஆளோடு வேலை இருக்கு... போன்ல மட்டும் நாம பேசிக்கலாம்'ன்னு சொன்னார்... 'அது மட்டும் எதுக்கு... நான் போனிலும் பேசப் போறதில்லை'ன்னு கோபத்தோட சொல்லிட்டேன்..."

"யார் அவன்...?"

"தெரியாது! அவன் வந்ததும் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர் மாதிரி அவசர அவசரமா அவனோட பைக்கில் ஏறிப் போயிடுவார்."

"பைக் நெம்பர் நினைவிருக்கா...?"

"ஞாபகத்தில் சட்டுன்னு பதிவாகற மாதிரி நம்பர்தான் ஸார் அது... இருபத்திரண்டு நாற்பத்தி நாலு..."

"தாங்க்யூ மிஸ் யாமினி... தேவைப்பட்டா



திரும்ப நாங்க உன்னைத் தொடர்பு கொள்றோம்..."

இருவரும் அவளிடம் விடைபெற்று வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டலுக்கு அருகே நிறுத்தியிருந்த ஜீப்புக்கு வந்தார்கள்.

வயர்லஸ் உயிர் பெற்று அழைத்துக் கொண்டிருந்தது.

அதை இயக்கிப் பேசிய ஜோசப் பேசி முடித்து விட்டுச் சொன்னார்.

"ஸார்... ஃபாரன்சிக் லேபில் நம்மை அவசரமாய்க் கூப்பிடுகிறார்கள்..."

"என்ன விஷயம் என்று கேட்டீர்களா?"

"கேட்டேன். நேரில் வரச் சொல்கிறார்கள்."

"கிளம்புங்கள்."

ஜீப் கிளம்பியது.

போக்குவரத்தில் பத்து நிமிஷங்கள் ஊர்ந்த ஜீப் அந்த காவி நிற அரசாங்கக் கட்டிடத்தின் முன்னே மூச்சையாகி நின்றது.

ஜீப்பை விட்டு இறங்கி உள்ளே சென்றார்கள்.

ஃபாரன்சிக் நிபுணர் அவர்களை எதிர்கொண்டு அமர வைத்தார். நவநிதி கேட்டார். "எனிதிங் இம்ப்பார்ட்டண்ட் ஸார்?"

"எஸ் இன்ஸ்பெக்டர்... விஷயம் கொஞ்சம் சீரியஸ்ன்னு தோணிச்சு... இம்மீடியட்டா இன்ஃபார்ம் பண்ணினா நீங்க கேஸை சரியான திசையில் கொண்டு போக உதவியா இருக்கும்ன்னு நினைச்சேன்... அதனால்தான் உடனே உங்களைத் தொடர்பு கொண்டேன்..."

"விஷயத்தைச் சொல்லுங்க... ஸார்..."

"நீங்க குடுத்தீங்களே சாம்பல் சாம்பிள்... அதைத் தரோவா பரிசோதனை பண்ணினதில் அந்த அதிர்ச்சியான முடிவு தெரிஞ்சது..."

நவநிதி குழப்பமாய் பார்க்க - அதிகாரி தொடர்ந்தார்... "அது எரிக்கப்பட்ட மனித உடம்பின் சாம்பல்..."

"என்னது...?"

நவநிதி, ஜோசப் திகைப்புடன் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

---

## 10

---

சுனில் அதிர்ச்சியோடு தருணைப் பார்த்தான்.

இருவரும் ரெஜிமெண்ட்டை ஒட்டியிருந்த குவார்ட்டர்சின் வரவேற்பறையில் இருந்தார்கள்.

உமா டீபாயின் மேல் தேநீர் கோப்பைகளை வைத்தாள்.

"டீ சாப்பிடு சுனில்..."

"டீ சாப்பிடறது இருக்கட்டும்... இவ்வளவு நடந்து இருக்கு... நீ சாவகாசமா என்கிட்டே சொல்றியே...?"

"சுனில்... நீ என்னோட திக் ஃப்ரெண்டா இருந்தாலும் டெஸிக்னேஷன் பிரகாரம் நீ எனக்கு ஜுனியர். மீட்டிங் போட்டு இந்த விவகாரத்தை ரகசியமா வெச்சிக்க சொல்லி இன்ஸ்ட்ரக்ட் பண்ணினாங்க... அதனால்தான் உன்கிட்டே ஆரம்பத்தில் சொல்லலை..."

"இப்போ என்கிட்டே ரகசியத்தைத உடைச்சதுக்குக் காரணம்...?"

"ரத்தன் பார்க்கில் நடந்த விஷயங்களை அவங்க நம்ப மாட்டேங்கறாங்க... மேஜர் நம்பற மாதிரி இருந்தாலும் ... செக்யூரிட்டி ஆபீஸர் எதையாவது சொல்லி நம்பவிட



மாட்டேங்கறார்..."

"இந்த மாதிரி விஷயங்களில் அலட்சியம் காட்டறது அவ்வளவு நல்லதில்லையே தருண்..."

"அது நமக்குப் புரியுது... ஆனா அவங்க அலட்சியமா இருக்காங்களே...

உமா கவலையோடு சொன்னாள்.

"உயரதிகாரிகளே நீங்க சொல்றதை ஒத்துக்கலைங்கறப்போ நீங்க என் அநாவசியமா அலட்டிக்கறீங்க... உங்களால முடிஞ்சது அவங்களுக்கு விஷயத்தை இன்பார்ம் பண்றதுதான்... அதை நீங்க செஞ்சிட்டீங்க... அதை நம்பறதும்... நம்பாததும் அவங்க இஷ்டம்..."

"அப்படி இல்லை உமா... தீவிரவாதிகள் ரெஜிமெண்ட்டுக்குள்ளே சேதம் விளைவிக்கணும்கிற எண்ணத்தோட இருக்காங்க... இவங்க அலட்சியத்துக்கு அப்பாவி சோல்ஜர்ஸ்தான் பலியாவாங்க... விஷயம் தெரிஞ்சே நாம சும்மா இருக்கலாமா...?"

"என்ன செய்ய முடியும்...?"

"அதைப் பத்திப் பேசத்தான் சுனிலைக் கூப்பிட்டேன்."

சுனில் யோசனையாய் சில விநாடிகளைக் கரைத்தவன் மெதுவாய் நிமிர்ந்து தருணை ஏறிட்டான்.

"செக்யூரிட்டி ஆட்களின் உதவி இல்லாம நாமாக இதைத் தடுக்கணும்னா கஷ்டம்தான் தருண்..."

"வெடிகுண்டு வெடிச்சா பலியாகப் போற அப்பாவி வீரர்களின் கதியை நினைச்சுப் பாரு சுனில்... எவ்வளவு கஷ்டமா இருந்தாலும் அதை நாம தடுத்துத்தானே ஆகணும்...?"

"எப்படித் தடுக்கறது...?"

"ஒரு மெட்டல் டிடெக்டரை நாம சம்பாதிச்சாகணும்..."

"மெட்டல் டிடெக்டரா...?"

"எஸ்... கையடக்க மாடல் ஒண்ணு வேணும்... அது இருந்தா நாம தனிப்பட்ட முறையில் ரெஜிமெண்ட் முழுவதும் தினசரி இரண்டு வேளை யாருக்கும் தெரியாம சோதனை நடத்திடலாம்... வெடிகுண்டு யார் மூலமாவது வைக்கப்பட்டா அந்த மெட்டல் டிடெக்டர் அதை நமக்குக் காட்டிக் கொடுத்திடும்..."

கனில் தலையை ஆட்டினான்.

"இது நல்ல யோசனைதான்... டயனமைட் வெடிக்கறதைத் தடுத்துடலாம்... ஆனா வெச்சவன யாருங்கறதைக் கண்டு பிடிக்க முடியாதே...?"

"முதல்ல உயிர்ச் சேதத்தைத் தடுக்கறதுதான் முக்கியம்... செக்யூரிட்டி ஆபீஸர்க்கு விபரீதத்தைப் புரிய வெச்சா அப்புறம் ஆளைக் கண்டு பிடிக்கறது சுலபம்..."

"மெட்டல் டிடெக்டரை எப்படி ரெஜிமெண்ட்டுக்குள்ளே கொண்டு வர்றது...?"

ஒரு விநாடி யோசனைக்குப் பிறகு தருண் சொன்னான்.

"வெளியே இருந்து மெட்டல் டிடெக்டரை உள்ளே கொண்டு வர்றது ரிஸ்க் கனில்..."

"அப்படின்னா என்ன வழி...?"

"ரெஜிமெண்ட் செக்யூரிட்டி டிபார்ட்மெண்ட்டிலேயே ஹேண்டி மெட்டல் டிடெக்டர் இருக்கு... யார்க்கும் தெரியாம அதை நாம கையகப்படுத்தினா போதும்..."

சொன்ன தருணைக் கவலையோடும், பயத்தோடும் பார்த்தான் கனில்.

# 11

பேச்சிலர்ஸ் மேன்ஷனிலிருந்த அந்த இளைஞன் சற்றே பயத்தோடு நவநிதியையும், ஜோசப்பையும் பார்த்தான்.

கசகசப்பாய்க் கிடந்த கட்டிலை அவசர அவசரமாய் சுத்தம் செய்து விட்டுச் சொன்னான்.

"உக்காருங்க ஸார்..."

சுவர் பூராவும் போஸ்டர்களில் வெளிநாட்டு நடிகைகள் ஏறக்குறைய முற்றும் துறந்திருந்தார்கள்.

அவர்கள் உட்கார்ந்தபின் மெல்லக் கேட்டான்.

"என்னை எதுக்காக விசாரிக்க வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"உன் பேர் கணேஷ்தானே...?"

"ஆமா ஸார்..."

"எங்கே வொர்க் பண்றே...?"

"மெட்ரோ வாட்டர் போர்டுல ஸார்..."

"கதிரோடு உனக்கு எவ்வளவு நாளா பழக்கம்...?"

ஜோசப் கேட்டதும் அவன் ஒரு விநாடி முகம் பூராவும் திகைப்பை நிரப்பிக் கொண்டான்.

"எந்தக் கதிர் ஸார்...?"

அவன் கேட்க நவநிதியும், ஜோசப்பும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

ஜோசப் தொடர்ந்து கேட்டார்.

"கதிர் என்கிற பெயரில் எத்தனை பேரை உனக்குத் தெரியும்...?"

"அந்தப் பேர்ல யாரையும் எனக்குத் தெரியாது... அதனால்தான் எந்தக் கதிர்ன்னு

கேட்டேன் ஸார்..."

"கதிர்ன்னு யாரையுமே உனக்குத் தெரியாதா...? அப்படின்னா யாமினி சொன்னதெல்லாம் பொய்யா...?"

"யாமினியா...? அது யாரு ஸார்...?"

"என்ன கணேஷ்... போலீஸ்கிட்டே விளையாடிப் பார்க்கறியா...?"

"ஸார்... நீங்க ஏதோ தப்பான விபரங்களோட என்கிட்டே வந்திருக்கிங்க. எனக்கு கதிரையும் தெரியாது. யாமினியையும் தெரியாது. நான் உண்டு... என் ஆபீஸ் உண்டுன்னு இருக்கறேன்... மேன்ஷனல கரூப் க்ருப்பா சேர்ந்துகிட்டு சீட்டு விளையாடுவாங்க. அதுல்கூட நான் கலந்துக்க மாட்டேன்... நான் தப்புத் தண்டாவுக்கெல்லாம் போகாதவன்."

"இருபத்திரண்டு நாப்பத்தி நாலு நம்பருள்ள யமஹா பைக் உன்னோடது தானே...?"

சற்றே இறுக்கமான குரலில் நவநீதி கேட்க,

பயத்தோடு தலையை அசைத்தான்.

"ஆமா ஸார்... நீங்க சொல்ற பைக் என்னோடதுதான்..."

"பத்துப் பதினைஞ்சு நாளுக்கும் மேலா நீ சாயந்தர நேரங்களில் அந்த பைக்கில் போய் கதிரை நீ சந்திச்சிருக்கே...?"

அந்த கணேஷின் முகத்தில் இப்போது சின்னதாய் ஒரு வெளிச்சம் அடித்தது.

"இப்பத்தான் எனக்கு விஷயமே புரியுது. பத்துப் பதினைஞ்சு நாளா பைக்கை சாயந்தர நேரங்களில் எடுத்துட்டுப் போனது என்னோட கெஸ்ட் ஸார்... நான் இல்லை..."

"கெஸ்ட்டா...? யாரது...?"

"தினகரன்..."



"தினகரனா...?"

"எங்க கிராமத்தைச் சேர்ந்தவன் ஸார்... பால்ய சிநேகிதன். என்னோட ரூம்ல பத்து நாள் கெஸ்ட்டா தங்கியிருந்தான். 'சாயந்தரங்கள்ல கொஞ்சம் வேலை இருக்கு. பைக் குடு'ன்னான். அவன்தான் ஸார் பைக் எடுத்துட்டுப் போனான்."

"அவன் எங்கே இப்போ...?"

"பதினைஞ்சு நாள் லீவில் வந்திருந்தான். லீவ் முடிஞ்சதும் கிளம்பிப் போயிட்டான்."

"இப்போ உங்க கிராமத்துக்குப் போனா அவனைப் பார்க்கலாமா?"

"இல்லே ஸார்... அவன் டெஹ்ராவில் இருப்பான்."

"டெஹ்ராவிலா...? அங்கே என்ன வேலை பார்க்கறான்?"

"மிலிட்டரில வேலை செய்யறான் ஸார்... டெஹ்ரா ராணுவ ரெஜிமெண்ட்ல ஏதோ ஒரு வேலை."

## 12

டெலிபோன் சிறிட்டது.

மேஜர் காசிநாத் ரிசீவரை எடுத்தார். ஆபரேட்டர் குரல் கேட்டது. "குட்மார்னிங் ஸார்... ஒன் அர்ஜண்ட் கால் ஃப்ரம் மெட்ராஸ்..."

"கனெக்ட்... இட்."

குழப்ப சப்தத்துக்குப் பின் இணைப்புக் கிடைத்தது.

"நான் சென்னையிலிருந்து இன்ஸ்பெக்டர் நவநீதி பேசுகிறேன்..."

"சொல்லுங்கள்..."

"உங்கள் ரெஜிமெண்ட்டில் பணியாற்றுகிற தினகரன் என்பவரை நாங்கள் உடனே தொடர்பு கொள்ள வேண்டும்... அவரை விசாரிக்க உங்கள் ராணுவ அனுமதி வேண்டும்..."

"என்ன விஷயமாய் அவரை விசாரிக்க வேண்டும்...?"

"ஒரு கொலை வழக்கில் அவருக்குத் தொடர்பு உள்ளதாய் சந்தேகப்படுகிறோம்..."

"கொலை வழக்கா...? விபரமாய்ச் சொல்லுங்கள்..."

"பதினைந்து நாள் லீவில் அவர் சொந்த கிராமத்துக்கு வந்தாரே... அப்போது நடந்த விவகாரம்தான் இது..."

என்று ஆரம்பித்து மொத்த சம்பவங்களையும் சுருக்கமாய் விவரித்தார் நவநிதி.

முழுவதையும் பதட்டமாய் கேட்ட காசிநாத் அதிர்ச்சி படர்ந்த குரலில் சொன்னார்.

"ராணுவ வீரர்கள் ஒழுக்கத்துக்கும், கட்டுப்பாட்டுக்கும் பெயர் போனவர்கள். உண்மை என்ன என்பது தெரியாமல் ஒரு ராணுவ வீரர் மேல் அவசரப்பட்டு சந்தேகப்பட முடியாது. மிலிட்டரி போலீஸ் மூலமாக தினகரனை விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன். தினகரனிடம் தப்பு இருந்தால் சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பின்பு முடிவு செய்வோம்."

"எஸ் ஸார்... மிலிட்டரி போலீஸ் மூலமாக தினகரனை முறைப்படி விசாரித்துவிட்டு எங்களுக்குத் தகவல் தெரிவியுங்கள். உங்களின் தகவலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்."

மறுமுனையில் நவநிதி ரிசீவரைச் சாத்த



காசிநாத்தும் அதனிடத்தில் வைத்தார்.

இண்டர்காம் பொத்தான்களைத் தட்டினார். என்கொய்ரி செக்ஷன் அது.

"ஹலோ."

"ஸார்..."

"நம் ரெஜிமெண்ட்டில் தினகரன் என்ற பெயரில் யாரேனும் பணியாற்றுகிறார்களா...? எந்த செக்ஷனில் இருக்கிறார்...? அவரைப் பற்றிய முழு விபரமும் இன்னும் ஐந்து நிமிடங்களில் என் மேஜைக்கு வர வேண்டும்..."

"எஸ் ஸார்..."

இண்டர்காமை வைத்தார் காசிநாத்.

சில நிமிஷங்களிலேயே அந்த அதிகாரி கனமான ஃபைலோடு வந்து சேர்ந்தார்.

"தினகரனைப் பற்றிய விபரங்கள் இந்த ஃபைலில் உள்ளன ஸார்..."

காசிநாத் அதைப் புரட்டிக் கொண்டே அந்த அதிகாரியிடம் கேட்டார்.

"தினகரன் என்ன கேடர்...?"

"ஸ்குவாட்டன் லீடர்..."

"எத்தனை வருடங்களாய் சர்வீஸில் இருக்கிறார்...?"

"ஏழு வருடங்கள்..."

"வயது...?"

"இருபத்தெட்டு..."

"எங்கெல்லாம் பணியாற்றியிருக்கிறார்...?"

"சண்டிஹார்... ஆக்ரா... ஹிண்டேன்... கடைசியாய் இங்கே வந்து நான்கு வருடங்கள் ஆகி விட்டன..."

"எனி ப்ளாக் மார்க்ஸ்...?"

"நோ ஸார்... இன்றைய தேதி வரைக்கும் க்ளீன் ரெக்கார்டு வைத்து இருக்கிறார்... ஆர்ட்டில்லரி மெயின்ட்டெனன்ஸ் டிபார்ட்மெண்டில் வேலை செய்கிறார்..."

"குட்... அந்த தினகரனை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள்..."

"எஸ் ஸார்..."

அவர் ஷூ சப்தத்தோடு அறையை விட்டுச் சென்ற பத்து நிமிஷங்களுக்குப் பின் அறை வாயிலில் நிழலாடியது.

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்..."

"கமின்..."

யூனிஃபார்மிலிருந்த அந்த இளைஞன் உள்ளே நுழைந்தான்.

"ஐ'யாம் இன்சார்ஜ் ஆஃப் ஆர்ட்டிலரி மெயின்டெனன்ஸ் செக்ஷன் ஸார்..."

"சொல்லு..."

"அங்கே பணியாற்றும் தினகரனைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி அனுப்பியிருந்தீர்களாம்..."

"எஸ்... எங்கே தினகரன்...?"

"லீவ் முடிந்து அவன் இன்னும் ட்யூட்டியில் ஜாயின் பண்ணவில்லை ஸார்..."

"என்ன...?"

"நேற்று முன்தினமே அவன் ஜாயின் பண்ணியிருக்க வேண்டும். ஒருவேளை லீவ் எக்ஸ்டென்ஷன் கேட்டு அவன் அனுப்பின தகவல் சரியான நேரத்திற்கு வந்து சேரவில்லையோ என்ற எண்ணத்தில் நேற்றுவரை காத்திருந்து பார்த்தாயிற்று... எந்தத் தகவலும் வரவில்லை. இன்று தினகரனுக்கு மெமோ டைப் ஆகிக் கொண்டிருக்கிறது. அவனுடைய கிராமத்து முகவரிக்கு அனுப்ப இருக்கிறோம்..."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே செக்யூரிட்டி ஆபீஸர் ஜோஷி வேகமாய் உள்ளே வந்தார். முகப்பரப்பு முழுவதும் வியர்வை.



"ஸார்... ஒரு கவலைக்குரிய செய்தியோடு வந்திருக்கிறேன்..."

நிமிர்ந்தார் காசிநாத்.

ஜோஷி சொன்னார்.

"ரெயில்வே போலீஸிலிருந்து சற்று முன்தான் தகவல் வந்தது."

"என்ன தகவல்?"

"நானும், நீங்களும் ரெயில்வே ஸ்டேஷன் வரை போக வேண்டியுள்ளது. வரச் சொல்லியிருக்கிறார்கள்."

"எதற்காக?"

"ஒரு உடலை அடையாளம் காட்ட..."

"உடலையா?"

"ஆமாம். சென்னையிலிருந்து வந்த தமிழ்நாடு எக்ஸ்ப்ரஸ்ஸின் கூட்ஸ் வேகனில் லக்கேஜ்களுக்கிடையே ஒரு ஆளின் உடல் கிடக்கிறதாம். உடைகளை சோதனை போட்டதில் ஐ.டி. கார்டு கிடைத்துள்ளது. இறந்து கிடப்பது ரெஜிமெண்ட்டில் பணியாற்றும் தினகரன் என்பவனாய் இருக்குமோ என்பது போலீஸின் சந்தேகம்... நாம் போய் உறுதிப்படுத்த வேண்டும்..."

காசிநாத் முகத்தில் அதிர்ச்சி அலையடித்தது.

## 13

அந்த மாலை நேர ஏழு மணிக்கு சுற்றுப்புறம் பூராவும் வெளிச்சம் மங்கிப் போயிருந்தது.

தருண் சுற்றும் முற்றும் பார்த்தபடியே ரெஜிமெண்ட்டின் கீழ்கோடியில் ஜாக்கிரதை உணர்வோடு நடந்தான்.

இன்ஸ்ட்ருமெண்ட் அறை அருகே வராந்தாவில் பல்ப் ப்யூஸ் ஆகி இருக்க, தருணுக்கு சௌகரியமான இருட்டு.

சென்ட்ரி இருட்டுக்குள் நிற்கப் பிடிக்காமல் வராந்தாவின் மறுபக்கம், மெதுவாய் நடந்து சென்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு புகையை காற்றில் கலந்து கொண்டிருந்தான்.

தருண் பூனை நடை நடந்து போய் இன்ஸ்ட்ருமெண்ட் அறையின் கதவுப் பூட்டை மெல்லத் தொட்டான்.

கொண்டு வந்திருந்த சாவிக்கொத்தைப் பயன்படுத்தி இரண்டு மூன்று சாவிகளை மாற்றி மாற்றிப் போட்டுப் பார்த்தான். ஏறக்குறைய ஐந்து நிமிஷம்,

பூட்டு கழன்று கொண்டது.

'களக்'

அந்த சென்ட்ரியை எட்டிப் பார்த்தான் தருண்.

"ஜீனா யஹாங்... மன்னா யஹாங்... ஸிவா ஜானா கஹாங்..." என்று பழைய இந்திப் பாடலை முணுமுணுத்துக் கொண்டே இன்னும் சிகரெட் புகையை இழுத்து வெளிவிட்டுக் கொண்டிருந்தான்.

அறையின் கதவை மெல்லத் திறந்தான் தருண்.

எண்ணெய் இல்லாத கதவு தொண்டையைச் செருமியது.

சில விநாடி நிதானித்தான்.

சென்ட்ரி அலட்சியமாய் அங்கேயே நின்றிருக்க, அறைக்குள் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தான் தருண்.

இடுப்பு பெல்ட்டில் சொருகியிருந்த பென் டார்ச்சை உயிர்ப்பித்தான்.

சிறிய ஒளி வட்டம் அந்த இன்ஸ்ட்



ருமெண்ட் அறை பூராவும் தத்தித் தத்தி உலாவியது.

ஒவ்வொரு கப்போர்டாகப் பார்வையைப் படர விட்டான்.

'SENSING DEVICES'

ஸ்டிக்கர் எழுத்துக்கள் பளிச்சிட்ட கப்போர்ட் பார்வைக்குக் கிடைத்தது.

'மெட்டல் டிடெக்டர் வகையறாக்கள் இந்த கப்போர்டுக்குள்தான் இருக்க வேண்டும்.'

பக்கத்தில் போய் கப்போர்டு குமிழில் கை வைத்தான்.

அதே விநாடி.

'டிட்'

சுவிட்சுகள் தட்டப்படும் சப்தம்.

அந்த அறை முழுக்க குபீரென்று வெளிச்சம் வெள்ளமாய் நிரம்பிக் கொண்டது.

தருண் திடுக்கிட்டுப் போய் திரும்பினான்.

செக்யூரிட்டி சோல்ஜர்கள் இயந்திரத் துப்பாக்கிகளோடு உள்ளே நுழைந்தார்கள். ஒருவன் சொன்னான்.

"செக்யூரிட்டி ஆபீஸரின் உத்தரவுப்படி... உன்னைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம் தருண்... திருட்டுத்தனமாய் இந்த அறைக்குள் நுழைந்து என்ன செய்து கொண்டிருக்கிறாய்...?"

தருண் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்க,

அந்த சோல்ஜர் மற்றவர்களிடம் சொன்னான்.

"செக்யூரிட்டி ஆபீஸருக்கு தகவல் கொடுத்து விட்டு இவனை விசாரணை அறைக்குக் கொண்டு செல்லுங்கள். தீவிரவாதிகளோடு இவனுக்குத் தொடர்பு இருக்கிறது என்பது இப்போது உறுதியாகி

விட்டது.... இங்கே பேசி இவனிடம் விஷயத்தை வாங்க முடியாது. தோட் டிகிரி பாஷையில்தான் பேச வேண்டும்."

தருண் திமிறிக் கொண்டிருக்கும்போதே, அவன் கைக்கு விலங்கு ஏறியது.

---

## 14

---

**கா**சிநாத்தும், ஜோஷியும் கைகள் கட்டப்பட்டு நிற்க வைக்கப்பட்டிருந்த தருணை ஆவேசத்தோடு பார்த்தார்கள். தருண் உடம்பெல்லாம் வியர்வை. அதில் லேசாய் ரத்தம். கண்கள் இரண்டும் சோர்ந்து போய் சொருகியிருக்க, நிற்க முடியாமல் தள்ளாடினான்.

மேஜர் குரலை உயர்த்தினார்.

"இங்கே பார் தருண்... இதற்கு மேல் உனக்கு அடி வாங்க உடம்பில் தெம்பு இருக்கிறதா என்று தெரியவில்லை. 'டயனமைட் விபத்தைத் தவிர்க்க எண்ணினேன்' என்கிற கட்டுக்கதையைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டாம். எதற்காக இன்ஸ்ட்ருமெண்ட் அறைக்குள் சென்றாய்? ஏதாவது தீவிரவாதிகளின் கும்பலோடு உனக்குத் தொடர்பு உள்ளது என்றால், ஒத்துக்கொள்."

செக்யூரிட்டி ஆபீஸர் ஜோஷி குறுக்கிட்டார்.

"ஸார்...! இவனிடம் பேசி விஷயத்தை வாங்க முடியாது. இவனுடைய குவார்ட்டர்ஸை முழுமையாய் சோதனை போட்டுப் பார்த்தால் அங்கே ஏதாவது ரகசிய ஆவணங்கள் சிக்கலாம்."



காசிநாத் தலையசைத்தார்.

"அந்த சோதனையை இப்போதே நடத்தி விடலாம்."

விசாரணை அதிகாரியிடம் திரும்பினார் ஜோஷி.

"தொடர்ந்து இவனிடம் விசாரித்துப் பாருங்கள். நாங்கள் இவனுடைய குவார்ட்டர்சில் சோதனை இட்டு விட்டு வருகிறோம்..."

"எஸ் ஸார்..."

அங்கிருந்து வெளியேறி ஜீப்புக்கு வந்தார்கள்.

செக்யூரிட்டி சோல்ஜர்கள் மற்றொரு ஜீப்பில் பின்தொடர்ந்து கொண்டு வந்தார்கள்.

காசிநாத் ஜோஷியிடம் சொன்னார்.

"என்னவோ தவறு நடந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் புரிகிறது. ஜோஷி...! இந்த ரெஜிமெண்ட்டில் பணியாற்றுகிற தினகரன் லக்கேஜ் வேகனுக்குள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இருக்கிறான். அவன் கொலை செய்யப்பட்ட அதே பாணியில் பாய்சன் இஞ்செக்ஷன் ஏற்றப்பட்டு சென்னையில் கதிர் என்கிற கெமிஸ்ட் கொல்லப்பட்டிருக்கிறான். கதிரை தினகரன் அடிக்கடி சந்தித்து இருக்கிறான். இந்த சந்திப்பு எதற்காக? இருவரும் ஏன் கொலை செய்யப்பட்டார்கள்...? யாரால் கொலை செய்யப்பட்டார்கள்? இத்தனை கேள்விகளும் மர்மமாய் இருக்கின்றன."

ஜோஷி கவலையாய் தன் தலை வழுக்கையைத் தேய்த்தார்.

"ரெஜிமெண்டுக்குள் ஏதோ சதியை நடத்த முயற்சிகள் நடக்கின்றன என்கிற அளவில் எனக்குப் புரிகிறது ஸார்... ஆனால்

உள்ளே செக்யூரிட்டி கடுமையாக இருப்பதால் அவர்களின் முயற்சி பாதியில் தடைபடுகிறது என்று நினைக்கிறேன்...!"

"இப்போதுதான் தருண் மாட்டியிருக்கிறான். இனிமேல் உண்மைகள் வெளியே வந்துவிடும்."

ஜீப்கள் தருணின் குவார்ட்டர்ஸ் வாசலில் போய் வேகமாய் பிரேக்கிட்டு நின்றன.

ஜீப்பை விட்டு இறங்கும்போதே... உள்ளேயிருந்து சுனில் வெளிப்பட்டு முன்னால் வந்தான். விஷ் செய்தான்.

காசிநாத்தும், ஜோஷியும் அவனைக் கீழ்ப் பார்வையில் பார்த்தார்கள்.

"என்ன மேன்...?" என்றார் காசிநாத்.

"தருண் ஒரு பாவமும் அறியாதவன் ஸார்... அவனை நீங்கள் சந்தேகப்படுவது தவறு..."

இருவரும் அவனை எரிச்சலாய் பார்த்தார்கள்.

"வேலிக்கு ஓணான் சாட்சியா...?"

"இரண்டு நாளைக்கு முன்னால்தான் என்னைக் கூப்பிட்டு தருண், பார்க்கில் நடந்த சம்பவங்களைச் சொன்னான் ஸார்... நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, தீவிரவாதிகளோடு அவன் ரத்தன் பார்க்கில் போராடியது உண்மை ஸார்..."

"அவனைப் பற்றி உனக்குத் தெரியாது... உன்னிடம் இரண்டு நாளைக்கு முன்னால் விஷயங்களை சொன்னால் அவன் குற்றமற்றவன் என்று ஆகி விடுமா...? உன் நண்பனுக்காகப் பரிந்து பேசி நீ மாட்டிக் கொள்ளாதே... இன்ஸ்ட்ருமெண்ட் அறைக்குள் அத்து மீறி உள்ளே நுழைந்தது குற்றமா இல்லையா...?"

"அது ஒன்றுதான் அவன் தெரியாமல் செய்த தவறு சார்... அதையும் அவன் ரெஜிமெண்டைக் காப்பாற்றத்தான் செய்தான்..."



"ரெஜிமெண்டைப் பாதுகாக்க செக்யூரிட்டி பிரிவே இருக்கிறது... இவன் யார் அந்த வேலையில் மூக்கை நுழைக்க...?"

சுனில் பதில் பேச இயலாமல் நின்றிருக்க - ஜோஷி சோல்ஜர்களைப் பார்த்து உத்தரவிட்டார்.

"என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்...? இந்த க்வாட்டர்சை முழுமையாய் சோதனை போடுங்கள்..."

பூட்ஸ் கால்கள் தபதபக்க... தருணின் குவாட்டர்ஸை மிதித்தார்கள் சோல்ஜர்கள்.

உமா கதவருகே புடவை முனையை ஈரமாக்கிக் கொண்டு விசித்தபடி மேஜரிடம் வந்தாள். "இரண்டு நாட்களுக்கு முன்னால் அவர் சொன்னபோதே நானும்... சுனிலும் அவரிடம் வேண்டாம் என்று சொன்னோம்... 'ரெஜிமெண்டில் அப்பாவி வீரர்கள் பலியாவதைத் தடுக்க வேண்டுமென்றால் துணிந்து சில காரியங்கள் செய்யத்தான் வேண்டும்' என்று சொன்னார். மற்றவர்களுக்கு உதவப் போய் இப்போது அவரே மாட்டிக் கொண்டார்."

"உன்னுடைய கணவன் கையும் களவுமாய் பிடிபட்டிருக்கான்... உன்னை மாதிரி நெருங்கின சொந்தங்களும், நண்பர்களும் சொல்வதெல்லாம் எடுபடாது... நீங்கள் எல்லோரும் தருகிற காண்டாக்ட் சர்டிபிகேட் எல்லாம் செல்லுபடியாகாது... அது உன் கணவனைக் காப்பாற்றாது."

உமா புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு நின்றாள். க்வார்ட்டர்ஸ் சோல்ஜர்களால் அலசப்பட்டது.

பதினைந்து நிமிஷங்களுக்குப் பின் -

செக்யூரிட்டி அதிகாரி ஒருவர் எட்டிப் பார்த்தார்.

"ஸார்... ஒரு நிமிஷம் உள்ள வரமுடியுமா?"

காசிநாத்தும் - ஜோஷியும் நிமிர்ந்தார்கள். கேள்விக்குறிகளை முகம் பூராவும் நிரப்பியபடி -

குவார்ட்டர்ஸுக்குள் சென்றார்கள்.

"ஏதாவது டாக்குமெண்ட் கிடைத்துள்ளதா...?"

"இல்லை ஸார்."

"பின்னே...?"

தருணின் பர்சனல் அறையை நோக்கிக் கூட்டிச் சென்றார் அந்த அதிகாரி.

தலைகீழாய் அறை புரட்டியெடுக்கப்பட்டிருக்க -

உள்ளே பீரோவுக்குப் பின்புறம் - கையைக் காட்டினார் அதிகாரி. காசிநாத், ஜோஷியின் பார்வைகள் பாய்ந்தன.

அங்கே - சுவரோரமாய் -

வரிசையாய் நான்கு கலசங்கள் வைக்கப்பட்டிருந்தன.

கலசங்களுக்கு உள்ளே -

சாம்பல் நிரம்பியிருந்தது.

---

## 15

---

ஜீப் விசாரணை அறையை நோக்கி போய்க் கொண்டிருந்தது.

ஜோஷி குழப்பம் நிரம்பிய முகத்தோடு கேட்டார்.

"மெட்ராஸ்ல செத்துப்போன கதிரின் பனியன் உள்பாக்கெட்டில் மனித உடலை எரிச்ச சாம்பல் பொட்டலமா கட்டப்பட்டு



பத்திரப்படுத்தி வெச்சிருந்ததா சொன்னாங்க... இப்போ இங்கே தருணோட வீட்டில் நாலு அஸ்திக்கலசங்கள்... அதில் நிறைய சாம்பல்... எதுவுமே புரியலையே ஸார்..."

மேஜர் காசிநாத் பரபரப்பான முகத்தோடு சொன்னார்.

"எனக்கு எல்லாமே புரிஞ்சு போச்சு ஜோஷி..."

"வாட்ஸ் த மேட்டர் ஸார்?"

"நடக்கப் போற சதி என்னன்னு கெஸ் பண்ண முடியுது."

"சதியா?"

"எஸ். ஃப்ளையிங் டிபார்ட்மெண்டில் இருக்கும் தருணுக்கு இன்னிக்கு ஷெட்யூல்படி என்ன ட்யூட்டி தெரியுமா?"

"என்ன ட்யூட்டி?"

"ஏ என் ஃபிஃப்டி டூ விமானத்தில் தருண் இன்னிக்குப் பறக்கறதா இருந்தான்..."

"அதுக்கும் இந்த கலசங்களுக்கும் என்ன சம்பந்தம் சார்...?"

"மத்திய அரசின் உத்தரவுப்படி நேற்று மாலை நான்கு அஸ்திக் கலசங்கள் டெல்லியிலிருந்து நம் ரெஜிமெண்ட்டுக்கு வந்து சேர்ந்தன..."

"எதற்காக...? யாருடைய அஸ்திக்கலசங்கள் அவை...?"

"வெளிநாட்டு தேசத்து அதிபரின் அஸ்திக் கலசங்கள் அவை... இந்தியா மேலும்... இந்தியாவின் கலாச்சாரத்தின் மேலும் நிறைய மதிப்பு வைத்து இருந்தவர் அவர்... இறப்பதற்கு முன் அவர் வெளியிட்ட கடைசி ஆசை... தன்னுடைய அஸ்தி ராணுவ மரியாதையோடு இமயமலைச் சாரலிலும்... பழமையும், பெருமையும் வாய்ந்த

கங்கையிலும் தூவப்பட வேண்டும் என்பதே... நட்பு நாட்டின் மறைந்த அதிபரான அவருடைய ஆசையை நிறைவேற்றி வைக்க இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டதோடு அல்லாமல்... தானே முன்னின்று உரிய மரியாதையோடு அஸ்தியைக் கரைப்பதாகவும் சொல்லியுள்ளது... நம்முடைய ரெஜிமெண்டின் ஃப்ளையிங் பிரிவு மூலமாகத்தான் அந்தச் சடங்கு இன்று நிறைவேற்றப்படுகிறது..."

"ஐ ஸீ...! அப்படியானால்... தருணின் வீட்டிலிருந்த அந்த அஸ்திக் கலசங்கள்...?"

"அவைகளைப் பார்த்தால் வெனிசலா அதிபரின் அஸ்திக் கலசங்களைப் போலவே உள்ளது... ஃப்ளைட்டில் இந்த அஸ்திக்கு பதிலாக வேறு எதையோ கொண்டு செல்கிறார்களோ என்பது என் சந்தேகம்..."

"வேறு எதைக் கொண்டு போகிறார்கள்...?"

"தருணிடம் இன்னும் சிவியராய் விசாரிக்க வேண்டும்..."

விசாரணை அறைக்கு எட்டி – ஜீப்பை நிறுத்திவிட்டு உள்ளே சென்றார்கள். நடக்க நடக்கவே –

ஒரு அதிகாரி வியர்த்த முகத்தோடு எதிர்கொண்டார்.

"ஸார்..."

காசிநாத்தும், ஜோஷியும் விசாரணை அதிகாரியைப் பதட்டம் மேலிடப் பார்த்தார்கள்.

"என்னாயிற்று...? ஏன் படபடப்பாய் வருகிறீர்கள்...?"

"தருண் உண்மையைப் பூராவும் சொல்லிவிட்டான்...!"

"என்ன உண்மை...?"

"வெனிசலா அதிபரின் அஸ்திக்கு பதிலாக



அபாயகரமான ரசாயனம் கலந்த சாம்பல் நிற பவுடரை மாற்றி வைத்துள்ளனாம்... அதை அஸ்தி என்று நினைத்து கரைப்பதன் மூலம் நதிகள் விஷமாகி ஏராளமாக உயிர்சேதத்தை ஏற்படுத்தும் தீவிரவாதிகளின் திட்டத்துக்கு துணை போயிருக்கிறான் தருண்..."

அதிர்ந்து போய் நிமிர்ந்தார்கள்.

தயக்கத்தோடு அவர் தொடர்ந்தார்.

"ஆனால்... ஆனால்..."

"என்ன ஆனால்...?"

"ஸார்... ஒரு நிமிஷம் உள்ளே வரமுடியுமா?"

"ஏன்...?"

"விசாரணையின்போது வாங்கிய அடிகளைத் தாங்க முடியாமல் தருண் உயிரை விட்டு விட்டான் ஸார்..."

"எ...ன்...ன...?"

இருவரையும் அதிகாரி கூட்டிப் போய்க் காட்டினார். உள்ளறையில் ஐஸ் பாரின் மேல் நீளமாய் கிடந்தான் தருண்.

---

## 16

---

அதிர்ச்சியுடன் தருணைப் பார்த்தார்கள் காசிநாத்தும், ஜோஷியும்.

ஜோஷி விசாரணை அதிகாரியைப் பார்த்துக் கத்தினார்.

"ரொம்பவும் வேகம் காட்டி விட்டீர்கள்..."

"இவ்வளவு தூரம் ஃபோர்ஸ் பண்ணியிருக்காவிட்டால் தருண் நிஜங்களைக் கக்கி இருக்க மாட்டான் ஸார்..."

காசிநாத் தன்னுடைய மணிக்கட்டை உயர்த்தி வாட்சைப் பார்த்து விட்டுப் பதறினார்.

"ஷெட்யூல்படி ஏ என் ஐம்பத்திரண்டு

விமானம் கிளம்பும் நேரம் இது... விமானம் கிளம்பாமல் தடுத்தாக வேண்டும்..."

காசிநாத்தின் பரபரப்பு ஜோஷியையும் தொற்றிக் கொள்ள - இருவரும் இண்டர்காமுக்குப் பாய்ந்தார்கள். பட்டன்களைத் தட்டினார்கள்.

திரும்பத் திரும்ப எங்கேஜுடு டோன் வந்து கொண்டிருந்தது.

ஒரு ஐந்து நிமிஷ முயற்சியில் லைன் கிடைக்க - காசிநாத் அவசரக் குரலில் கேட்டார்.

"ஏ என் 52 ஃப்ளைட் புறப்பட்டு விட்டதா...?"

"இன்னும் இல்லை ஸார்..."

"கண்ட்ரோல் டவரைத் தொடர்பு கொண்டு அந்த ஃப்ளைட் கிளம்புவதைத் தடுத்து நிறுத்துங்கள்... மிகவும் அவசரம்..."

"எஸ் ஸார்..."

ரிசீவரை எறிந்துவிட்டு ஜீப்பை நோக்கி விரைந்தார் காசிநாத். ஜோஷியும் பின்தொடர்ந்தார்.

ஜீப்பை ரெஜிமெண்டுக்குள் நுழைத்து நீள ரன்வேயின் துவக்கத்திலிருந்த கண்ட்ரோல் டவரைத் தொட்டார்கள்.

தொலைவில் ஏ என் 52 அலுமினியப் பறவை வெயிலுக்குப் பளபளப்பாய் மின்னியது.

காசிநாத் ஜோஷியிடம் சொன்னார்.

"நல்லவேளையாக ஃப்ளைட் கிளம்பவில்லை... ஒரு பேராபத்திலிருந்து தப்பி விட்டோம்..."

கண்ட்ரோல் டவரின் சுழல் படிக்கட்டுகளில் விரைந்தார்கள்.

ஹெட்போனை மாட்டியிருந்த கட்டுப்பாட்டு அதிகாரி வியர்க்க வியர்க்க



பேசிக் கொண்டிருந்தார்.

"கிளம்ப வேண்டாம்... டேக் ஆஃப் வேண்டாம்."

"......."

"ஆர் யு பிளேயிங்...?"

சிவந்து போன முகத்தோடு கத்தினார் - அவர்.

காசிநாத்துக்கும், ஜோஷிக்கும் விபரீதம் புரிந்து போய் அந்தக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் கேட்டார்கள்.

"என்னாயிற்று...?"

"ஸார்...! ஏ என் 52 பைலட்டைத் தாக்கி விட்டு உள்ளே வேறு எவனோ பேசுகிறான்..."

"என்ன...?"

ஹெட்போனை அவசரமாய் மேஜர் வாங்கிக் காதில் பொருத்தினார்.

"ஏய்... யார் பேசுவது...?"

"ஓ... மேஜரா... அதுதான் அதிகாரம் தூள் பறக்கிறதா...? மேஜர் என்ன... கடவுளே வந்தாலும் என்னை நிறுத்த முடியாது... தருண் எனக்கு எல்லா இன்ஸ்ட்ரக்ஷனும் தந்து விட்டார்... பேசிய பணத்தையும் கொடுத்துவிட்டார்... அவருக்கு என்னுடைய விசுவாசத்தை நான் காட்ட வேண்டாமா... இதோ... இப்போது ஏ என் 52 ஃப்ளைட் கிளம்புகிறது... முக்கிய நதிகளிலும் இமயமலைச் சாரலிலும் அஸ்திகருப் பதிலாக பேராபத்தை விளைவிக்கும் நச்சு ரசாயனம் தூவப்படப் போகிறது..."

காசிநாத் அதிர்ந்து போய் உட்கார்ந்திருக்க -

கண்ணாடிக்கு வெளியே -

விமானம் இயக்கம் பெறுவது தெரிந்தது. அடுத்த இரண்டு நிமிஷத்திற்குள் ரன்வேயில் நீளமாய் ஓடிய ஏ என் 52 மெல்ல மெல்ல வானத்தில் உயரத்தை வாங்க ஆரம்பித்தது.

# 17

உமா கண்ணீரோடு எதிர் சுவரை வெறித்துக் கொண்டிருந்தாள்.

சுனில் அவளிடம் கம்மிய குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

"உமா... ஒரு விபரீதத்தை எடுத்துகிட்டு ஏ என் 52 விமானம் மேலே போயிருக்கு... இந்தியாவின் அத்தனை செக்யூரிட்டி பிரிவுகளும் என்ன செய்யறதுன்னு திணறிட்டிருக்கு... அத்தனை பழியும் தருண் மேலே... யாரோ திட்டமிட்டு தருணைச் சுத்தி சதிவலை பின்னியிருக்காங்க..."

உமா பெரிய குரல் எடுத்து அழுதாள்.

"என்னை இப்படி நிராதரவா விட்டுட்டுப் போயிட்டாரே சுனில்... 'இந்த நாட்டுக்காக உழைக்கிறேன்... நாட்டுக்கு விசுவாசமா நடந்துக்கறேன்'னு சொல்லிச் சொல்லி கடைசியில் மூட்டை மூட்டையா பழியை சுமந்துகிட்டு - குற்றவாளியா செத்துப் போயிருக்காரே..."

"தருண் குற்றவாளி இல்லை - ரெஜிமெண்ட்டுக்குள்ளே யாரோ அவனை நல்லா வசமா மாட்டி விட்டிருக்காங்க... அவங்க யார்ன்னு கண்டு பிடிச்சு... தருண் நிரபராதின்னு நான் நிரூபிக்கறேன் உமா."

"அதனால என்ன பிரயோசனம்? அவர் உயிர் திரும்பியா வரும்...! உங்களையும் அந்தச் சதிகாரங்க இதே நிலைமைக்கு ஆளாக்க மாட்டாங்கங்கறது என்ன நிச்சயம்...?"

"தருணோட விஷயத்தில் நடந்ததை வெச்சு நான் பாடம் கத்துகிட்டேன் உமா.



நான் ஜாக்கிரதையா நடந்துப்பேன்... உங்க ரிலேடிவ்ஸ்க்கு தகவல் குடுத்திங்களா?"

"போன் பண்ணி சொன்னேன்... ஆனா விசாரணைகள் முடியற வரைக்கும் நான் ரெஜிமெண்ட்டில் தான் இருக்கணுமாம். தவிர என்கிட்ட நிஜமான அக்கறை காட்டற ரிலேடிவ்ஸ் யாருமில்லை."

"உங்களுக்கு ஏதாவது பிரச்னைன்னா என்னைக் கூப்பிட்டு சொல்லுங்க... நான் உதவியா இருப்பேன்."

"தாங்க் யூ..."

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு - சுனில் கிளம்பினான்.

பனியில் நனையும் பைக்கை உதைத்து ஸ்டார்ட் பண்ணிக் கொண்டு சாலையில் கரைந்தான்.

கதவைத் தாளிட்டு விட்டுத் திரும்பி வந்தாள் உமா. படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

மேஜர் காசிநாத் பீரோவின் மறைவிலிருந்து வெளிப்பட்டார்.

உமா சிரித்துக் கொண்டே அவருடைய மார்பில் சாய்ந்தாள். சரிந்தாள். சொன்னாள்.

"சே... அழுது அழுது போரடிச்சிடுச்சு..."

"சிவபூஜைல கரடி மாதிரி சுனில் வந்துடறான்... பீரோ பின்னாடி புழுக்கத்துக்குள்ளே எவ்வளவு நேரம்தான் நிக்கறது...?"

"சுனில் என்னோட கணவரின் திக்கஸ்ட் ஃப்ரெண்ட் அல்லவா... என் மேல அவருக்கு பயங்கரமான அக்கறை... தருண் நிரபராதின்னு எனக்குத் தெரியாதா... எனக்கு வந்து ஆறுதல் சொல்லிட்டிருக்கான்..."

"சரி... அவனுக்குத் தெரியுமா... திட்டமிட்டு தருண்மேல் இந்தப் பழியை சுமத்தினதே நானும், நீயும்தான்னு...?"

"தருண் தன்னோட முடிவைத் தானே தேடிக்கிட்டார்... அதுக்கு யார் என்ன செய்ய முடியும்..."

"யு ஆர் கரெக்ட் உமா... அன்னிக்குத்தான் ரத்தன் பார்க்கில் வெச்சு அவனை நாம நம்ம ஆட்கள் மூலமாக சோதிச்சுப் பார்த்தோம்... அவன் கொஞ்சம் கூட மசிஞ்சு கொடுக்கலை... தேச பக்தி அது இதுன்னு பேசினான். இவனெல்லாம் நம்ம திட்டத்துக்கு எந்தக் காலத்திலும் ஒத்து வரமாட்டான்னு புரிஞ்சு போச்சு... அதுக்கப்புறம்தான் பழியை அவன் மேலேயே போட்டு தீர்த்துக் கட்டிடலாம்ங்ற எண்ணத்துக்கு வந்தோம்."

உமா புன்னகைத்தாள்.

"என்னோட புருஷனைப் பத்தி எனக்குத் தெரியாதா...? நீங்கள்தான் பாவம்ன்னு சொன்னீங்க... அவரைத் தீர்த்துக் கட்டினாத்தான் நாம நிம்மதியாப் பழக முடியும்..."

"அதுவும் ஒரு வகையில சரிதான்..." உமாவின் கன்னத்தில் மேஜர் முத்தமிட - அவள் பதிலுக்கு முத்தம் கொடுத்து விட்டுக் கேட்டாள்.

"நாம மாட்டிக்க மாட்டோமே...?"

"மாட்டோம்! சாம்பல் மாதிரியே ரசாயனத்தை செஞ்சு கொடுத்த கதிர்... அவனோடு போரம் பேசி மசிய வெச்ச கெமிக்கலை நமக்கு அனுப்பி வெச்ச ஜ ாகரன்... எல்லாரையும் நான் நம்பிக்கையான ஆட்களை வெச்சு தீர்த்துக் கட்டியாச்சு... நம்மை யாரும் நெருங்கவே வாய்ப்பில்லை உமா... அதுவும் ரெஜிமெண்ட் மேஜரான என் மேல யாருக்கும் சந்தேகம் வரவே வாய்ப்பில்லை..."

"இப்போ... அந்த நச்சு ரசாயனத்தோட,



நாலு கலசங்கள் ஃப்ளைட்லே போயிருக்கே... மேற்கொண்டு என்ன நடக்கும்...?"

"மேற்கொண்டு என்ன நடந்தா நமக்கு என்ன... இந்த ரெஜிமெண்ட்டில் நடந்த வேண்டிய சதித் திட்டங்களை எல்லாம் இம்மி பிசகாம நான் நடத்திக் கொடுத்துட்டேன்... பழியை துல்லியமா தருண் மேல போட்டாச்சு... விசாரணையில அவன் செத்துட்டதா சொல்லியாச்சு... இந்த நச்சு ரசாயன விவகாரத்தைத் தான்தான செஞ்சதா தருண் வாக்குமூலம் தந்தான்னு ஸ்பஷ்டமா விசாரணை அதிகாரியை சொல்ல வெச்சாச்சு... தீவிரவாதிகள் நமக்குச் சேர வேண்டிய தொகையை ஒரு டாலர் பாக்கி இல்லாம தந்துட்டாங்க... ரெஜிமெண்ட்டுக்குள்ளே நமக்கு ஒத்துழைச்ச விசாரணை அதிகாரிக்கும் இன்னும் சிலருக்கும் பேசினபடி பணம் பட்டுவாடா பண்ணிட்டேன்... இப்போ நானும், நீயும் சில கோடிகளுக்குச் சொந்தக்காரங்க... கொஞ்ச நாள் சர்வீஸில் இருந்துட்டு ஏதாவது ஒரு வெளிநாட்டுத் தீவில் நிம்மதியா செட்டில் ஆயிடலாம்... ஏ என் 52 விமானத்தை இப்போ தீவிரவாதிகள் கையில் வெற்றிகரமாக ஒப்படைச்சாச்சு... இனிமே அவங்க பாடு... நம்ம அரசாங்கத்தின்பாடு..."

நீளமாய் பேசிவிட்டு - உலர்ந்த தொண்டையை ஜக் தண்ணீரால் ஈரப்படுத்திக் கொண்டவர் - ஆசைத் தீ பற்றி எரியும் பார்வையில் உமாவைப் பார்த்தார்.

"இப்போ கொஞ்ச நேரத்துக்கு நாம உலகத்தை மறக்கலாமா...?"

"ஒரு நிமிஷம் இருங்க..." என்று சொன்னவள் -

நேர் எதிர் சுவரில் அப்பியிருந்த தருணின் போட்டோவைத் திருப்பி மாட்டி வைத்து விட்டுத் திரும்பி வந்தாள்.

நெருங்கி வந்து புன்னகைத்தாள். முந்தானை சரிவதைப் பற்றிய அக்கறை இல்லாமல் சொன்னாள்.

"நான் ரெடி..."

மேஜர் காசிநாத் அவளைத் தழுவ ஆரம்பித்த அதே விநாடி -

ஆகாயத்தில் ஏ என் 52 விமானம் நிர்ணயிக்கப்பட்ட ஆல்ட்டிட்யூடை எட்டி இருந்தது.

---

## 18

---

உமா குவியலாய்க் கிடந்த உடைகளைப் பொறுக்கி ஒவ்வொன்றாய் அணிய ஆரம்பித்தாள்.

மேஜர் காசிநாத் அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"பல வருஷங்களுக்கு முன்னால் செத்துப் போயிட்ட என் மனைவிகிட்டேகூட இந்த மாதிரி ஒரு சந்தோஷத்தை நான் அனுபவிச்சதில்லை..."

உமா வெட்கப் புன்னகை பூத்தாள்.

"நீங்க ரொம்ப ரசனை உள்ளவர்... தருண் இந்த மாதிரி விஷயத்திலெல்லாம் சரியான ஜடம்..."

இடுப்பு பெல்ட்டை இறுக்கிய காசிநாத் குனிந்து ஷூ லேஸ்களை முடிச்சிட்டார்.

அவரை வெட்கப் பார்வை பார்த்த உமா கேட்டாள்.

"நாம மறுபடியும் எப்ப சந்திக்கலாம்...?"

"இன்ன நாள்ல சந்திக்கலாம்ன்னு



திட்டவட்டமா என்னால சொல்ல முடியாது... ஆனா சந்தர்ப்பத்தைப் பொறுத்து முடிஞ்சப் போதெல்லாம் உன்னை வந்து சந்திக்கிறேன்..."

சொல்லிக் கொண்டே அவளைக் கட்டியணைத்து நெற்றிப் பரப்பில் முத்தமிட்டார் காசிநாத்.

"வர்றேன் உமா..."

"ம்..."

"யாராவது வந்தாங்கன்னா மறக்காம நான் வாங்கிக் கொடுத்த க்ளிசரினைக் கண்ணில் விட்டுகிட்டு ஒரு அழுகையோட அவங்களை மீட் பண்ணு..."

"சரி..."

காசிநாத் விடை பெற்றார்.

குவார்ட்டர்ஸைக் கடந்து சற்றுத் தள்ளி இருட்டில் நிறுத்தியிருந்த ஜீப்பை அடைந்தார்.

ஜீப்பின் டிரைவிங் இருக்கையில் ஏறி உட்காரப்போனபோது நாலா திசையிலிருந்தும் திடுமென்று டார்ச் லைட் வெளிச்சம் அவரைக் குளிப்பாட்டியது.

செக்யூரிட்டி சோல்ஜர்கள் வட்டமாய்ச் சூழ்ந்திருக்க - மையமாய் செக்யூரிட்டி ஆபீசர் ஜோஷி நின்றிருந்தார்.

காசிநாத் ஒரு விநாடி திடுக்கிட்டார்.

மறுவிநாடி சுதாரித்துக் கொண்டு இயல்பாகப் பேசி நிலைமையை சகஜமாக்க முயன்றார்.

"என்ன ஜோஷி... அந்த சதியைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா...? அதைப் பற்றிப் பேசத்தான் என்னைத் தேடி வந்தீர்களா...?"

ஜோஷி அவரை லேசர் பார்வையில் ஊடுருவிக் கொண்டு பதிலளித்தார்.

"இந்த நிமிஷம் வரைக்கும் தகவல் எதுவு
கிடைக்கவில்லை... அந்த சதியைப் பற்
மேற்கொண்டு விபரங்களை நீங்கள்தா
சொல்ல வேண்டும்..."

அவர் சொன்னதைக் கேட்டு லேசாய்
திடுக்கிட்டார்.

அந்த திடுக்கிடலை வெளியே காட்டி
கொள்ளாமல் காசிநாத் கேட்டார்.

"ஏ... என்ன ஜோஷி...? என்
சொல்கிறீர்கள்...?"

"எனக்கு உங்கள் மேல் சந்தேக
எழுந்திருக்கிறது...!"

"வாட் டூ யூ மீன்...?"

"நீங்கள் இந்த நேரத்தில் தருணுடை
குவார்ட்டர்ஸ்க்கு வந்ததற்கான காரணத்
நான் தெரிந்து கொள்ளலாமா...?"

"என்னதான் தருண் குற்றவாளியா
இருந்தாலும் அவனுடைய மனை
உமாவின் நிலைமை மிகவ
பரிதாபத்திற்குரியது... அந்தப் பெண்ணிற்
ஆறுதல் வார்த்தைகள் சொல்லத்தான் நா
இங்கே வந்தேன்..."

ஜோஷி கேலிச் சிரிப்போடு காசிநாத்தை
பார்த்தார்.

"கணவனை இழந்த ஒரு இள
பெண்ணிற்கு ஆறுதல் சொல்லும் நேர
நள்ளிரவு பனிரெண்டு மணியா...?"

மேஜர் கோபத்தில் சீறினார்.

"டோண்ட் பி சில்லி... உமா அப்பாவி
பெண்... அவளைப் பாதிக்கிற மாதி
சிறுபிள்ளைத்தனமாகப் பேசாதீர்கள்... நா
எட்டு மணிக்கெல்லாம் இங்கே வந்
விட்டேன்... கணவனை இழந்த துக்கத்தி
அவள் மிகவும் எமோஷனலாக இருந்தா
அவளை ஆறுதல் படுத்திப் பேசி



கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை... அதனால்தான் இத்தனை நேரமாகி விட்டது..."

"ஓஹோ... எட்டு மணிக்கெல்லாம்.... நீங்கள் இங்கே வந்து விட்டீர்களா...! அப்படியானால் எட்டரை மணிக்கு உமாவைப் பார்க்க கனில் வந்தபோது நீங்கள் பீரோவுக்குப் பின்னால் ஒளிந்திருந்தீர்களா... இல்லை கட்டிலுக்கு அடியில் மறைந்திருந்தீர்களா...?"

சோல்ஜர்களுக்கு நடுவில் இருந்து கனில் வெளிப்பட்டான்.

"மேஜர் ஸார்... ஆறுதல் வார்த்தைகள் சொல்வதற்காக நான் வந்தேன்... என்னைப் பார்க்க வரும் முன்பு வராந்தா மறைவில் நின்று அழுவதற்காக கிளிசரின் சொட்டுகளைக் கண்ணில் விட்டுக்கொண்டு அதன்பின் உமா உள்ளறைக்கு வந்ததைப் பார்த்து நான் அதிர்ச்சியாகி விட்டேன்... என் அதிர்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவளிடம் பேசிவிட்டு வந்தேன்... உடனடியாக செக்யூரிட்டி ஆபீசருக்குத் தகவல் கொடுத்தேன்... அவளை விசாரிப்பதற்காக இந்த செக்யூரிட்டி ஆபீசர்... வேளை கெட்ட வேளையில் உங்கள் ஜீப் இங்கே நிற்பதைப் பார்த்து உங்களிடம் ஏதோ தப்பு இருக்கிறது என்று உணர்ந்தார்... நீங்கள் அவர் வீட்டில் இருந்து வெளியே வரும்போது உங்களை மடக்கத் தீர்மானித்து சோல்ஜர்களைக் கொண்டு வந்து நிறுத்தினார்..."

காசிநாத் உள்ளுக்குள் பற்றியெரிந்த பதட்டத்தையும் அதிர்ச்சியையும் வெளிக்காட்டாமல் சகஜமாகப் பேசினார்.

"வேளை கெட்ட வேளையில் அந்தப்

பெண்ணின் வீட்டிலிருந்து வெளியே வந்தேன் என்ற ஒரே காரணத்துக்காக நடந்த சதியில் எனக்குத் தொடர்பு இருக்கும் என்று நினைப்பது பெரிய முட்டாள்தனம்... தவிர, ஜோஷி முதற்கொண்டு நீங்கள் எல்லோருமே எனக்குக் கீழே பணியாற்றுபவர்கள்... நான் தரக்கூடிய உத்தரவுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலையில் - உங்கள் யாருக்கும் என்னை சம்பிரதாயமாக விசாரிக்கக்கூட உரிமை கிடையாது... எல்லாரும் கலைந்து செல்லுங்கள்..."

ஜோஷி சிரித்தார்.

"நான் உங்களுக்கு எந்த உத்தரவும் இட முடியாது என்ற ராணுவ சட்டங்கள் எனக்கும் தெரியும் மேஜர்... அதனால்தான் உங்களுக்கும் மேலிருக்கிற உயரதிகாரிகளான கர்னல்... மேஜர் ஜெனரல் ஆகியோருடன் உங்களைக் கைது செய்ய வந்திருக்கிறேன்...!"

ஜோஷி கை காண்பிக்க - சற்றுத் தள்ளி நின்றிருந்த ராணுவ ஜீப்பிலிருந்து அந்த ஆஜானுபாகுவான * உயரதிகாரிகள் காசிநாத்தை நோக்கி ஷூக்கள் சப்திக்க நடந்து வந்தார்கள்.

அதிகாரிகளில் ஒருவர் சொன்னார்.

"தருண்மேல் பழி விழுந்து அவன் கைதானதுமே கனில் எங்களுக்குத் தகவல் கொடுத்தார். 'மேஜர், செக்யூரிட்டி ஆபீசர் எல்லோருமே தருண் சொல்வதை நம்ப மறுக்கிறார்கள்... தருண்மேல் பழியைப் போட்டு இந்த ரெஜிமெண்ட்டில் ஏதோ சதி நடத்த யாரோ திட்டமிட்டுள்ளார்கள்... படிப்படியாக பழிகள் சுமத்தப்பட்டு நிரபராதியான தருண் இப்போது கைது செய்யப்பட்டுள்ளான்... நீங்கள் உடனே



தலையிட்டு ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷனுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்...' என்று எங்களுக்குத் தகவல் கொடுத்தார்... அந்தத் தகவலின் அடிப்படையில் நாங்கள் நாலைந்து நாட்களுக்கு முன்பிருந்தே இந்த ரெஜிமெண்ட்டில் மேஜர் உட்பட அத்தனை பேரையும் தீவிரமாகக் கண்காணித்தோம்... அந்தக் கண்காணிப்பில் எங்களுக்கு உங்கள் மேல் சந்தேகப்புள்ளிகள் விழ ஆரம்பித்தன... இப்போது நீங்கள் கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கிறீர்கள்... உமா மூலமாக செம்புக் கலசங்களை குவார்ட்டர்ஸுக்குள் கொண்டு வந்து வைத்து தருணை சிக்க வைத்து விட்டீர்கள்... இனி உமாவையும் உங்களையும் எந்த வகையில் விசாரித்து உண்மையை வரவழைக்க வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்..."

சொன்ன உயரதிகாரி ஜோஷியிடம் திரும்பினார்.

"உமாவையும்... மேஜரையும் கைது செய்து என்கொயரி செல்லில் போடுங்கள்..."

இனி செய்வதற்கு எதுவுமில்லை என்று உணர்ந்து தளர்ந்து போய்த் தலையைக் கவிழ்த்துக் கொண்ட மேஜர் காசிநாத்தை சோல்ஜர்கள் நெருங்கினார்கள்.

## 19

சுழல் நாற்காலியில் கைகள் கட்டப்பட்ட நிலையில் கிடந்தார் மேஜர் காசிநாத்.

எதிரே-

ஜோஷி, கர்லொனல், மேஜர் ஜெனரல்

ஆகியோர் ஸ்டூல்களை இழுத்துப் போட்டு உட்கார்ந்திருந்தார்கள்.

நூலாய்த் தளர்ந்து போயிருந்த காசிநாத்தைப் பார்த்து காலொனல் கேட்டார்.

"காசிநாத... ராணுவத்தில் உயர் பதவி வகித்த நீங்கள் குற்றவாளியாகக் கைது செய்யப்பட்ட பிறகு இப்படி வாயைத் திறக்காமல் அடம்பிடிப்பது உங்களுக்கு அழகல்ல... உங்களை மாதிரி உயரதிகாரிகளிடம் மூன்றாந்தர விசாரணை முறைகளைக் கடைபிடிக்க வேண்டாம் என நினைக்கிறோம்..."

அவர்களின் அத்தனை சித்திரவதைகளுக்கும் ஈடு கொடுத்து உடல் தளர்ந்து போயிருந்தாலும் பிடிவாதமாய் வாயை இறுகச் சாத்தியிருந்தார் காசிநாத்.

மேஜர் ஜெனரல் திரும்பினார்.

"மயிலே... மயிலே இறகு போடுன்னா போடாது..."

ஜோஷி கேட்டார்.

"தேர்ட் டிகிரி மெத்தட்ஸைப் பிரயோகிக்கலாமா ஸார்...?"

காலொனல் மறுத்தலாய்த் தலையசைத்தார்.

''அதுக்கெல்லாம்கூட இவர் மசிய மாட்டார்... உயர் ராணுவ அதிகாரியான இவர் வாயிலிருந்து உண்மையை வரவழைக்க இந்த வழியெல்லாம் உதவாது..."

"வேற எப்படி ஸார்...?"

"இண்டர்காம் மூலமா மிலிட்டரி டாக்டரை உடனே பிடியுங்கள்."

ஜோஷி அவரைக் குழப்பமாய்ப் பார்த்துக் கொண்டே அந்த கார்ட்லெஸ் ஹேண்ட் செட்டின் மேலிருந்த பொத்தான்களில் சிலவற்றைத் தொட்டார்.

"ஹலோ... டாக்டர் கிரிதாரி...?"



"எஸ்..."

"ஒரு நிமிஷம் லைனில் இருங்கள் டாக்டர்..."

சொல்லிவிட்டு ஹேண்ட்செட்டை காலொனலிடம் நீட்டினார் ஜோஷி.

"டாக்டர் ஈஸ் ஆன் த லைன் ஸார்..."

ஹேண்ட் செட்டைக் கையில் வாங்கிக் குரலை உயர்த்திப் பேச ஆரம்பித்தார் காலொனல்.

"நான் காலொனல் பேசறேன்..."

"வணக்கம் ஸார்... ஐ'யாம் டாக்டர் கிரிதாரி..."

"உங்கள் ரெஜிமெண்ட் மேஜர் பிடிபட்ட விபரம் இந்நேரம் உங்களுக்குத் தெரிந்திருக்குமே...?"

"தகவல் வந்தது ஸார்..."

"விசாரணை செல்லிலிருந்துதான் நான் பேசுகிறேன். வழக்கமான எல்லா விசாரணை முறைகளையும் கையாண்டு பார்த்தாகி விட்டது... மேஜர் வாயைத் திறக்க மறுக்கிறார்... அவரை வாயைத் திறக்க வைக்க வேண்டும் என்றால் இனி ஒரே வழிதான் உள்ளது... அதற்காகத்தான் உங்களைக் கூப்பிட்டேன்..."

"நான் அங்கே வரவேண்டுமா ஸார்...?"

"எஸ்... மருத்துவ ரீதியான முயற்சிகளினால் அவரைப் பேச வைக்க வேண்டும்..."

"புரிந்தது ஸார்... நான் சில நிமிஷங்களில் அங்கே வருகிறேன்..."

"அந்த இஞ்செக்ஷன் மெடிசன் கைவசம் இருக்கிறதா...?"

"இருக்கிறது ஸார்..."

இண்டர்காம் உரையாடலை முடித்துக் கொண்டு ஹேண்ட் செட்டை அணைத்துக்

கீழே வைத்தார் காலொனல்.

சற்று நேரம் காத்திருந்தார்கள்.

செல்லின் வாசலில் புல்லட்டின் தடதட சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து கையில் மெடிக்கல் கிட்டோடு உள்ளே பிரவேசித்தார் டாக்டர் கிரிதாரி.

குழப்ப முகத்தோடு காலொனலைப் பார்த்த ஜோஷி கேட்டார்.

"ஸார்... டாக்டரை வரவழைத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை...!"

காலொனல் புன்னகைத்தார்.

"எப்பேர்ப்பட்ட அழுத்தக்கார தீவிரவாதியையும் பேச வைக்க அதிநவீன முறைகள் வந்து விட்டன... அப்படிப்பட்ட முறைகளில் ஒன்றைத்தான் நாம் இப்போது மேஜரிடம் பிரயோகிக்கப் போகிறோம்..."

"என்ன முறை ஸார்...?"

"ட்ரு டெல்லர் என்று ஒரு மெடிசன் இருக்கிறது... டிராங்குலைஸர் வகையைச் சேர்ந்தது... அந்த ட்ரு டெல்லரைக் கொஞ்சம் கொஞ்சமாக இவர் உடம்பில் செலுத்தவேண்டும்... டோஸ் அதிகமாக அதிகமாக உள்ளுக்குள் ரசாயன அவஸ்தைகள் ஆரம்பமாகும்... சற்று நேரத்தில் விட்டால் போதும் என்று காசிநாத் அலற ஆரம்பிப்பார்... அந்தச் சமயத்தில் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் உண்மைகளை மறைக்கும் சக்தி அவருக்கு இருக்காது... எப்பேர்ப்பட்ட அழுத்தமான தீவிரவாதியையும் இந்த முறையைக் கையாண்டு வாயைத் திறக்க வைத்து விடலாம்..."

டாக்டர் கிரிதாரி சிரிஞ்சில் ட்ரு டெல்லர்



மெடிசனை நிரப்பினார்.

மேஜர் ஜெனரல் குறுக்கிட்டுச் சொன்னார்.

"டாக்டர்... முதலில் பத்து மில்லி டோஸ் போதும்... படிப்படியாக டோஸை அதிகரித்துக் கொள்ளலாம்..."

"எஸ் ஸார்..."

சொல்லிக் கொண்டு நாற்காலியோடு சேர்த்து இறுக்கமாய்ப் பிணைக்கப்பட்டிருந்த காசிநாத்தை நெருங்கி அவர் புஜத்தில் பஞ்சைத் தேய்த்து ஊசியைச் சொருகி சிரிஞ்சை அழுத்தினார்.

சிரிஞ்சில் மருந்தின் மட்டம் குறைந்து கொண்டே வந்தது.

நீடிலை வெளியே எடுத்து விட்டு மறுபடியும் ஊசி போட்ட இடத்தை பஞ்சினால் துடைத்தார்.

காசிநாத்துக்குள் ரசாயன மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன.

ஐந்து நிமிஷ கழிதலுக்குப் பின் கிரிதாரி சிரிஞ்சோடு மறுபடியும் காசிநாத்தை நெருங்க, அவர் அலறினார்.

"நநோ... நநோ... வேண்டாம்... அந்த இஞ்செக்ஷன் வேண்டாம்..."

"அப்படியானால் உண்மைகளைச் சொல்லுங்கள் காசிநாத்..." என்றார் காலொனல்.

மறுபடி அவர் மவுனம் சாதிக்க...

"டாக்டர்... கோ அஹெட்... காசிநாத்துக்கு அடுத்த டோஸை இஞ்செக்ட் பண்ணுங்கள்..."

கிரிதாரி அவர் புஜத்தில் ஊசியைப் பதித்தார். ட்ரு டெல்லர் மேலும் ஒரு டோஸ் அவர் ரத்தத்துடன் கலக்க இருக்கையிலிருந்து திமிறினார் காசிநாத்.

"சொல்லிவிடுகிறேன்...நான் சொல்லி

விடுகிறேன்...என்னை விட்டுவிடுங்கள்... எனக்கு இந்த மெடிசன் வேண்டாம்..."

புஜத்தை உதறிக்கொண்டே கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மெல்லமெல்ல நிஜங்களைக் கொட்ட ஆரம்பித்தார் காசிநாத்.

"தருண் ஒரு பாவமும் அறியாதவன்... நானும் உமாவும் சேர்ந்துதான் அவன் மேல் பழியைப் போட்டோம்..."

"நடந்த சதியில் உங்களுடைய பங்கு என்ன...?"

"வெனிசுலா நாட்டு அதிபரின் அஸ்திக் கலசங்களுக்கு பதிலாக அபாயகரமான ரசாயனப் பவுடரைத் தாங்கியிருக்கும் கலசங்களை விமானத்தில் அனுப்பி வைப்பதுதான் எனக்குத் தரப்பட்ட அசைன்மெண்ட்... அந்தப் பழியை யாராவது அப்பாவி மேல் போட்டு அவனைச் சாகடித்து விடவும் சொல்லியிருந்தார்கள்... இதற்காக எனக்கு பல லட்சம் டாலர்கள் கூலி கொடுக்கப்பட்டது..."

"யாருக்காக இந்தக் காரியத்தைச் செய்தீர்கள்...?"

"வெளிநாட்டுத் தீவிரவாதிகளுக்காக..."

"வெளிநாடு என்றால்...?"

"பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதிகள்... நம் நாடு பூராவும் ஏராளமான உயிர்பலிகள் விழ வேண்டும் என்கிற நோக்கத்தில் உருவாக்கப்பட்டதுதான் இந்த சதி..."

மேஜர் ஜெனரல் ஜோஷியிடம் திரும்பினார்.

"ஜோஷி..."

"எஸ் ஸார்..."

"இவர் கொடுக்கும் வாக்குமூலத்தை பதிவு செய்து கொள்கிறீர்களா...?"

"வாக்குமூலம் பதிவாகிக் கொண்டி



ருக்கிறது..."

"சம்பந்தப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதிகள் இப்பொழுது எங்கிருக்கிறார்கள்..."

"அதைப் பற்றி எனக்குத் தெரியாது..."

"மேஜர்... உண்மைகளை மறைக்க வேண்டாம்..."

காலொனல் குறுக்கிட்டார்.

"டாக்டர்... இன்னும் கொஞ்சம் ட்ரு டெல்லரை அவர் உடம்பில் செலுத்துங்கள்... இன்னும் அதிகமாய் உண்மைகளைச் சொல்லுவார்..."

காசிநாத் அலறினார்.

"நோ... டாக்டர்... என்னை விட்டு விடுங்கள்... எனக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் அட்சரம் பிசகாமல் நான் சொல்லி விட்டேன்... ரெஜிமெண்ட்டுக்குள் நடந்த விவகாரங்கள் மட்டுமே எனக்குத் தெரியும்... வெளியே இந்த சபோட்டேஜில் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம் சத்தியமாக எனக்கு எதுவும் தெரியாது..."

ஒரு மணி நேர விசாரணை முடிந்த பிறகு ஜோஷி, காலொனல், மேஜர் ஜெனரல் மூவரும் அந்த விசாரணை செல்லை விட்டு வெளியே வந்தார்கள்.

காலொனல் சொன்னார்.

"ரெஜிமெண்ட்டுக்குள் நடந்த தவறுகள்... அந்தத் தவறுகளுக்கு மேஜர் காசிநாத்துடன் உடந்தையாக இருந்தவர்கள் யார் யார்... இந்த விபரங்களெல்லாம் தெரிந்து விட்டன... ஆனால் அபாயகரமான ரசாயனப் பவுடரோடு பறந்து விட்ட ஏ என் 52 விமானத்தை - ரசாயனம் ஸ்ப்ரே செய்யப்படும் முன்பு தடுத்து நிறுத்துவது எப்படி என்பதுதான் புரியவில்லை..."

"ஏர்ஃபோர்ஸ் அதிகாரிகள் ராடாரில் அந்த விமானத்தைக் கண்காணித்து வருகிறார்கள்.. ஆன்ட்டி ஏர்க்ராஃப்ட் மிசைல்களின் உதவியுடன் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்த பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து உத்தரவு வந்து விட்டது... எப்படியும் சில மணி நேரத்திற்குள்ளாக அந்த விமானம் சுட்டு வீழ்த்தப்படும்..."

அவர் சொன்ன விநாடி -

பரபரப்பான முகத்தோடு அந்த கார்ப்பொரல் குறுக்கே வந்தார்.

விறைப்பான ராணுவ சல்யூட் ஒன்றை மூவருக்கும் விநியோகித்து விட்டு சிவப்பு விளக்கு பளிச்சிடும் அந்த தொலைத் தொடர்பு சாதனத்தை மேஜர் ஜெனரலின் கையில் கொடுத்தார்.

"ஸார்... ஏர் மார்ஷலிடம் இருந்து உங்களுக்கு அவசர கால்..."

அந்த சாதனத்தை வாங்கிப் பேச ஆரம்பித்தார் மேஜர் ஜெனரல்.

"ஹலோ... மேஜர் ஜெனரல் ஹியர்..."

மறுமுனையிலிருந்து ஏர்மார்ஷலின் கனத்த குரல்.

"ஒரு மோசமான செய்தியோடு உங்களைத் தொடர்பு கொண்டுள்ளேன் மேஜர் ஜெனரல்..."

நெற்றிப்பரப்பில் கவலை வரிகள் விழ - குரலை வெளியிட்டார் மேஜர் ஜெனரல்.

"என்ன செய்தி...?"

"அந்த ஏ என் 52 ஏர்கிராஃப்ட், ராடாரின் கண்களுக்குச் சிக்காமல் எங்கோ நழுவி விட்டது. ராடாரின் பார்வையில் கிடைக்காத வரை அதைச் சுட்டு வீழ்த்துவது சாத்தியமில்லை..."

அதிர்ச்சியடைந்தார் மேஜர் ஜெனரல்.

# 20

ஏ.என். 52 அலுமினியப் பறவை காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்து கொண்டிருந்தது.

ராணுவ ஜவான்களுக்கான உடை அணிந்திருந்த அந்த இரண்டு பேரும் உற்சாகத்தோடு ஃப்ளைட்டை செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு எதிர்ப்புக் காட்டிய பைலட் அவர்களால் சுடப்பட்டு குற்றுயிரும் குலையுயிருமாய்க் கீழே விழுந்து கிடந்தான்.

மீசையில்லாமல் வழவழ முகத்தோடு இருந்த ஒருவன் சொன்னான்.

"முதலில் இந்த இந்திய ராணுவ உடைகளைக் களைந்து தூர வீசி எறிய வேண்டும்..."

"ஏன் பஷீர்...?"

"ஏதோ நெருப்பைச் சுமந்து கொண்டிருப்பதைப் போலிருக்கிறது ரியாஸ்..."

அந்த ரியாஸ் அகலமாய்ச் சிரித்தான்.

"உண்மையான பாகிஸ்தானி ஒவ்வொருவனுக்கும் இதை அணிவதென்பது நெருப்பை அணிவதற்குச் சமம்தான். ஆனால் நாம் நம்முடைய தேச காரியத்துக்காகத்தான் இதை அணிந்தோம்."

"இத்தனை நாள்தான் நிர்ப்பந்தம்... இன்னும் ஏன் இதைச் சுமக்க வேண்டும்...?"

"இன்னும் நமது பணி முழுமை அடையவில்லை பஷீர்..."

"இந்திய ராணுவத்திற்கு தண்ணி காட்டி விட்டு ஃப்ளைட்டோடு நாம் கிளம்பி வந்தாயிற்று... இன்னும் என்ன பாக்கி இருக்கிறது...?"

ரியாஸ் சீரியஸான முகத்தோடு சொன்னான்.

"இந்தியன் ஏர்ஃபோர்ஸ் நடவடிக்கை எடுக்கும் முன் நாம் ரசாயனப் பவுடரைத் தூவ வேண்டிய இடங்களில் தூவி முடித்துவிட்டு இதே ஃப்ளைட்டில் தப்பிச் சென்று விட வேண்டும்."

"கவலைப்படாதே... எல்லாமே திட்டமிட்டபடி சரியாய் நடக்கும்."

"அதற்கில்லை... இந்திய ராணுவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது..."

"நீ சொல்வது சரிதான்... இந்நேரம் இந்திய ராணுவத்தின் அத்தனை ராடார்களும் நம்மை அதி தீவிரமாய்த் துழாவிக் கொண்டிருக்கும்... ஆண்ட்டி ஏர்க்ராஃப்ட் பீரங்கிகள் நம்மை சுட்டு வீழ்த்த வெகு ஆயத்தமாய்க் காத்திருக்கும்... ஆனாலும் அந்த ராடார்களுக்குச் சிக்காமல் தண்ணி காட்டி விடலாம்..."

"முடியுமா ரியாஸ்...?"

"ஏன் முடியாது...? போலி ஆவணங்களைக் காட்டி இந்திய ராணுவத்தில் சேர்ந்து ஒரு வருடத்திற்கு மேல் யாருக்கும் எந்த சந்தேகமும் வராமல் காலந்தள்ளி விட்டோம்... எப்பேர்ப்பட்ட எத்தனையும் ஏமாற்றும் சாமர்த்தியம் நமக்கு உள்ளது..."

சொன்ன ரியாஸ் பேனல் போர்டைப் பார்த்து விட்டுச் சொன்னான்.

"இமயமலைச் சாரலை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்... அஸ்திக் கலசங்களில் உள்ள ரசாயனப் பவுடரை மலர்களோடு சேர்த்து ராணுவ மரியாதையோடு இந்தப் பகுதியில் தூவி விடலாம்... இங்கே இருந்து உற்பத்தியாகும்



அத்தனை நதிகளும் நிமிஷங்களில் விஷமாகும்..."

"ஆகட்டும்... இந்தியனாகப் பிறந்த பாவத்திற்காக இங்கிருக்கிற அத்தனை மனிதர்களும் சாகட்டும்..."

ரசாயனப் பவுடரால்நிரப்பப்பட்ட அஸ்திக் கலசங்களை எடுத்து வைத்தான் பஷீர்.

அந்த விநாடி...

மலர்களைக் கொட்டி வைத்திருந்த அறையில் ஏதோ அசைவு தெரிந்தது.

அந்த அசைவைக் கவனித்தவனாய் சட்டென்று திரும்பினான் பஷீர்.

மலர்க் குவியல்களுக்கு இடையே இருந்து ஓர் உருவம் திடீரென்று வெளிப்பட்டது.

என்ன ஏது என்று யோசிக்கும் முன்பாக அந்த உருவம் தனது திடகாத்திரமான கைகளால் பஷீரை வளைத்துப் பிடித்தது.

பஷீர் திமிற முயற்சிக்க அவன் கழுத்தில் ஜில்லென்று ஒரு பிஸ்டல் பதிந்தது.

"அசையாதே... அசைந்தால் சுட்டு விடுவேன்..."

அமெரிக்க அசெண்ட் ஆங்கிலத்தில் உச்சரிப்பு முதுகுக்குப் பின்னால் கேட்டது.

சத்தம் கேட்டு காக்பிட் அறையிலிருந்து ஓடிப் பார்த்த ரியாஸ் திடுக்கிட்டான்.

"ஏய்... யார் நீ...?"

பஷீரை ஹூக்குச் சங்கிலியால் பிணைத்தது போல இறுக்கிப் பிடித்திருந்த அந்த வெள்ளைக்காரனைப் பார்த்து கோபத்துடன் சீறினான் ரியாஸ்.

அவனுடைய கோபப் பார்வையை அலட்சியப்படுத்தியபடி சொன்னான் அந்த வெள்ளைக்காரன்.

"ரியாஸ்! நீயோ... அல்லது இந்த பஷீரோ... இரண்டு பேரில் யார் அசைந்தாலும் சரி...

குருவியை சுடுவதைப் போல சுட்டுக் கொன்று விடுவேன்..."

அவன் உறுமலையும் ஆஜானுபாகுவான ஆகிருதியையும் பார்த்து சற்றே பின்வாங்கி நின்றான் ரியாஸ்.

மெல்லிய குரலில் கேட்டான்.

"உ... உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே...?"

"டெஹ்ரா ராணுவ ரெஜிமெண்ட்டில்தான் பார்த்திருப்பாய்..."

"எஸ்...எஸ்...அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் மெயின்ட்டெனன்ஸ் என்ஜினியர் 'கேட்டிங்' அல்லவா நீ...?"

"யு ஆர் அப்சல்யூட்லி ரைட்... அமெரிக்கா சப்ளை செய்த ஆர்ட்டில்லரிகளில் சிலவற்றை சரிப்படுத்துவதற்காகவே நான் இங்கே வந்தேன்..."

"வந்த வேலையைச் செய்வதை விட்டு விட்டு இந்த ஃப்ளைட்டிற்குள் எதற்காக வந்தாய்...?"

சிரித்தான் கேட்டிங்.

"மெயின்ட்டெனன்ஸ் என்ஜினியர் என்ற போர்வையில் நான் ரெஜிமெண்ட்டுக்கு வந்திருந்தாலும்... உங்களை மடக்குவதுதான் என்னுடைய முக்கிய நோக்கம்... உங்களை மடக்குவதற்காகத்தான் அமெரிக்க அரசாங்கம் என்னை அனுப்பி வைத்தது..."

ரியாஸின் முகத்தில் குழப்பம் தாண்டவம் ஆடியது.

"எங்களை எதற்காக நீ மடக்க வேண்டும்...?"

தொடர்ந்து சிரித்தான் கேட்டிங்.

"அதை அப்புறம் தெரிந்து கொள்ளலாம்... இப்போதைக்கு ஃப்ளைட்டை நான் சொல்கிற திசையில் செலுத்துங்கள்..."



ரியாஸ் சிலை மாதிரி நின்றிருக்க கேட்டிங் உறுமினான்.

"அநாவசியமாய் உங்களைக் கொலை செய்ய வேண்டாம் என்று நினைக்கிறேன்... அடம் பிடித்தால் எனக்கு அதைத் தவிர வேறு வழியிருக்காது..."

கேட்டிங்கின் கையிலிருந்த பிஸ்டலின் ஒற்றைக் கண் இருவரையும் மாறி மாறி முறைக்க-

பயந்த கண்களோடு ரியாஸும் பஷீரும் கேட்டிங்கின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஆரம்பித்தார்கள்.

## 21

ஏறக்குறைய ஒரு மணி நேர ஃப்ளையிங்.

பேனல் போர்டை இயக்கிக் கொண்டிருந்த ரியாஸ் கோபத்தோடு கேட்டிங்கைப் பார்த்துச் சொன்னான்.

"எங்கள் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியிருந்தால் இந்நேரம் இந்தியாவில் ஏராளமாய் உயிர்ப்பலிகள் விழ ஆரம்பித்திருக்கும்... திட்டத்தின் அத்தனை படிகளும் கச்சிதமாக நிறைவேறியிருக்க... கடைசி நிமிஷத்தில் நீ காரியத்தைக் கெடுத்து விட்டாய்..."

பஷீர் எரிச்சலோடு கேட்டான்.

"இந்தியாவைக் காப்பாற்றுவதில் உனக்கு என்ன அவ்வளவு அக்கறை...?"

புன்னகைத்தான் கேட்டிங்.

"கண்ணெதிரே அப்பாவி மக்கள் செத்து மடிவதைக் கட்டுப்படுத்த முடியாமல் இந்திய அரசாங்கம் கையைப் பிசைய

வேண்டும்... அதுதான் உங்கள் நோக்கம்... அப்படித்தானே...?"

"அதில் என்ன சந்தேகம்...?"

"நீ நினைக்கிறாற் போல் இந்தியர்களைக் காப்பாற்றுவதற்காக உங்கள் இருவரையும் நான் மடக்கவில்லை... வெள்ளைக்காரனான எனக்கு அவர்கள் மேல் அக்கறை எதுவும் இல்லை..."

"பிறகு எதற்கு இந்த ஹைஜாக்...?"

"இந்திய தேசத்தை இன்னும் அதிகமாகக் கையைப் பிசைய வைக்கத்தான்..."

"புரியவில்லை..."

"நீங்கள் ஒரு ப்ளான் போட்டீர்கள்... அந்தப் ப்ளானையே அஸ்திவாரமாக வைத்து நாங்கள் ஒரு மாஸ்டர் பிளான் போட்டிருக்கிறோம்..."

"விளக்கமாகச் சொல்..."

சிரித்தான் கேட்டிங்.

"அட்சர சுத்தமாக உங்களிடம் விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்க அவகாசம் இல்லை... தவிர உங்களிடம் விளக்க வேண்டும் என்ற அவசியமும் எனக்கு இல்லை..."

கேட்டிங் சொன்ன விநாடி-

அவன் கையிலிருந்த வயாலஸ் மாதிரியான கருவி சிவப்பு விளக்கு மின்னி 'பீப் பீப்' என்று சப்தம் வெளியிட ஆரம்பித்தது. கருவியின் பொத்தான்களைத் தட்டி-

"ஹலோ... ஹலோ... கேட்டிங் ஹியர்..."

கத்தினான் கேட்டிங்.

மறுமுனையிலிருந்து காகரத்த அமெரிக்க ஆங்கிலம்-

"நம் ரகசிய மறைவிடத்தை அடைந்து விட்டாய் கேட்டிங்... சரியான இடத்தில்



இப்போது பறந்து கொண்டிருக்கிறாய்... கீழே... ரன்வே தெரிகிறதா...?"

கம்பிக் கண்ணாடிகளின் வழியே கீழே பார்வையைப் போட்டவன் திகைப்புடன் சொன்னான்.

"இல்லையே...?"

"நீ பறந்து கொண்டிருக்கும் இடத்திற்கு நேர் கீழேதான் ரன்வே இருக்கிறது."

ரியாஸ், பஷீர் ஆகியோரின் மேல் கவனம் இழக்காமல் ஜாக்கிரதை உணர்வோடு மீண்டும் எட்டிப் பார்த்தான் கேட்டிங்.

"பச்சைப் பசேலென்று அடர்த்தியான காடுதான் தெரிகிறது... ரன்வே தடம் எதுவும் கண்களுக்குப் புலப்படவில்லையே...?"

"நல்லது... ரன்வேயை நாங்கள் மறைத்து வைத்திருக்கிறோம்..."

"மறைத்து வைத்திருக்கிறீர்களா...? என்ன சொல்கிறீர்கள்...?"

"நம் இருப்பிடம் யாருக்கும் தெரிந்து விடாமல் இருக்க செயற்கை இலை தழைகளைப் போட்டு ரன்வேயை மூடி வைத்துள்ளோம்... மேலிருந்து ஏரியல் வியூவில் பார்க்கிறபோது அடர்த்தியான காடுதான் தெரியும்..."

"இப்போது நான் எப்படி விமானத்தை இறக்குவது...?"

"செயற்கை இலைகளை அகற்றச் சொல்லி உத்தரவிட்டுள்ளேன்... விமானத்தை இறக்கிய பிறகு பழையபடி மூடிவிடலாம்..."

விமானம் அந்தப் பகுதியை இரண்டு முறை வட்டமடிக்க - அதற்குள் கீழே ரன்வே புலப்பட ஆரம்பித்தது.

அந்த ரன்வேயில் விமானத்தை இறக்கும்படி ரியாஸுக்குக் கட்டளையிட்டான் கேட்டிங்.

விமானம் கொஞ்சம் கொஞ்சமாய் உயரம் இழந்து தரையைத் தொட்டு நிற்க,

தடதடவென்று ஏராளமான வெள்ளைக்காரர்கள் விமானத்தைச் சூழ்ந்து கொண்டார்கள்.

நிமிஷங்களில் அந்த இடத்தை மீண்டும் செயற்கை இலை தழைகளால் கச்சிதமாய் மூடி வைத்தார்கள்.

விமானத்திற்குள் விழுந்து கிடந்த பைலட் அத்தனை துடிப்புகளும் அடங்கிப் போய் இந்த நிமிஷம் முழுதாக இறந்திருந்தான்.

செத்துப் போன பைலட்டை இருவர் அப்புறப்படுத்தினார்கள். மேலும் இருவர் சியாமளையும் பஷீரையும் கைகளைக் கட்டி இழுத்துச் சென்றார்கள்.

அங்கிருந்த உயரமான வெள்ளைக்காரன் புன்னகைத்தான்.

"கேட்டிங்... இந்த நிமிஷத்திலிருந்து நாம் இந்திய அரசாங்கத்திற்கு உச்சபட்ச தலைவலியைத் தர ஆரம்பிக்கலாம்..."

குரூரப் புன்னகைகளோடு அங்கிருந்த டென்ட்டுக்குள் பிரவேசித்து வயர்லஸ் சாதனத்தை நெருங்கினார்கள்.

## 22

டிஃபன்ஸ் மினிஸ்ட்ரி வளாகத்தின் மையத்தில் இருந்த ஏஸி அறையில் பாதுகாப்புத் துறை அமைச்சர், முப்படைத் தலைமை அதிகாரிகள், துறைச் செயலர்கள் கவலை தோய்ந்த முகங்களோடு நீள்வட்ட மேஜையைச் சுற்றி இருக்கைகளில் நிரம்பியிருந்தார்கள்.

"இந்த நிமிஷம் நிலைமை என்ன...?



நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தாவது அசம்பாவித சம்பவங்கள் நடந்ததாகத் தகவல்கள் வந்து இருக்கிறதா...?"

அமைச்சர் கேட்க - உள்துறைச் செயலர் அவசரமாய் மறுத்தார்.

"நோ ஸார்... அப்படி எதும் நடக்கவில்லை..."

"இதுவரை எந்தத் தகவலும் தெரியவில்லை... ஆனால் இந்திய வான் பகுதிகள் முழுவதும் ராடாரின் உதவியால் தீவிரமாய்க் கண்காணிக்கப்படுகின்றன... அந்த விமானம் நம் கண்காணிப்பு எல்லையைத் தாண்டி எங்கோ சென்று விட்டது."

அமைச்சரின் நெற்றியில் கவலை ரேகைகள் அழுத்தமாய்ப் பதிந்திருக்க - குரலைத் தொடர்ந்தார்.

"அவர்கள் பதுங்குவது... நிச்சயம் பாய்வதற்காகத்தான் இருக்கும்..."

ஏர்மார்ஷல் தயக்கமான குரலுடன் குறுக்கிட்டார்.

"ஸார்... அவர்கள் நினைத்திருந்தால் ரசாயனப் பவுடரை நதிகளில் தூவும் காரியத்தை மிகமிகச் சுலபமாக சில விநாடிகளில் செய்திருக்க முடியும்... ஆனால் அப்படி எதும் நடக்காமல் விமானம் நம் பார்வையை விட்டு மறைந்ததைப் பார்த்தால் வேறு ஏதோ குளறுபடி என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது..."

"ஆன்ட்டி ஏர் கிராஃப்ட் பீரங்கிகளைக் கொண்டு அந்த விமானத்தை நம்மால் சுட்டு வீழ்த்தியிருக்க முடியாதா...?"

"ராடாரின் பார்வையில் விமானம் சிக்கும் பட்சத்தில் அது முடியும்... ஆனால்... விமானம் பீரங்கியால் சுடப்படுவதும்...

அவர்கள் ரசாயனத் துகள்களைத் தூவுவதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தால் ஒரு விபரீதம் நடப்பதை யாராலும் தடுக்க முடியாது..."

"அப்படியானால் அந்த விமானம் மீண்டும் இந்திய எல்லைக்குள் பறக்க எத்தனிக்கும் முன்பு அதன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து தீவிரவாதிகளை மடக்கி கெமிக்கல்களை மீட்டாக வேண்டும்..."

அமைச்சர் சொன்ன விநாடி-

ஒரு அலுவலர் உள்ளே வந்து உள்துறை செயலரிடம் என்னவோ கிசுகிசுக்க - அவர் பரபரப்பாகி சட்டென்று எழுந்தார்.

நேரே அமைச்சரிடம் சென்று இருக்கைக்குக் குனிந்து மெல்லிய குரலில் சொன்னார்.

"ஸார்... புலி பதுங்குவது பாய்வதற்காகத்தான் இருக்கும் என்று நீங்கள் சொன்னது மிகவும் சரியாகப் போய்விட்டது... தீவிரவாதிகள் நம்மைத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்...."

"என்ன சொல்லுகிறார்கள்...?"

"நம் அலுவலர்கள் விபரம் கேட்டு - அவர்கள் சொல்ல மறுத்து விட்டார்களாம்... பாதுகாப்புத் துறை அமைச்சர்... பிரதமர்... இவர்களில் ஒருவரிடம்தான் விரிவாய்ப் பேச முடியும் என்று சொல்லி விட்டார்கள்."

அமைச்சர் எழுந்தார்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் செய்திகள் வந்தபடி பரபரப்புடன் இருந்த கம்யூனிகேஷன் ஹாலுக்குள் நுழைந்தார்கள்.

விசேஷப் பிரிவிற்குள் சென்ற போது - தொலைத் தொடர்புச் சாதனம் சிவப்பு விளக்கைத் துடிக்க விட்டுக் கொண்டிருந்தது.

"டிஃபன்ஸ் மினிஸ்டர் ஸ்பீக்கிங்..." என்று



அவர் சொல்ல - மறுமுனையிலிருந்து ஆங்கிலம் பிரவாகம் எடுத்தது.

"மிஸ்டர் மினிஸ்டர்... நாங்கள் செய்தது தப்பான காரியமாக இருக்கலாம்... ஆனால் இந்தியாவுக்கு நேர இருந்த ஒரு மிகப்பெரிய விபரீதம் தற்போது எங்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது..."

"யார் நீங்கள்...?"

"கூலிப் படை..."

"கூலிப்படையா...? யாருடைய கூலிப்படை....?"

"பணம் யார் தந்தாலும் அவர்களுக்கு விசுவாசமாகக் காரியங்களைச் செய்து முடிப்போம்..."

"உங்களுக்குப் பணம் தந்தது யார்...?"

"அதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லாத விபரம்... தற்போது நாங்கள் பலம் வாய்ந்த வல்லரசு நாடுகளுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள் என்ற தகவலை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்..."

"உங்களுக்கு என்ன வேண்டும்...?"

"அதைப் பற்றி விளக்கமாகவே சொல்லி விடுகிறேன்... உங்கள் அண்டை நாட்டு தீவிரவாதிகள் உங்கள் தேசத்தில் பெரும் உயிர்ச்சேதம் விளைவிக்கத் தீட்டியிருந்த திட்டம் பற்றி உங்களுக்கு மிக நன்றாகவே தெரிந்திருக்கும்... அந்தச் சதியைத் தடுக்க இயலாமல் நீங்கள் கையைப் பிசைந்து நின்ற இக்கட்டான நேரத்தில்தான் அந்த விமானத்தை ஹைஜாக் செய்து எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டோம்... இந்த அரிய காரியத்துக்காக அவசரப்பட்டு எனக்கு நன்றி சொல்லி விடாதீர்கள்... ஏனென்றால் நான் இனிமேல் தான் விஷயத்துக்கே வருகிறேன்..."

சில விநாடிகள் மூச்சு வாங்கி விட்டுத் தொடர்ந்தான் மறுமுனைக்காரன்.

"அந்த தீவிரவாதிகள் எங்களால் தற்காலிகமாய் சிறைப்பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்துக்கு நாங்கள் ஒரு கோரிக்கையை முன் வைக்கப் போகிறோம்... அந்தக் கோரிக்கையை இந்தியா நிறைவேற்றினால் தீவிரவாதிகளை கட்டுக் கொன்று விட்டு ரசாயனப் படைகளையும் மீட்டுத் தருகிறோம்... ஆனால் நீங்கள் எங்கள் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்தால்... அவர்களை எங்கள் பிடியிலிருந்து உடனடியாய் விடுவித்து விடுவோம்... எங்களால் ஒத்தி வைக்கப்பட்ட ஆபத்து மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும்..."

அதிர்ச்சியைப் பூசிக் கொண்ட முகத்தோடு அமைச்சர் வயர்லஸ் ரிசீவரைப் பார்த்தார்.

"உன்னுடைய கோரிக்கை என்ன...?"

"என்னுடைய கோரிக்கை CTBT சம்பந்தமானது..."

"என்ன... CTBTயா...?"

"ஆமாம்... கம்ப்ரஹின்சிவ் டெஸ்ட் பேன் ட்ரீட்டி... (COMPREHENSIVE TEST BAN TREATY)"

வியர்வை அரும்ப அமைச்சர் கேட்டார்.

"சி.டி.பி.டிக்கும் உன்னுடைய கோரிக்கைக்கும் என்ன சம்பந்தம்...?"

"என்ன இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்... இன்றைக்கு உலகம் பூராவும் பரபரப்பாய் பேசப்படுவது இந்த அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் பற்றிய பேச்சுத்தானே...? அமெரிக்கா, இங்கிலாந்து, சைனா, பிரான்ஸ் உள்ளிட்ட சில நாடுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்தைப் போட்டு விட்டன... நீங்கள்தான் முரண்டு பிடிக்கிறீர்கள்..."



"இந்தியா அமைதியை விரும்பும் தேசம்... அணு ஆயுதத்தை முழுவதுமாய் ஒழிக்க ஏதேனும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டால் முன்னால் நிற்பது இந்தியாவாகத்தான் இருக்கும்... ஆனால் சி.டி.பி.டி. ஒப்பந்தம் சற்று ஓரவஞ்சனை உள்ளது. செய்து பார்க்க வேண்டிய அத்தனை அணு ஆயுத சோதனைகளையும் செய்து முடித்துக் கொண்ட வல்லரசு நாடுகள் வளர்ந்து வரும் தேசங்களை நசுக்குவதற்காக எடுத்திருக்கும் நடவடிக்கைதான் இந்த ஒப்பந்தம்..."

"உங்கள் கதையைக் கேட்பதற்காக நான் உங்களுடன் பேசிக்கொண்டு இருக்கவில்லை... இந்தியாவில் லட்சக்கணக்கான உயிர் பலிகளைத் தடுக்கவேண்டும் என்ற அக்கறை இருந்தால் வருகிற பதினாலாம் தேதி நடைபெறும் உலக நாடுகள் மாநாட்டில் CTBT ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடட்டும்... இல்லையேல் பதினைந்தாம் தேதியே உங்கள் தேசம் முழுவதுமாய் ஒரு மாபெரும் மரணப் போராட்டத்தை சந்திக்கத் தயாரா யிருங்கள்..."

"தட்..."

தொடர்பு அறுந்தது.

தொடர்ந்து பலத்த மவுனம் நிலவியது.

அமைச்சர் திரும்பி செயலரைப் பார்த்தார்.

"அவன் பேசியதைக் கேட்டீர்களா...?"

"கேட்டேன்..."

"அந்தக் கோரிக்கைக்கு இந்தியா ஒருக்காலும் செவி சாய்க்க முடியாது...!"

"அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் நமக்கு உள்ளதே ஸார்...!"

"பதினாலாம் தேதிக்கு இன்னும் எத்தனை நாட்கள் உள்ளன...?"

"இன்னும் ஏழு நாட்களே இருக்கின்றன..."

"உடனடியாய் இரண்டு மிலிட்டரி கமேண்டோக்களைக் களத்தில் இறக்க வேண்டும்... இந்த ஏழு நாட்களுக்குள் விமானத்தோடு அவர்கள் பதுங்கி இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விமானத்தையும் ஆபத்தான அந்த ரசாயனப் பவுடர்களையும் மீட்டாக வேண்டும்... இது ஒன்றுதான் நம் எதிரே இருக்கும் வழி..."

---

## 23

---

கனமான ராணுவ கமேண்டோ உடைகளில் திரம்பியிருந்தார்கள் சுனிலும், ஜோஷியும்.

இந்திய ராணுவத்தின் கான்பிடன்ஷியல் பகுதி ஒன்றில் தங்கள் எதிரே நின்றிருக்கும் பாதுகாப்புத்துறை அமைச்சர், மேஜர் ஜெனரல், ஏர்மார்ஷல் ஆகியோருக்கு விறைப்பாய் சல்யூட் தந்தார்கள்.

அமைச்சர் அவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"ஏராளமான ஷ்ஃபலிங்கிற்குப் பிறகு உங்கள் இருவரையும் சிறப்புக் கமேண்டோக்களாய் தேர்வு செய்து இருக்கிறார்கள்... ஜோஷியின் அனுபவமும்... சுனிலின் இளமையும் கை கோர்த்துக் கொண்டு பணியாற்ற ஒரு வாய்ப்பு...! உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை திறமையாய்ப் பயன்படுத்தி இந்தியாவை மிகப் பெரிய இக்கட்டிலிருந்து



காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இப்போது உங்கள் தோள்களில்..."

"நாங்கள் எங்கள் பணியை சிறப்பாகச் செய்து முடிப்போம் ஸார்..."

"வெல் செட்..."

ஏர்மார்ஷல், ஜோஷியிடம் அந்த வரைபடத்தை நீட்டினார். வரைபடத்தில் சிக்கலான சிவப்புக் கோடுகள், புள்ளிகள் அங்குமிங்கும் ஓடின.

"இந்த மேப்பின் துணையுடன்தான் நீங்கள் தேடுதல் வேட்டையைத் துவக்கப் போகிறீர்கள்..."

"இது என்ன மேப் ஸார்...?"

"மேப்பிலுள்ள சிவப்புப் புள்ளிகளைக் கவனித்தீர்களா...?"

"ஆமாம்..."

"மறைந்துவிட்ட ஏ என் 52 விமானத்தை அந்தப் புள்ளிகள் குறிக்கின்றன..."

"புரியவில்லை..."

"ராடார் அந்த விமானத்தைக் கடைசியாகப் பதிவு செய்த இடங்கள் அவை... விமானம் செல்லும் திசையோடு மேப்பில் பதிவாகியுள்ளது..."

"இந்த மேப்பின் உதவியுடன் விமானம் சென்று மறைந்த இடத்தை சுமாராக யூகிக்கலாம்... இல்லையா...?"

"எஸ்..."

"இதில் பதிவாகியுள்ள திசைகளை வைத்து அனுமானித்தால் - ஏ.என்.52 விமானம் பாகிஸ்தான் - இந்தியா பார்டரில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றிருக்க வாய்ப்பு உள்ளது..."

ஏர்மார்ஷல், ஜோஷியைப் பார்த்துச் சொன்னார்.

"அப்படியானால் அந்தக் காட்டுப்

பகுதியில்தான் உங்கள் தேடல் இருக்க வேண்டும்..."

"எஸ் ஸார்..."

இருவரும் - அதிகாரிகளிடம் விடை பெற்று வராந்தாவை விட்டு இறங்கினார்கள். மைதானத்தின் இருட்டில் - சிவப்பு, பச்சை விளக்குகளோடு மங்கலான உருவமாய் நின்றிருந்தது அந்த லைட் வெயிட் மைக்ரோ ஏர்கிராஃப்ட்.

சுனிலும், ஜோஷியும் அதற்குள்ளே தாவி ஏறினார்கள்.

அளவாய் இரண்டே இரண்டு பேருக்கான இடவசதி மட்டுமே அந்த ஃப்ளைட்டுக்குள் இருந்தது.

ஏர்கிராஃப்டின் பின்பக்கம் எமர்ஜென்சி கேட்டும் - பாராசூட் உடுப்புகளும் தயார் நிலையில் இருந்தன.

சுனில் ஃப்ளைட்டின் இடப்பக்க பொத்தான்களைத் தடவ - எஞ்சின்கள் உறுமின. ஏரோ டயனமிக் ஃபேன்கள் வேகமாய் சுழன்றன.

சற்று தூரம் மைதானத்தில் ஓடிய ஏர்க்ராஃப்ட், மெதுவாய் மேலேறி - சக்கரங்களைத் தன் அலுமினிய உடம்புக்குள் இழுத்துக் கொண்டது.

அத்தனை விளக்குகளையும் அணைத்து விட்டு - பறக்கும் சுவடே தெரியாமல் வானப் பரப்பை ஊடுருவ ஆரம்பித்தது.

பத்து நிமிஷங்கள் பறந்திருந்த போது-

ஸீட்களின் முதுகுக்குப் பின்னாலிருந்து சட்டென்று ஓர் உருவம் வேகத்தோடு எழுந்தது-

திடுக்கிட்டுத் திரும்பினார்கள் சுனிலும் ஜோஷியும்.



கண்களில் வெறி மின்ன ஒரு ஆசாமி அங்கே நின்றிருந்தான்.

அவன் கையில் ஒரு மேக்னம் பிஸ்டல்.

கனமான குரலில் உறுமினான்.

"அசைந்தீர்கள் என்றால் சுட்டு விடுவேன்..."

ஜோஷி கோபத்தோடு அவனைப் பார்த்தார்.

"யார் நீ...?"

"யாரைப் பிடிப்பதற்காக நீங்கள் இரண்டு பேரும் கிளம்பி இருக்கிறீர்களோ... அவர்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதி... நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும்..."

"நீ என்ன சொல்லப் போகிறாய்...?"

"பதினாலாம் தேதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு எங்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதை விட்டு விட்டு இப்படி கொல்லைப்புற வழியில் எங்களைத் தேடிப் பிடிக்க முயல்வதை இந்திய அரசாங்கம் நிறுத்த வேண்டும்..."

"இப்போது எங்களை என்ன செய்யச் சொல்கிறாய்...?"

"கண்ட்ரோல் ரூமின் தொடர்பை விட்டு இன்னும் நீங்கள் விலகிச் செல்லவில்லை இல்லையா...?"

"ஆமாம்..."

"தொடர்பை உயிர்ப்பியுங்கள்..."

"எதற்கு...?"

"ஏன், எதற்கு - இந்த இரண்டு வார்த்தைகளும் எனக்குப் பிடிக்காத வார்த்தைகள்... கேள்வி கேட்காமல் சொன்னதைச் செய்யுங்கள்..."

ஜோஷி சுனிலைப் பார்த்து சைகை செய்ய-

சுனில் கருவியின் பொத்தான்களைத் தட்டினான்.

ஸ்பீக்கரில் கரகரத்த ஓசை கிளம்பியது.

"ஹலோ... கண்ட்ரோல் ரூம்... திஸ் ஈஸ் கண்ட்ரோல் ரூம்..."

அந்த ஆசாமியிடம் திரும்பினான் கனில்.

"கண்ட்ரோல் அறையுடன் தொடர்பு கிடைத்து விட்டது..."

அவன் சிரித்தான்.

"குட்...! இப்போது அவர்களுக்குக் கேட்கும்படியாக உங்களைச் சுட்டுக் கொன்று விட்டு நான் பாராசூட்டில் குதித்து விடப்போகிறேன்... எங்கள் கோரிக்கையை மதிக்காத இந்தியா - நாங்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்..."

கனிலும், ஜோஷியும் அதிர்ச்சியுடன் அவனைப் பார்க்க-

அவன் துப்பாக்கியின் ஒற்றைக் கண் இருவரையும் மாறி மாறி முறைத்தது.

ஜோஷி சட்டென்று ஒரு எதிர்பாராத வினாடியில் அவன் மேல் பாய்ந்தார்.

அவருடைய வலது கால் விஷ்ஷென்று காற்றில் உயர்ந்து அவன் கையிலிருந்த பிஸ்டலைத் தட்டி விட்டது.

பிஸ்டல் 'டிங்டிணார்' என்று சப்தமெழுப்பி - சற்றுத் தள்ளிக் கீழே விழுந்தது.

கனில் தாவிச் சென்று பிஸ்டலைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கத்தினான்.

"ஸார்... நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்... ஐ யாம் கோயிங் டு ஷூட் ஹிம்..."

கனில் கத்தியதும் - ஜோஷி பிடியை விலக்கிக் கொண்டு சட்டென்று விலகினார்.

கனில் அந்த ஆசாமியின் நெஞ்சுக்கு நேராகத் துப்பாக்கியைப் பிடித்து ட்ரிக்கரை அழுத்தினான்.

விஷ்ஷக்க...

விஷ்ஷக்க...



புகையோடு துப்பாக்கி சீறியது.

ஆசாமி ரத்தம் தெறிக்க சுருண்டு விழுவான் என்று எதிர்பார்த்த கனிலும், ஜோஷியும் திடுக்கிட்டுப் போய் பார்க்க-

அவன் புன்னகையோடு அப்படியே நின்றிருந்தான். சொன்னான்.

"அது டம்மி துப்பாக்கி... அந்தத் துப்பாக்கியைக் கொண்டு யாரையும் சுட முடியாது..."

ஜோஷி அவசரமாய் தனது பிஸ்டலை உருவப் போக - அவன் நிதானமாய்ச் சொன்னான்.

"ஒரு நிமிஷம் ஸார்...! என் கையிலிருக்கும் அடையாள அட்டையைப் பார்த்து விட்டு என்னைச் சுடுவதைப் பற்றி யோசியுங்கள்..."

ஜோஷியும், கனிலும் அவன் காட்டிய ஐ.டி. கார்டைப் பார்த்து நெற்றியைச் சுருக்கினார்கள்.

அவன் தொடர்ந்தான்.

"நான் இந்திய ராணுவத்தைச் சேர்ந்தவன்... உங்களின் மனத்திடத்தை சோதிப்பதற்காக மேலிடத்தால் அனுப்பப்பட்டவன்..."

கனில் கோபத்துடன அவனைப் பார்த்தான்.

"மாட்டிக் கொண்டதும் ஏதோ கதை சொல்லி எங்களை ஏமாற்றப் பார்க்கிறாயா...?"

"நோ... ஸார்... இரண்டு விஷயங்களை நீங்கள் கவனிக்க வேண்டும்... இவ்வளவு ரிஸ்க்கான காரியத்தை போலித் துப்பாக்கியை வைத்துக் கொண்டு ஒருவன் செய்ய முயல்வானா...? இது முதல் விஷயம்..."

இருவரும் யோசனையாய் அவனைப் பார்க்க - அவன் தொடர்ந்து சொன்னான்.

"மிகுந்த பாதுகாப்புடன் கான்பிடன்ஷியல் ஏரியாவிலிருந்து கிளம்பிய இந்த ஏர்க்ராஃப்ட்டில் அந்நியன் ஒருவன் ஏறி

உட்காருவதற்கு எந்த சாத்தியங்களும் இல்லை... இது இரண்டாவது விஷயம்...

சுனிலும், ஜோஷியும் குழப்பத்தோடு நிற்க - அவன் உதடுகளிலிருந்து மேலும் வார்த்தைகள் உதிர்ந்தன.

"இதற்கு மேலும் என் மேல் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீங்கள் கண்ட்ரோல் அறையைத் தொடர்பு கொண்டு பேசிப் பார்க்கலாம்... நிலைமை விபரீதமானால் அவர்கள் உதவிக்கு வருவார்கள் என்றுதான் கண்ட்ரோல் அறையுடனான தொடர்பை நான் உயிர்ப்பிக்கச் சொன்னேன்..."

அவன் சொல்லச் சொல்லவே - கண்ட்ரோல் அறையிலிருந்து மேஜர் ஜெனரலும், ஏர் மார்ஷலும் பேசினார்கள்.

"ஜோஷி அண்ட் சுனில்... ஏர்க்ராஃப்ட்டுக்குள் இருக்கும் அந்த நபரை விட்டு விடுங்கள்... உங்களை கடைசி கட்ட சோதனைக்கு உட்படுத்த நாங்கள்தான் அனுப்பி வைத்தோம்... சோதனையில் தேறி விட்டீர்கள்... நிச்சயமாய் வெற்றியுடன் திரும்பி வருவீர்கள் என்று நம்புகிறோம்..."

தொடர்பை அறுத்துக் கொண்ட பின் அவன் புன்னகைத்தான்.

"இப்போது நான் பாராசூட்டுடன் கீழே குதிக்கலாமா...?"

தலையசைத்தார்கள்.

அந்தச் சதுரத் திறப்பு வழியே - கனத்த இருட்டுக்குள் குதித்தான் அவன்.

இருபதாவது நிமிஷம் கண்ட்ரோல் அறையின் எல்லையைக் கடந்து சென்றார்கள்.

சொற்ப நேரத்தில் இந்திய - பாகிஸ்தான் எல்லையோரக் காடுகளின் மேல் பறக்க



ஆரம்பித்தது. அந்த மைக்ரோலைட் ஏர்கிராஃப்ட.

# 24

ஏர்கிராஃப்ட் சீரான வேகத்தில் காற்றை அறுத்துக் கொண்டிருந்தது.

ஜோஷி பேனல் போர்டைக் கவனித்துக் கொள்ள - சுனில் 'நைட் ஃபைண்டர்' இன்ஃப்ரா ரெட் பைனாகுலர் மூலமாக - கீழே பரவியிருந்த காட்டுப் பிரதேசத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சற்றே பெரிய விமானமான ஏ.என். 52 விமானத்தின் தடயங்கள் எங்காவது தட்டுப்படுகிறதா என்று பார் சுனில்..."

"எஸ் ஸார்..."

ஒரு பத்து நிமிஷ நேரம் காட்டுப் பிரதேசத்தை உன்னிப்பாய் கவனித்து வந்த சுனில் சட்டென்று கத்தினான்.

"ஸார்..."

"என்ன சுனில்..?"

"விமானத்தை இங்கேயே ப்ளோட்டிங்கில் நிறுத்துங்கள்... இந்தப் பகுதியில் அநேகமாய் அந்த தீவிரவாதிகள் பதுங்கி இருக்கலாம்..."

"எப்படிச் சொல்கிறாய்...?"

"இங்கே குறிப்பிட்ட ஏரியாவுக்குள் காட்டுப் பகுதியின் தோற்றம் வித்தியாசமாய் காட்சியளிக்கிறது..."

"வித்தியாசமாய் என்றால்...?"

"மரங்களின் இலைப் பச்சையின் நிறம்... காற்றில் அந்த இலைகள் அசையும் விதம்... ஆகியவை சற்றே செயற்கைத்தனமாகத் தோன்றுகிறது... அதை வைத்துத்தான் இந்தப்

பகுதியில் அவர்கள் பதுங்கி இருக்கலாம் என்று சொல்கிறேன்..."

"அப்படியானால் ஏர்கிராஃப்டைக் கீழே இறக்கி விடலாமா...?"

"இறக்கி விடலாம்..."

ஏர்கிராஃப்ட் சப்தமில்லாமல் மெல்ல தன் உயரத்தை இழக்க ஆரம்பித்தது.

அடர்த்தியான அந்தக் காட்டின் மையத்தில் தரையில் குத்திட்டு நின்றது.

ஒருவர் பின் ஒருவராக ஏர்கிராஃப்டை விட்டு ஜாக்கிரதை உணர்வோடு கீழே இறங்க ஆரம்பித்தார்கள்.

இருட்டில் ஊறிக் கிடந்த காட்டுக்குள் சருகுகள் மிதிபட - மெதுவே நடையை எட்டி வைத்தார்கள்.

"சர்ரக்க..."

"சர்ரக்க"

நூறு மீட்டர் தூரம் நகர்ந்திருப்பார்கள். திடும்மென்று அந்தக் குரல் கேட்டது.

"கோன்...?"

அதைத் தொடர்ந்து 'ப்ளீர் ப்ளீர்' என்று டார்ச்லைட்டுகள் மஞ்சள் வெளிச்சத்தை இருவர் மேலும் கொட்டியது.

"சுனில்... நீ சந்தேகப்பட்டது சரிதான்... இந்தப் பகுதியில்தான் இவர்கள் முகாம் இட்டு இருக்கிறார்கள்... முதலில் இவர்களிடமிருந்து தப்பித்து விட வேண்டும்... ஓடு..."

இருவரும் இரண்டு திசைகளில் பாய்ந்தார்கள்.

அதற்குள் மெஷின் கன்கள் மழை பொழிவதைப் போல் தடதடவென சீற ஆரம்பித்தன.

இருட்டான மரப் பகுதிக்குள் சுனில் பாய்ந்தபோது-



"ஆ... ஆ... ஆ..."

ஜோஷியின் அலறல் சத்தம் அந்தப் பிராந்தியத்தையே உலுக்கி எடுத்தது. ஒரு பாறை மறைவில் பதுங்கிக் கொண்டு மெதுவாய் எட்டிப் பார்த்தான் சுனில்.

கண்களில் பனிக்கட்டியின் ஜில்லிப்போடு அதிர்ச்சி ஒட்டிக் கொண்டது. தொடையிலும், காலிலும் தோட்டாக்கள் பாய்ந்து ரத்தம் கருஞ்சிவப்பாய் உடைகளை நனைத்துக் கொண்டிருக்க - ஜோஷி எழ முடியாமல் தரையில் விழுந்து தத்தளித்தார்.

தூரத்தியவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அவர்களில் ஒருவன் உத்தேசமாய் சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டபடி சுனிலும் கேட்கும்படி சத்தமாய்ச் சொன்னான்.

"இங்கே அடிபட்டு விழுந்திருக்கிற உன் கூட்டாளி உயிருடன் இருக்க வேண்டும் என்றால் மறைவிடத்திலிருந்து நீயாக வெளியே வந்து விடு..."

அவன் சொல்லி முடிக்கும் முன் ஜோஷி உச்சபட்ச குரலில் கத்தினார்.

"நோ... சுனில்... நீ வெளியே வரவேண்டாம்... என்னைப் பற்றிக் கவலைப்படாதே... நீ தப்பிச் செல்வது முக்கியம்..."

அவர் சொல்லச் சொல்ல ஒருவன் கோபத்தோடு ஸ்டென் கன்னைத் திருப்பிப் பிடித்து - ஜோஷியின் நெஞ்சில் வேகமாய் இடித்தான்.

"ஷட் அப் மேன்..."

அவரைப் பார்த்து கர்ஜித்து விட்டு மீண்டும் அவன் குரலை உயர்த்திக் கத்தினான்.

"இன்னும் ஐந்து நிமிஷம் அவகாசம் தருகிறேன்... அதற்குள் வெளியே வந்து விடு... இல்லையென்றால் உன் கூட்டாளி தவணை முறையில் உயிரை இழப்பான்... முதல் நிமிஷம் முடியும்போது கை ஒன்று துண்டிக்கப்படும்... இரண்டாவது நிமிஷம் கால்... மூன்றாவது நிமிஷம்..."

அவன் சொல்லிக் கொண்டிருக்க-

ஜோஷி மீண்டும் குரலெழுப்பிக் கத்தினார்.

"இந்த மிரட்டலுக்கெல்லாம் நீ பயப்பட வேண்டாம் சுனில்...! வெளியே வராதே... இவர்களால் என் உயிரைத்தான் எடுக்க முடியும்... உயிரை விட தேசம் பெரிது... நீ தப்பித்தால்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும்..."

சுனில் துடிக்கும் இதயத்தோடு பாறை மறைவில் பதுங்கிக் கிடக்க - ஒரு நிமிஷம் கரைந்திருந்தது. ஜோஷியைச் சூழ்ந்து நின்றவர்களில் ஒருவன் தன்னிடமிருந்த துப்பாக்கியின் பொத்தானை அழுத்த - ஒரு அடி நீளக் கத்தி ஒன்று பளபளப்பாய் துப்பாக்கி முனையில் உதித்தது.

கத்தியுடன் கூடிய அந்தத் துப்பாக்கியை அவன் ஜோஷியை நோக்கி உயர்த்தி திர்தாட்சண்யமாய்க் காற்றில் இறக்கினான். தோள்பட்டையில் கத்தி பாய்ந்து மீண்டது.

"சத்..."

ஜோஷியின் வலது கை துண்டாகித் தெறித்து விழுந்தது.

"ஆ... ஆ... ஆ... ஆ..."

காடு அதிர்ந்தது ஜோஷியின் கத்தலில்.

சுனில் அப்படியே மூச்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஜோஷி அந்த நிலைமையிலும் சக்தியைத்



திரட்டிக் கொண்டு குரல் கொடுத்தார்.

"சுனில்... நீ உன் இரக்க உணர்வுக்கெல்லாம் துளியும் இடம் கொடுத்துவிடாதே... தப்பிச் சென்றுவிடு..."

ஜோஷியின் வாய் மேல் ஒருவன் பூட்ஸை வைத்து அழுத்தினான்.

திமிறினார் ஜோஷி.

வாட்சைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் துப்பாக்கியைப் பிடித்திருந்தவனிடம் சொன்னான்.

"இரண்டாவது நிமிஷம் ஆகி விட்டது..."

"காலை வெட்டி விடலாமா...?"

"ம்... வெட்டு... யோசனை பண்ணாதே..."

துப்பாக்கியோடு இருந்த கத்தி இருட்டில் பளபளப்பாய் உயர்ந்து வேகமாய்க் கீழே இறங்க - ஜோஷியின் இடதுகாலில் வெட்டு விழுந்தது.

"ஹா...!"

ஜோஷியின் மிகப்பெரிய அலறலில் சுனிலின் ரத்த ஓட்டம் ஸ்தம்பித்தது.

ஜோஷியின் உடம்பிலிருந்து ரத்தம் பீறிட்டு அடிக்க - அவர் கண்கள் சொருகி கொஞ்சம் கொஞ்சமாய் உயிரை விட ஆரம்பித்தார்.

ஒருவன் கத்தினான்.

"இனி இவன் உபயோகப்படமாட்டான். ஒளிந்துள்ள இன்னொருவனைத் தேடுவோம்..."

சுனில் சத்தம் காட்டாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

'நீயாவது தப்பித்தால்தான் நாட்டைக் காப்பாற்ற முடியும்...'

ஜோஷியின் வார்த்தைகள் அவனுக்குள் எதிரொலிக்க - அந்த இடத்தை விட்டு மெல்ல நகர முற்பட்டான்.

அவர்கள் கையில் இருந்த டார்ச் லைட்கள் வெளிச்சத்தை வீசின.

"அவனையும் பிடித்து விடலாம். இந்தப் பகுதியைச் சுற்றி வளையுங்கள்..."

பூட்ஸ் கால்கள் அதிர - அந்தப் பேர்வழிகள் காட்டின் நாலா திசைகளிலும் பரவினார்கள்.

சுனில் பாறை இடுக்குகளுக்கிடையிலும், செடிப் புதர்களுக்குக் கீழேயும் ஊர்ந்து நகர்ந்தான்.

பக்கத்தில் பூட்ஸ் சத்தம் கேட்ட போதெல்லாம் மூச்சை அடக்கிக் கொண்டு - ஒரு மில்லி மீட்டர் கூட நகராமல் அப்படியே பதுங்கிக் கொண்டான்.

திக் திக் என்று நெஞ்சுக்குழி பூராவும் ட்ரம்ஸ் அடிக்க - இருபத்தைந்து நிமிஷங்கள் இருட்டிலேயே கிடந்தான்.

தேடியவர்கள் களைத்துப் போய் -வேறுபக்கம் போய் விட்டு, பின் சுற்றுப்புற சப்தங்களெல்லாம் அடங்கிப் போயிருக்கவே - மெதுவாய் எழ முற்பட்டான்.

உடம்பெல்லாம் ரணமாய் வலித்தது.

எழுந்து இரண்டு அடிகள் வைத்திருப்பான்.

சரசரவென இலைகள் அசையும் ஓசை. சுனில் சுதாரிப்பதற்குள்-

சீஸா பச்சை யூனிஃபார்மில் ஒருவன் சட்டென்று பக்கவாட்டில் தோன்றி - சுனிலின் நெற்றிப் பொட்டில் பிஸ்டலைப் பதித்தான். கோரக்குரலில் சொன்னான்.

"தப்பிக்க முயற்சி செய்யாதே...!"

# 25

தீவிரவாதிகள் இரண்டு பேர் - அந்த ராணுவ டெண்ட்டுக்கு அருகே தயக்கத்தோடு வந்தார்கள். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

டெண்ட்டுக்குள் மெல்லிசாய் மெழுகு வர்த்தி வெளிச்சம் படுதாவை மீறிக் கசிந்து கொண்டிருந்தது.

"எக்ஸ்க்யூஸ் மீ ஸார்..."

"கமின்..."

அவர்கள் உள்ளே செல்ல -கேட்டிங் உட்பட சில வெளிநாட்டு முகங்கள் அங்கே தெரிந்தன.

ஃபோல்டிங் டேபிளின் மேலே ஷாம்பெயின் கோப்பைகளும், பொன்னிற விஸ்கியோடு நீளமான பாட்டில்களும் இருந்தன.

கேட்டிங் கோப்பை விளிம்பை உதட்டில் பதித்து - லேசாய் உறிஞ்சிவிட்டு கேட்டான்.

"நமது ராடாரில் சிக்கிய அந்த லைட்வெயிட் ஏர்கிராஃப்ட்டை ஃபாலோ - அப் செய்து மடக்கினீர்களா...?"

"மடக்கினோம்..."

"எத்தனை பேர் பிடிபட்டார்கள்...?"

"இரண்டு பேர்..."

"யார் அவர்கள்...?"

"இந்திய ராணுவப் படையைச் சேர்ந்தவர்கள் ஸார்..."

"இப்போது எங்கே அவர்கள்...?"

"வந்து... வந்து..."

"என்ன...?"

"ஒருவன் அகப்பட்டான்... இன்னொருவன் தப்பி விட்டான்..."

"யூ ஷிட்...! தப்பித்தவனைப் பிடிக்க முயற்சி செய்யவில்லையா...!"

"நம் ஆட்கள் காடு பூராவும் தேடுதல் வேட்டை நடத்தி வருகிறார்கள் ஸார்..."

"அகப்பட்டவனை விசாரித்தீர்களா...?"

"அவன்.. அவன்..."

"மறுபடியும் என்ன தயக்கம்...?"

"அகப்பட்டவன் இறந்துவிட்டான்... அவனைத் துன்புறுத்தி - தப்பித்தவனைப் பிடிக்க முயற்சி செய்தோம்..."

"முட்டாள்களே...! கமேண்டோக்களிடம் இந்த செண்டிமெண்ட்டுகளெல்லாம் எடுபடாது..."

அவர்கள் மவுனம் சாதித்து - இறுகிய முகங்களோடு நிற்க - கேட்டிங் தொடர்ந்தான்.

"ஆக... வந்தவர்களைப் பற்றிய முழு விவரங்களையும் விசாரித்துத் தெரிந்து கொள்ளத் தவறிவிட்டீர்கள்...!"

"அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொண்டதிலிருந்து அவர்களில் ஒருவனின் பெயரையும், இறந்து போனவனின் பாக் கெட்டிலிருந்த ஐ.டி.கார்டிலிருந்து அவனது பெயரையும் தெரிந்து கொள்ள முடிந்தது..."

"பெயர்களைச் சொல்லுங்கள்..."

"இறந்து போன நபரின் பெயர் ஜோஷி... தப்பித்தவன் பெயர் சுனில்..."

கேட்டிங் தட்டென்று கலவர முகமாய் நிமிர்ந்தான்.

"செக்யூரிட்டி ஆபீஸர் ஜோஷியும்... சுனிலுமா இங்கே வந்தார்கள்...? இருவருமே ஆபத்தானவர்கள்... அந்த சுனிலை நாம் உடனே பிடித்தாக வேண்டும்...! ஜோஷியின் உடல் எங்கே...?"

"இறந்து போன ஜோஷியின் உடலை இங்கே கொண்டு வந்து பயனில்லையென்று



நினைத்து - அதே இடத்திலேயே உடலைப் போட்டு விட்டு வந்து விட்டோம்..."

"மை குட்னஸ்..."

கேட்டிங் படபடப்போடு எழுந்தான்.

கூட இருந்தவர்கள் அவனைப் பார்த்து வியப்பாய் கேட்டார்கள்.

"அந்த ஜோஷிதான் இறந்து போய் விட்டானே... ஏன் பதைபதைக்கிறாய் கேட்டிங்...?"

"நான் ஆறு மாதத்திற்கு மேலாக அந்த ரெஜிமெண்ட்டில் இருந்திருக்கிறேன்... செக்யூரிட்டி ஆபீஸர் ஜோஷியைப் பற்றி எனக்கு மிகவும் நன்றாகவே தெரியும்... யோகாவில் கை தேர்ந்தவர் அவர்... மூச்சை அடக்கிக் கொண்டு இறந்தவர் போல நடித்திருக்கவும் வாய்ப்புண்டு..."

கேட்டிங் சொன்னதும் - எல்லோருமே திடுக்கிட்டுப் போனார்கள்.

"ஜீப்பை எடுங்கள்... ஜோஷியின் உடலை உடனே நான் பார்க்க வேண்டும்..."

கேட்டிங் பரபரப்போடு டெண்ட்டை விட்டு வெளியே வந்தான்.

ஆங்காங்கே தீவிரவாத படையைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்தபடி எல்லா திசைகளையும் கண்காணித்தபடி நின்றிருந்தார்கள்.

ஜீப் ஒன்று டெண்ட்டை உரசிக் கொண்டு வந்து நிற்க - அதனுள் ஏறிக் கொண்டான் கேட்டிங்.

நீட்டிக் கொண்டிருந்த செடி, கொடி களையும், மரக்கிளைகளையும் உரசிக் கொண்டு குறுகலான பாதையில் வேகமாய் சென்றது ஜீப்.

புழுதி கிளம்பியது.

வளைந்து வளைந்து பத்து நிமிஷங்கள்

ஜீப் பயணித்து முடிக்க - லைட்வெயிட் ஏர்கிராஃப்ட் லேண்ட் ஆகியிருந்த அந்தப் பகுதியைத் தொட்டார்கள்.

ஜீப்பை விட்டு இறங்கியவர்கள் - அதிர்ச்சியைத் தொட - கேட்டிங் கத்தினான்.

"எங்கே ஜோஷியின் உடல்...?"

"ஸ...ஸார்...இங்கேதான் அந்த ஜோஷி இறந்து போனான்... ஒரு கையையே வெட்டிச் சாய்த்து விட்டோம். காலில் ஒரு வெட்டு விழுந்து, நிறைய ரத்தம் வெளியேறியதில்தான் இறந்து போனான்..."

எல்லோரும் சுற்றிலும் பார்வையைப் போட்டார்கள்.

அந்த இடத்தில ஜோஷியின் உடல் கிடந்ததற்கான அறிகுறியே இல்லை...

## 26

"ம்... திரும்பு..."

பிஸ்டலை நெற்றிப் பொட்டில் அழுத்தியவன் கட்டளையிட - சுனில் யோசனையாய் திரும்பினான்.

சற்றே யோசித்தான்.

'யார் இவன்?'

'வந்தவர்களில் ஒருவனா...?'

'அல்லது இவன் வேறு யாராவதா...?'

சுனில் யோசித்துக் கொண்டே துப்பாக்கி பேர்வழியை திரும்பிப் பார்க்க முயன்றான்.

"அப்படியே இரு.. அசையாதே..."

சுனில் அசையாமல் நின்றான்.

"என்னைத் தாக்க முயற்சி செய்தால் அந்த நிமிஷமே உன் உடம்பில் தோட்டாக்கள் பாயும். எனக்குக் கீழ்படிய வேண்டியது



உன்னுடைய வேலை. நேராய் நட..."

நெட்டித் தள்ளினான்.

சுனில் அவன் சொன்ன பக்கமெல்லாம் நடந்து செல்ல - சொற்ப தூர நடைக்குப் பிறகு அடர்த்தியான மரங்களுக்கு மத்தியில் புதைந்திருந்த அந்தச் சிறிய வீட்டைத் தொட்டார்கள்.

வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு ஜீப் நின்றிருந்தது. சிவப்புப் பெயிண்டில் குளித்திருந்தது அந்த ஜீப்.

ஜீப்பின் நெற்றியில் எழுதியிருந்த ஆங்கில எழுத்துக்களைப் பார்த்ததும் - ஒரு விநாடி திகைத்துப் போனான் சுனில்.

அவன் நெட்டித் தள்ளினான்.

"ம்... படிகளில் ஏறு..."

மரப்படிகளில் இருவரும் உயர - உலர்ந்த படிகள் தப் தப்பென்று சப்தம் எழுப்பின.

வீட்டுக்குள் பிரவேசித்தபோது - காக்கி யூனிஃபார்ம் அணிந்த நாற்பத்தைந்து வயதுக்காரர் ஒருவர் எதிர்ப்பட்டு பவ்யமாய்க் கும்பிட்டார்.

"வணக்கம்மா..."

சுனில் வியப்புக்கு போனான்.

'அம்மாவா...?'

இதயம் ஆச்சர்யத்தில் நீச்சலடிக்க - திரும்பிப் பார்த்தான் சுனில்.

'இத்தனை நேரமாய் என்னை பிஸ்டல் முனையில் நகர்த்திக் கொண்டு வந்தது ஒரு பெண்ணா...? அற்புதமாய் குரலை மாற்றி பேசியிருக்கிறாள்.'

சீஸா பச்சை யூனிஃபார்மில் இருந்த அந்தப் பெண் மெல்லிய பேட்டரி வெளிச்சத்தில் புலப்பட்டாள். தலைமுடி ஒட்ட வெட்டப்பட்டிருந்தது. அவள் அந்த ஆளிடம் திரும்பினாள்.

"பகதூர்..." இப்போது பெண்குரல்.

"அம்மா..."

"இவருடன் வந்தவரைக் கொண்டு வந்து விட்டாயா...?"

"கொண்டு வந்து விட்டேன்..."

"எப்படி இருக்கிறார் அவர்...?"

"கொஞ்சம் ஆபத்துதான்..."

"முதலுதவி அளித்தாயா...?"

"அளித்திருக்கிறேன்... ஆனால்... அவர் பிழைப்பாரா என்பது சந்தேகம்தான்... நிறைய ரத்த சேதம் ஏற்பட்டு இருக்கிறது..."

சொல்லிக் கொண்டே அந்த பகதூர் அருகிலிருந்த திரையை விலக்கிக் காண்பிக்க - கனில் வியப்பின் விளிம்புக்குப் போனான்.

"ஜோ..ஷி... இங்கே எப்படி...?"

அவள் கேட்டாள்.

"இவர் ஜோஷியா...?"

"ஆமாம்... நீங்கள் பாகிஸ்தான் வனப்பிரிவைச் சேர்ந்த அலுவலரா...?"

"எப்படி உங்களுக்குத் தெரியும்...?"

"ஜீப்பில் டிபார்ட்மெண்ட் பெயரைப் பார்த்தேன்..."

அவள் தலையசைத்தாள்.

"நான் இந்தப் பகுதியின் ஃபாரஸ்ட் ரேஞ்சர்... என் பெயர் நூருன்னிஸா... உங்களைத் தேடிக் கொண்டு தீவிரவாதிகள் எல்லா திசைகளிலும் அலைந்து கொண்டிருந்தார்கள். நீங்கள் என்னை நம்பாமல் என்னோடு வாக்குவாதம் செய்து கொண்டு இருந்தால் அவர்களிடம் பிடிபட நேரும்... அதனால்தான் உங்களை துப்பாக்கி முனையில் அதட்டி இங்கே கூட்டி வர வேண்டியதாகப் போய்விட்டது..."

"ஜோஷிக்கு... இன்னும் உயிர்



இருக்கிறதா..."

"ஆமாம்... அங்கே நடந்த போராட்டத்தை நானும் பார்த்தேன்... இவர் இறந்து விட்டதாக நினைத்து அவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்று சென்று விட்டார்கள்... இவர் மூச்சுப் பயிற்சியின் மூலமாக சுவாசத்தை அடக்கியிருக்கிறார் என்று நான் அவரின் கண்மணியின் மெல்லிய அசைவுகளை வைத்துக் கண்டுபிடித்து விட்டேன்... அதன் பிறகு பகதூரை அனுப்பி ஜீப்பில் இங்கே கொண்டு வந்து சேர்க்கச் சொல்லிவிட்டு உங்களை நான் கூட்டி வந்தேன்..."

"பாகிஸ்தானியரான நீங்கள் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த எங்கள் மேல் பரிவு காட்டுவது ஆச்சரியம் அளிக்கிறது..."

"இந்த நிமிஷம் எனக்கும், உங்களுக்கும் பொதுவான எதிரிகள் இருப்பதால் நானும், நீங்களும் ஒன்று சேரத்தானே வேண்டும்...?"

"என்ன சொல்கிறீர்கள்...?"

"இங்கேதான் என்னுடைய அப்பா ஃபாரஸ்ட் ரேஞ்சராக இருந்தார்... வெளிநாட்டு தீவிரவாதிகளின் நடமாட்டம் பல வருடங்களாகவே இந்தக் காட்டுப் பகுதியில் உள்ளது. அந்தத் தீவிரவாதிகளால் என் அப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்... மனதில் வெறி வைத்து நான் அதே படிப்பைப் படித்து இதே காட்டுப்பகுதிக்கு ஃபாரஸ்ட் ரேஞ்சராக வந்தேன்... என் பணிக்காலத்தில் எல்லா தீவிரவாதிகளையும் சுட்டுக் கொல்ல வேண்டும் என்பதுதான் என் லட்சியம்... ஏற்கெனவே இருபத்திரண்டு பேரை சுட்டு வீழ்த்தியுள்ளேன்... இன்றைக்கு அவர்கள் அதிக எண்ணிக்கையில் கும்பலாய் இருந்ததால் உங்கள் ஆபீஸர் ஜோஷியை என்னால் காப்பாற்ற இயலாமல் போய்

விட்டது..."

"நான் எதிர்த்தாக்குதல் நடத்தாமல் பாறை மறைவில் பதுங்கி இருந்ததே - அதிக எண்ணிக்கையில் இருந்த அவர்களோடு அந்தச் சமயத்தில் போரிடுவது சமயோசிதமில்லை என்பதை உணர்ந்ததால்தான்..."

சொன்னவன், மயங்கிக் கிடந்த ஜோஷியைப் பார்த்து விட்டுக் கேட்டான்.

"இவருடைய நிலைமை இப்போது எப்படி உள்ளது...?"

"கவலைக்கிடம்தான்..."

"என்ன செய்யப் போகிறீர்கள்...?"

"இந்தக் காட்டுக்குள் பச்சிலை வைத்தியம் செய்யும் பழங்குடி வைத்தியர்கள் கிடைப்பார்கள். மிகுந்த திறமைசாலிகள். அவர்களில் யாரையாவது வரவழைத்துப் பார்க்கலாம்..."

"உடனே அதைச் செய்யுங்கள்... ஆபீஸர் ஜோஷி உயிருடன் இருக்கிறார் என்பதே எனக்கு மிகவும் சந்தோஷமாகவும், தைரியமாகவும் இருக்கிறது..."

"பகதூர்..." என்றாள் நூருன்னிசா.

அவர் புரிந்து கொண்டு, "வைத்தியரைக் கூட்டிக் கொண்டு வருகிறேன் அம்மா..." என்று சொல்லியபடி அங்கிருந்து நகர்ந்தார்.

அரைமணி நேரம் கழித்து கரி நிறத்திலிருந்த அந்தக் காட்டுவாசி பகதூரோடு வந்தான்.

ஜோஷியைப் படுக்க வைத்திருந்த அறைக்குள் அவனைக் கூட்டிக் கொண்டு செல்ல - அந்தக் காட்டுவாசி ஜோஷியின் நெற்றியைத் தொட்டு, கன்னங்களைத் தட்டி, வயிற்றை அழுத்திப் பார்த்து சோதனை செய்தான்.



நூருன்னிசா அந்த ஆளைப் பார்த்துக் கேட்டாள்.

"இவர் பிழைத்துக் கொள்வாரா...?"

பாதி சொருகியிருந்த ஜோஷியின் கண்ணை முழுவதுமாய் மூடிவிட்டு அந்தக் காட்டுவாசி தலையசைத்தபடி சொன்னான்.

"இவர் உயிரோடு இருந்தால்தானே பிழைப்பதற்கு...! சில நிமிஷங்களுக்கு முன்பே இருதயத்துடிப்பு முழுவதுமாய் நின்று விட்டது... இனிமேல் என்னால் செய்வதற்கு ஒன்றுமில்லை..."

சொல்லிவிட்டு மவுனமாய் அந்தப் பழங்குடிவாசி வெளியே வர... அவனை வழியனுப்புவதற்காகப் பின் தொடர்ந்த நூருன்னிசா அதிர்ந்தாள்.

அவள் வீட்டைச் சுற்றிலும் கேட்டிங்கின் ஆட்கள் கையில் ஏகே 47 துப்பாக்கியோடு சூழ்ந்து நின்றிருந்தார்கள்.

## 27

**வீ**ட்டைச் சூழ்ந்திருந்த ஆட்களைப் பார்த்ததுமே நூருன்னிசா சட்டென்று முன்புறக் கதவை அறைந்து சாத்திக் கொண்டு உள்ளே ஓடி வந்தாள்.

வெளியே - கேட்டிங்கின் பேச்சுக்குரல் தெளிவாய்க் கேட்டது.

"ஜோஷியைத் தூக்கிப் போனவர்கள் எப்படியும் பழங்குடி வைத்தியரை அணுகித்தான் ஆக வேண்டும். குற்றுயிரும், குலையுயிருமாய் இருந்த ஜோஷியைக் காப்பாற்ற காட்டுவாசி வைத்தியரின் உதவி நிச்சயம் தேவை... அதனால் பழங்குடி வைத்தியரைப் பின்தொடர்ந்தால்

ஜோஷியைக் கொண்டு சென்றது யார் என்பது தெரிந்து விடும் என்று நான் சொன்னது சரியாய் போய்விட்டது பாருங்கள்..."

கேட்டிங் சொல்லிக் கொண்டிருக்க - நூருன்னிசா சுனிலிடம் மூச்சு வாங்கச் சொன்னாள்.

"அவர்கள் சுமார் இருபது பேர் துப்பாக்கிகளோடு இந்த வீட்டைச் சூழ்ந்து விட்டார்கள்..."

கேட்டிங் குரல் வெளியே கேட்டது.

"கதவைத் தட்டுங்கள்... திறக்காவிட்டால் உடையுங்கள்..."

"தட்... தட்..."

அளவான சப்தத்துடன் ஆரம்பித்த கதவுத் தட்டல் - சில நிமிஷங்களிலேயே தடதடவென இடி மாதிரி மாறியது.

தாழ்ப்பாள் 'எந்த நிமிஷமும் பெயர்ந்து விடுவேன்' என்கிற மாதிரி ஆடியது.

"சுனில்...! அவர்கள் இந்த மரவீட்டை சுலபமாய்ப் பெயர்த்துக் கொண்டு உள்ளே வந்து விடுவார்கள்..."

"உள்ளே இருந்தபடி அவர்களை சுட்டுப் பார்க்கலாமா...?"

"ஆட்கள் நிறைய உள்ளார்கள்... இரண்டு பேரை சுட்டுக் கொல்வதற்கு முன் பத்துப் பேர் வீட்டுக்குள் புகுந்து நம்மை மடக்கி விடுவார்கள்..."

"என்னதான் செய்வது...?"

"ஜோஷியை நான் இங்கே கூட்டி வந்ததுதான் அவர்களுக்குத் தெரியும்... அநேகமாய் நான் உங்களையும் பாதுகாப்பாய் இங்கே அழைத்து வந்திருக்கிறேன் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள் என்றே நம்புகிறேன்..."



"என்னை வீட்டுக்குள் எங்கேயாவது பதுங்கிக் கொள்ளச் சொல்கிறீர்களா...? அது முடியாத காரியம்! அவர்கள் முரட்டுத்தனமான ஆட்கள்... இந்த வீட்டைத் தலைகீழாகப் புரட்டிப் போடாமல் இங்கிருந்து திரும்பிப் போகமாட்டார்கள்... இந்தச் சின்ன வீட்டுக்குள் நான் எங்கே பதுங்கி இருந்தாலும் என்னைச் சுலபமாய்க் கண்டுபிடித்து விடுவார்கள்..."

"அது எனக்குத் தெரியும்... உங்களை வீட்டுக்குள் பதுங்கி மறையச் சொல்லவில்லை... வெளியே தப்பி ஓடி விடச் சொல்லுகிறேன்..."

"தட்... தட்..."

பெரிய சத்தத்தோடு கதவு ஆடியது.

சுனில் குழப்பமாய் நூருன்னிசாவைப் பார்த்தான்.

"என்ன சொல்கிறீர்கள்...? வீடு பூராவும் அவர்கள் சூழ்ந்து நின்றிருக்கிறபோது எப்படி வெளியே தப்பிச் செல்ல முடியும்...?"

நூருன்னிசா சுனிலின் கையைப் பிடித்து வேகமாய் உள்ளறைக்குக் கூட்டிப் போனாள்.

அங்கே தரையோடு தரையாகப் பதித்திருந்த பலகை ஒன்றை நீக்கினாள்.

செவ்வகமாய்த் திறப்பு உற்பத்தியானது. அந்தத் திறப்பினுள் சுனில் பார்வையைச் செலுத்தினான்.

வெளியே இருந்து கசியும் மங்கலான வெளிச்சத்தில் உள்ளே படிகள் இறங்கிச் செல்வது தெரிந்தது.

"ஆபத்துக் கால சுரங்க வழி இந்த வீட்டில் உள்ளது... இந்தச் சுரங்கப்பாதையின் வெளியேறும் வழி இங்கிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.... இந்தச் சுரங்க வழியின் மூலமாக நீங்கள் தப்பிச்

சென்று விடலாம்..."

"நீங்கள் என்று என்னை மட்டும் சொல்கிறீர்கள்...? நாம் இருவருமே இங்கிருந்து தப்பிச் சென்று விடலாமே...?"

"இல்லை... என்னை அவர்கள் பார்த்து விட்டார்கள்... நான் வீட்டுக்குள் இல்லையென்றால் சந்தேகம் வலுத்து இந்த சுரங்க வழியைக் கண்டுபிடித்து விடுவார்கள். நாம் இரண்டு பேருமே மாட்டிக் கொள்ள வாய்ப்புகள் அதிகம்... நீங்கள் இங்கே இருப்பது யாருக்கும் தெரியாது. ஆகவே இந்த சுரங்க வழியின் மூலமாக நீங்கள் மட்டும் தப்பிச் செல்வதுதான் சரி..."

"நூருன்னிசா...! உங்களின் நிலைமை...?"

"அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்... எந்த நிலைமையையும் சமாளித்துக் கொள்ளும் ஆற்றல் எனக்கு உண்டு..."

"அவர்கள் சாமான்யப்பட்டவர்கள் அல்ல... கண் எதிரே அவர்களிடம் ஜோஷியைப் பலி கொடுத்தேன்... இப்போது... உங்களையும் பலிகொடுப்பதா...?"

"ஜோஷி அவர்களிடம் மாட்டிக் கொண்டதற்கும்... என்னை அவர்கள் அணுகுவதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. கதவு உடைபடும் சப்தம் கேட்கிறது... வாக்குவாதத்தை வளர்த்தாமல் தயவு செய்து நீங்கள் ரகசிய பாதைக்குள் இறங்கிச் செல்லுங்கள்..."

அவள் சற்றே ஆணையிடும் குரலில் சொல்ல,

வேறு வழியில்லாமல் சுனில் அந்தப் பாதைக்குள் இறங்கினான். மறைந்தான். நூருன்னிசா தரைப் பலகையை மூடினாள். அது கச்சிதமாய் தரையோடு பொருந்தி



தரைப்பகுதியை வித்தியாசமில்லாமல் காட்டியது.

அவள் பரபரவென்று உள் அறையை விட்டு வெளியே வர - உடைப்பெடுத்த கதவின் வழியே கேட்டிங்கின் ஆட்கள் திபுதிபுவென்று நுழைந்தனர்.

இரண்டு மூன்று பேர் நூருன்னிசாவை மடக்கிப் பிடித்தார்கள்.

நூருன்னிசா கத்தினாள்.

"இந்தக் காட்டுப் பகுதியின் ரேஞ்சர் நான்... என்னிடம் முறை தவறி நடந்தால் கடுமையான பின்விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி வரும்..."

கேட்டிங் அலட்சியமாய் அவளைப் பார்த்தான்.

"சும்மா மிரட்டிப் பார்க்காதே..."

"உங்களுக்கு என்ன வேண்டும்...? எதற்காக இத்தனை பேர் என் வீட்டுக்குள் நுழைந்திருக்கிறீர்கள்...?"

"ஜோஷி எங்கே...?"

"எந்த ஜோஷி...?"

"எங்களால் கொல்லப்பட்ட ஜோஷி..."

"ஓ... அவர் பெயர் ஜோஷியா..."

"ஆமாம்... எங்கே அவர்...?"

"அதோ அந்த அறையில் இருக்கிறார்..."

நூருன்னிசா மவுனமாய் திரைச்சீலையை விலக்கிக் காண்பித்தாள்.

"உயிருக்குப் போராடிக் கொண்டு காட்டுக்குள் கிடந்தார். சிகிச்சை அளித்து பிழைக்க வைக்கலாம் என்றுதான் கூட்டி வந்தேன்... ஆனால் சிகிச்சை தரும் முன்பே அவரது உயிர் பிரிந்து விட்டது..."

கேட்டிங் கண்ணசைக்க - இரண்டு ஆசாமிகள் ஜோஷியின் உடம்பை நெருங்கி சந்தேகக் கண்களோடு அவர் உடலைத்

தீவிரமாய்ப் பரிசோதித்தார்கள்.

சில நிமிஷ சோதனைக்குப் பின் கேட்டிங்கிடம் திரும்பி மெல்லிய குரலில் சொன்னார்கள்.

"நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆள் இறந்து விட்டார்..."

அதோடு அவர்கள் திரும்பிப் போய்விடுவார்கள் என்றுதான் நூருன்னிசா நினைத்தாள்.

ஆனால் கேட்டிங் நகரவில்லை.

அவளை ஊடுருவலாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"சுனில் எங்கே...?"

"சுனிலா...?"

"இந்த ஜோஷியுடன் வந்தவன்..."

"எனக்குத் தெரியாது... அந்த இடத்தில் இவர் மட்டும்தான் விழுந்து கிடந்தார்... ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்கிற மனிதாபிமான எண்ணத்தோடு நான் இவரை மட்டும்தான் ஜீப்பில் எடுத்து வந்தேன்..."

"இவரைப் பார்க்க நிச்சயமாய் சுனில் வந்திருப்பான்..."

"தயவு செய்து என்னை நம்புங்கள்... எனக்கு சுனிலையும் தெரியாது... அனிலையும் தெரியாது..."

"பொய் சொல்கிறாய்... ஜோஷிக்கு உதவி செய்த நீ நிச்சயமாய் சுனிலுக்கும் உதவியிருப்பாய்... அவனை நீ எங்கோ மறைத்து வைத்திருக்கிறாய்... அல்லது அவனுடைய மறைவிடம் உனக்குக் கண்டிப்பாக தெரிந்திருக்கும்... அதைச் சொல்லிவிட்டால் நீ உயிரோடு இருப்பாய். இல்லையென்றால்..."

"நான்தான் தெரியவில்லை என்கிறேனே..."



கேட்டிங் அவளைக் கோபத்தோடு முறைத்து விட்டு தன் ஆட்களுக்கு உத்தரவிட்டான்.

"இந்த வீட்டைத் தலைகீழாகப் புரட்டி போட்டு சோதித்துப் பாருங்கள்..."

அந்த இருபது பேரும் உள்ளே நுழைந்து வீட்டின் சகல இடங்களையும் அலசிப் பார்த்து விட்டு பத்து நிமிஷங்களுக்குப் பின் உதட்டைப் பிதுக்கினார்கள். "சுனில் இங்கில்லை ஸார்..."

"அப்படியானால் இவளை நம்மோடு இழுத்துக் கொண்டு வாருங்கள்... சுனிலைப் பற்றிய விபரம் தெரியும்வரை இவளை வெளியே விட்டு வைக்கக்கூடாது..."

---

## 28

---

அந்த ரகசியப் பாதையின் வெளியேறும் வழி ஓர் அடர்த்தியான புதருக்கு அருகே இருந்தது.

மூச்சிரைத்துக் கொண்டு வெளிப்பட்டான் சுனில்.

அந்தப் புதர் மறைவிலிருந்து நகர்ந்து வர உத்தேசித்தபோது - சட்டென்று அவன் உடம்பு பூராவும் உஷார் ரத்தம் பாய்ந்தது.

சுற்றிலும் தொடர்ச்சியாய்க் காலடிச் சப்தங்கள்.

அங்கேயே பதுங்கிக் கொண்டு லேசாய் எட்டிப் பார்த்தான்.

கேட்டிங்கும் அவனுடைய ஆட்களும் தெரிந்தார்கள்.

நூருன்னிசாவின் கைகளைப் பின்புறமாகக் கட்டி அவளை இழுத்துக் கொண்டு போவது தெரிந்தது.

சனில் யோசித்து அந்த முடிவுக்கு வந்தான்.

'இவர்களைப் பின் தொடர்ந்து சென்றால் அவர்கள் முகாமிட்டிருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ளலாம்!'

'அஸ்திக் கலசங்களையும்... முடிந்தால் எ.என். 52 விமானத்தையும் மீட்பதோடு தன்னைக் காப்பாற்றிய நூருன்னிசாவையும் அவர்கள் பிடியிலிருந்து மீட்க முயலலாம்...!'

பதுங்கிப் பதுங்கி அவர்களைப் பின் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தான் சனில்.

வரிசையின் கடைசியில் நடந்து செல்லும் இரண்டு தீவிரவாதிகள் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தார்கள்.

அவர்கள் திரும்பும் போதெல்லாம் சனில் படபடப்போடு செடி மறைவிலும், மரத்தின் பின்னாலும் பதுங்க வேண்டியிருந்தது.

இருபத்தைந்து நிமிஷ நடையின் முடிவில் ஆங்காங்கே துணி டெண்ட்டுகளோடு அந்த முகாம் தெரிந்தது.

ஏ.கே. 47 துப்பாக்கிகளோடு அங்கே காவல் நிலவ - ஒரு பாறையருகே சற்று முன்பாகவே நின்று விட்டான் சனில்.

நூருன்னிசாவை ஒரு டெண்ட்டுக்குள் கூட்டிச் சென்றார்கள். எதேச்சையாய் வலது பக்கம் திரும்பிய சனில் திகைப்பைத் தழுவினான்.

அங்கே ஏ.என்.52 விமானம் செயற்கை செடி கொடிகள் பரப்பப்பட்டு அதற்குக் கீழே மறைக்கப்பட்டிருந்தது.

'ரசாயனப் பவுடர் நிரப்பப்பட்ட அஸ்திக் கலசங்கள் அந்த விமானத்திற்குள்தான் இருக்க வேண்டும்!'

'இருட்டினால்தான் இந்தத் தீவிரக் கண்காணிப்பை ஊடுருவிச் செல்ல முடியும்!'

மூச்சு விடும் சப்தம் கூட கேட்காமல் பகல் பூராவும் அந்தப் புதர் மறைவிலேயே



பதுங்கியிருந்தான்.

சுற்றுப்புறம் மெதுவாய் இருட்டைத் துணை சேர்க்க ஆரம்பித்த பிறகு மெல்ல நகர்ந்தான்.

நூருன்னிசா வைக்கப்பட்டிருந்த கூடாரத்தை நோக்கி - தரையோடு தரையாக ஒரு முதலையைப் போல ஊர்ந்தான் சனில்.

கூடாரத்தைப் பின்பக்கமாக அணுகி - தரை மண்ணை லேசாய் பறித்து -மெல்ல தலையை மட்டும் டெண்ட் படுதாவுக்குள் நீட்டிப் பார்த்தான்.

கைகள் கட்டப்பட்டிருந்த நூருன்னிசா திரும்பிப் பார்த்து மலர்ந்தாள்.

"சனில்...! நீங்களா...?"

"டெண்ட்டுக்குள் யாரும் இல்லையா...?"

"காவலுக்கு ஒருவன் இருக்கிறான்... சிகரெட் பிடிப்பதற்காக அவன் இப்போது வெளியே சென்று நின்றிருக்கிறான்..."

"இதுதான் சந்தர்ப்பம்... இந்த வழியாகவே நீங்கள் தப்பித்து வெளியே வந்து விடுங்கள்..."

நூருன்னிஸா மறுத்தலாய் தலையாட்டினாள்.

"என்னைக் காப்பாற்றுவதை விட முக்கியமான வேலை இப்போது உங்களுக்கு உள்ளது..."

"என்ன...?"

"இவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து இவர்களால் உங்கள் நாட்டிற்கு பெரும் ஆபத்து சூழ்ந்துள்ளது என்று தெரிந்து கொண்டேன்... CTBT ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாது என்பதை உறுதிபடக் கூறிவிட்டதால் இன்று அதிகாலை தீவிரவாதிகள் பஷீர், ரியாஸ் ஆகியோரிடம் விமானத்தை ஒப்படைக்கப் போகிறார்களாம்... இதனால் . பலியாவ தென்னவோ அப்பாவி இந்திய ஜனங்கள்

தான்..."

"இன்று அதிகாலையா...?"

"ஆமாம்... இன்னும் சில மணி நேரங்களில்...! ஆகவே பதுங்கிச் சென்று முதலில் விமானத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடுங்கள்..."

"நூருன்னிஸா... இப்போது நீங்கள் என்னோடு வாருங்கள்... நாம் இருவருமாகச் சேர்ந்தே விமானத்தை மீட்டு செல்வோம்... இவர்களிடமிருந்து நீங்கள் தப்பிக்க இதுதான் நல்ல சந்தர்ப்பம்..."

"தப்பிப்பதை நான் விரும்பவில்லை..."

"என்ன சொல்லுகிறீர்கள்...?"

"என் தந்தையைக் கொன்றவர்கள் ஒட்டு மொத்தமாய் இங்கே குழுமி உள்ளார்கள்... அவர்களைப் பழிவாங்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் இது..."

"நீங்கள் தன்னந்தனியாய் அவர்களை எப்படிப் பழி வாங்க முடியும்? எனக்கு ஒன்றும் புரியவில்லை..."

"என் கைகளைப் பிணைத்திருக்கும் கயிறை மட்டும் விடுவித்து விடுங்கள்... அந்த ஒரு உதவி எனக்குப் போதும்... மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்..."

"நூருன்னிசா... உங்கள் உயிர்..."

"என் உயிரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்... என்ன லட்சியத்தோடு நீங்கள் இந்தக் காட்டுப் பிரதேசத்துக்கு வந்தீர்களோ... என்ன லட்சியத்தோடு நான் இந்தக் காட்டுப் பகுதிக்கு வந்தேனோ... இருவர் லட்சியங்களும் ஒருசேர நிறைவேறும் வாய்ப்பு இப்போது கிடைத்து உள்ளது... சிகரெட் பிடிப்பதற்காக வெளியே சென்றவன் திரும்பி வருவதற்குள் நீங்கள் சென்று விடுங்கள்..."

அவள் பிடிவாதமாய்ச் சொல்ல - தன்னிடமிருந்த சிறிய கத்தியால் அவள்



கைகளைப் பிணைத்திருந்த கயிறை அறுத்தான்.

அதே விநாடி.

காவலுக்கு இருந்த தீவிரவாதி உள்ளே வரும் சத்தம் கேட்டது.

நூருன்னிசா பரபரத்தாள்.

"சுனில்... போய் விடுங்கள்..."

சுனில் சட்டென்று தலையை இழுத்துக் கொண்டு கூடாரத்திற்கு வெளியே மறைந்தான்.

உள்ளே வந்த அந்த மொட்டைத்தலை தீவிரவாதி கூடாரம் முழுவதையும் லேஸர் பார்வையால் அளந்தான். அவளை ஏறிட்டபடி கேட்டான்.

"யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்...?"

"என்னால் யாருடன் பேச முடியும். இங்கேதான் யாருமில்லையே...!"

"எனக்குப் பேச்சுக் குரல் கேட்டது... அதைக்கேட்டுத்தான் சிகரெட்டை நசுக்கி விட்டு அவசரமாய் உள்ளே வந்தேன்..."

"பேச்சுத் துணைக்கு யாருமில்லை... அதனால் தனியாகப் பேசிக் கொண்டு இருந்தேன்..."

"என்னைப் பைத்தியமாக்க நினைக்காதே... ஆண் குரல் என் காதில் விழுந்தது..."

"உங்கள் ஆட்கள் இத்தனை பேர் மிஷின் துப்பாக்கிகளோடு எல்லா திசையையும் கண்காணிக்கும் போது யார் இங்கே வரமுடியும்...?"

அவநம்பிக்கையோடு அவளைப் பார்த்தவன் - டெண்ட் முனையிலிருந்த அந்த பள்ளத்தைப் பார்த்துவிட்டு

நெருங்கி வந்து அவளை 'ரப்' என்று அறைந்தான்.

"என்ன... இது...?"

"என்னைக் கேட்டால்...?"

"யார் இங்கே வந்தது...?"

நூருன்னிசா அமைதியாய் இருக்க -

சென்ட்ரி வெளியே ஓடிப் போய் - டென்ட்டுக்கு வெளியே தோண்டப்பட்டிருந்த பள்ளத்தைப் பார்த்து விட்டு - தன் தோள் பட்டையில் கோர்க்கப்பட்ட விசிலை எடுத்து நீளமாய் ஊதினான்.

அடுத்த விநாடியே-

நான்கு திசைகளிலிருந்தும் தீவிரவாதிகள் பூட்ஸ் சப்தங்கள் இரைச்சலாய் கேட்க ஓடி வந்தார்கள். கொஞ்சம் தள்ளியிருந்த பிரதான கூடாரத்திலிருந்து கேட்டிங் பதட்டமாய் வெளிப்பட்டான்.

"என்ன... என்ன...?"

"ஸார்... டென்ட்டுக்கு வெளியே மணல் பறிக்கப்பட்டு உள்ளே யாரோ தலையை நீட்டி நூருன்னிசாவோடு பேசியிருக்கிறார்கள். அவளிடம் கேட்டால் இல்லையென்று சொல்கிறாள்..."

"வந்தவன் யாரோ இல்லை. நிச்சயமாய் அது கனில்தான்." சொல்லிக் கொண்டே கேட்டிங் டென்ட்டுக்குள் நுழைந்து நூருன்னிசாவுக்கு முன்பாய் வந்து நின்றான். அவள் அலட்சியமாய் உதட்டைச் சுழித்துக் கொண்டு நிற்க, கேட்டிங் அவளுடைய கன்னத்தைத் தொட்டு திருப்பினான்.

"நீ... ஒரு பாகிஸ்தானியப் பெண். ஒரு இந்தியனிடம் பரிவு காட்டுவது தேசத்துரோகம்."

"நான் இந்தியன், பாகிஸ்தானி என்று நிறம் பார்த்துக் கொண்டு உதவி செய்வது இல்லை. என் மனதுக்கு எது நியாயமாய் படுகிறதோ அதைச் செய்கிறேன். கனிலைக் காப்பாற்றுவது என் கடமை என்று நினைத்தேன். காப்பாற்றினேன். அவ்வளவுதான்..."

கேட்டிங் அவளுடைய தலைமுடியை ஆவேசமாய் பற்றி மூர்க்கமாய் நிமிர்த்திக்



கொண்டே கேட்டான்.

"இப்போது கனில் எங்கே...?"

"எனக்குத் தெரியாது. அவர் போகும்போது என்னிடம் சொல்லிக் கொண்டு போகவில்லை..."

"உனக்கு நிச்சயமாகத் தெரியும். பொய் சொல்கிறாய்..."

"எனக்குத் தெரியாது..."

"இப்படியெல்லாம் கேட்டால் நீ உண்மையைச் சொல்ல மாட்டாய். ஒரு பெண்ணான உன்னை எப்படிப் பேச வைப்பது என்கிற வித்தை எனக்குத் தெரியும்..." சொன்ன கேட்டிங் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தான்.

"ஜோன்ஸ்..."

ஒரு சோல்ஜர் ஓடி வந்தான்.

"இவளை டென்ட்டுக்கு வெளியே கொண்டு வந்து நிறுத்து."

நூருன்னிசா அந்த ஜோன்ஸால் முரட்டுத்தனமாய் இழுபட்டு டென்ட்டுக்கு வெளியே கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள்.

சுற்றிலும் தீவிரவாதிகள் துப்பாக்கிகளோடு வட்டம் போட்டு நின்றிருந்தார்கள்.

"ஜோன்ஸ்"

"ஸார்..."

"இவளுடைய உடைகளை ஒவ்வொன்றாய்க் கழற்று. பிறந்த கோலத்தில் நிற்கிற இவளை எல்லோருமாய் பார்த்து ரசிக்கட்டும்."

"எஸ்... ஸார்..."

ஜோன்ஸ் நூருன்னிசாவை நெருங்கி ஒரு கோணல் சிரிப்போடு அவளுடைய ஓவர் கோட்டைக் கழற்றி ஒரு பக்கமாய் வீசியெறிந்தான்.

சுற்றி நின்றிருந்த எல்லோரும் சிரித்தார்கள்.

கேட்டிங் சிகரெட் புகையை அவளுடைய

முகத்தில் ஊதினான். "இப்போதாவது சொல் பெண்ணே... சுனில் எங்கே?"

"தெரியாது..."

"உன் உடம்பில் இருக்கும் இரண்டாவது உடையை இப்போது நீ இழக்கப்போகிறாய்..."

நூருன்னிசா மௌனமாய் நிற்க - கேட்டிங் ஜோன்ஸுக்கு கண் காட்டினான்.

ஜோன்ஸ் நூருன்னிசா அணிந்திருந்த யூனிஃபார்ம் மேல் கையை வைத்தான்.

ஒவ்வொரு பட்டனாய் விடுவித்தான்.

பட்டன்கள் எல்லாம் விலகி யூனிஃபார்ம் சட்டை பிரிய - ஜாக்கெட் அணிந்த மார்புப் பகுதிக்குக் கீழே ஒரு பெல்ட் தெரிய - அதற்குள்ளே திணித்துக் கொண்டு ஆர்.டி.எக்ஸ். வெடிகுண்டுகள் நெருக்கியடித்தபடி தெரிந்தன.

ஜோன்ஸ் அதிர்ச்சியோடு பின்வாங்க -

எல்லோரும் உறைந்தார்கள்.

நூருன்னிசா புன்னகைத்தாள்.

"என்ன... எல்லோருக்கும் அதிர்ச்சியாய் இருக்கிறதா? இந்தக் காட்டுப் பகுதியை ஆக்ரமித்துக் கொண்ட உங்களைப் போன்ற வெளிநாட்டுத் தீவிரவாதிகளை அழித்து துவம்சம் பண்ணத்தான் இந்தக் காட்டுப்பகுதிக்கு வந்தேன். எந்த நிமிஷமும் உங்களுடைய கும்பலால் நான் மடக்கப்படலாம் என்று நினைத்து முன்னெச்சரிக்கையாக நான் ஒரு மனித வெடிகுண்டாக மாறினேன். இருபத்து நாலு மணி நேரமும் இந்தக் காட்டுப் பகுதியில் உலாவி வந்தேன். உங்களைக் கூண்டோடு பழி வாங்க நினைத்தேன். இப்போது அந்த நிமிஷம் வந்து விட்டது. என் தந்தையின் மரணத்துக்குக் காரணமான நீங்கள் எல்லோரும் இப்போது சதைத்துணுக்குகளாக சிதறப் போகிறீர்கள்."

நூருன்னிசா சொல்லிக் கொண்டே தன்



இடுப்பைத் தொட்டு தீப்பெட்டி சைஸில் இருந்த ரிமோட் கண்ட்ரோலை எடுத்துக் கொண்டாள்.

எல்லோரும் திகிலோடு பின்வாங்கி ஓட முயல-

நூருன்னிசா சிரித்தாள்.

"ஓடிப் பயனில்லை முட்டாள்களே...! என் கையில் இருக்கும் ரிமோட் கண்ட்ரோலை இயக்கினால் அரை சதுர கிலோ மீட்டர் தூரத்துக்கு எதுவுமே மிஞ்சாது. எல்லாமே சாம்பல்தான். இந்நேரம் சுனில் ரசாயனப் பவுடர் உள்ள அஸ்திக் கலசங்கள் இருக்கும் விமானத்தில் ஏறியிருப்பார். அந்த விமானம் வானத்தில் உயர்ந்ததும் உங்களுக்கெல்லாம் தகனக்கிரியை நடக்கும்."

கேட்டிங் கத்தினான்.

"உயிருக்கு பயந்து ஓடாதீர்கள்! முதலில் அந்த விமானத்தை தடுத்து நிறுத்துங்கள்..."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே-

பெரிய இரைச்சலோடு ஏ.என்.52 விமானத்தின் என்ஜின்கள் உறுமின. மேலே பரப்பி வைத்திருந்த செயற்கை இலை தழைகளை உதறிக் கொண்டு உருவாக்கப் பட்ட ரப்பர் ரன்வேயில் வழுக்கிக் கொண்டு பாய்ந்தது.

கேட்டிங் வெறி பிடித்தவன் போல் கத்தினான்.

"விமானத்தை சுட்டுத் தள்ளுங்கள்..."

அவனுடைய கத்தலுக்கு யாரும் கட்டுப் படாமல் உயிருக்குப் பயந்து எல்லோரும் ஓடிக்கொண்டிருக்க-

சுனிலின் விமானம் வானத்தில் தவ்வி ஏறி - உயர்ந்தது.

நூருன்னிசா மேலே உயரும் விமானத் தைப் பார்த்துக் கையசைத்துக் கொண்டே இன்னொரு கையால் ரிமோட் கண்ட்ரோல்

பட்டனை அழுத்தினான்.

"ட்ட்டடொமம்ம்ம்..."

நூருன்னிசாவின் உடல் நூற்றுக்கணக்கான துண்டுகளாய் சிதறி விழ - வெடிகுண்டுகள் அரை சதுர கிலோமீட்டர்க்கு பரவி - தீப்பிழம்புகளோடு பளீரென்று வெடித்து மரங்களைச் சாய்த்துக் கொண்டு எரிந்தது.

பற்றிக் கொண்ட நெருப்பு ஒவ்வொரு தீவிரவாதியையும் பசியோடு விழுங்க ஆரம்பித்தது.

வானத்தில்-

விமானத்தின் விண்ட் ஸ்கிரீன் வழியே கீழே பார்வையைப் போட்ட கனில் சிவப்பு நிற தீக்கோளங்களைப் பார்த்து கண்களில் நீர் கோத்தான்.

"நூருன்னிசா! என் பாகிஸ்தானிய சகோதரியே! உன் தியாகத்துக்கு என் வீர வணக்கம். நீ வாழ்ந்த திசையைப் பார்த்து என் வாழ்நாள் முழுவதும் வணங்கிக் கொண்டிருப்பேன்..."

ஏ.என்.52 விமானம் காற்றைக் கிழித்தபடி - இந்தியாவை நோக்கிப் பாதுகாப்பாய் பறந்து கொண்டிருக்க - கனிலின் கண்களில் மட்டும் நீர் விடாப்பிடியாய் பெருகிக் கொண்டிருந்தது.

**முற்றும்.**



## வாசகர் கடிதம்




'தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை, அண்டை மாநிலங்களான கர்நாடகாவும், கேரளாவும் தடுத்துநிறுத்துவது மகா கொடுமை. தமிழ்நாட்டுக்கு சாதகமாக உச்ச நீதிமன்றம் தருகிற தீர்ப்புகளைக் கூட அவர்கள் குப்பைத் தொட்டியில் தூக்கி வீசி விடுகிறார்கள்.' என்று கோயமுத்தூர் சீபேக்ஸ் மூலம் தெரியப்படுத்திய ராஜேஷ்குமாருக்கு நன்றிகள், நன்றிகள்!

- **எஸ். கருப்பசாமி, சத்தியமங்கலம்**

ஜீ.வே சார் மீடியாவில் கால் வைத்ததும், நகைச்சுவைக் காட்சிகளில் அவரது நடிப்பை ரசிக்க ஆவலாகக் காத்திருக்கிறோம்.

- **பி.குணாளன், பெங்களூர்.**

'விளக்கம் ப்ளீஸ் விவேக்' பகுதியில் வாசகர்கள் கேள்விக்கு ராஜேஷ்குமார் சார் தருகின்ற விளக்கங்கள் ஒவ்வொன்றும் பிரமிப்பூட்டுகின்றன. ராஜேஷ்குமார் சாரின் அகண்ட ஞானத்துக்குத் தலைவணங்குகிறோம்.

- **வி.மதிவதனி, சென்னை.**

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழமொழியை மறக்கக் கூடாது. தகுதிக்கு மீறி ஆசைப்படவும் கூடாது. அப்படி ஆசைப்பட்டால் வாழ்க்கையில் துயரங்களையும், அவமானங்களையும் மரணங்களையும் எதிர்கொள்ள நேரிடும் என்பதையே இனி இனி இழி! - சொர்க்கத்தின் புதிய முகவரி இரண்டு நாவல்களும் உணர்த்திச் சென்றன. பாராட்டுக்கள்.

- **விக்கிரமாதித்தன், ஜேடர்பாளையம்.**